
கல்கி

KALKI 16·10·83. 1·20




புலரும் இன்றைய
என் பொழுது
மகிழ்வாய்
மலருமே
பொங்கும்
மகிழ்வைக் கூட்டுமே
ம:.பத்லால்
துணிகள்
மட்டுமே
ம:.பத்லால் துணிமணிகள்
மென்மையானவை. உடலுக்கு இனிய
உணர்வைத் தருபவை. பாலியெஸ்டர்,
பாலியெஸ்டர் ப்ளெண்ட்ஸ், மற்றும்
காட்டன் துணிகளில் நித்தம்
நித்தம் புத்தம் புதிய படைப்புகள்.
அவற்றின் வண்ணங்கள்,
டிசைன்கள், மற்றும் வடிவமைப்புகள்
அனைத்தும் நாளும் பொழுதும்
நற்பொலிவூட்டி உங்கள் அழகுக்கு
அழகூட்டுகின்றன.
ம:.பத்லால்
:.பேப்ரிக்ஸ்
MF-120-TAM

திவான் முகமதுவுடன் சில நிமிடங்கள்



சென்ற பிப்ரவரி மாதம், தண்ணீர்ப் பஞ்சத்தால் சென்னை நகரமே வேறு இடத்தில் குடியேறி விடுமோ என்கிற பயம் இருந்தது. இப்போதோ எதிர்பார்த்ததை விட அதிக மழை பெய்து, நிலைமை சீரடைந்து வருகிறது. இடைப்பட்ட கால நெருக்கடியை எப்படிச் சமாளித்தார்கள்?

மெட்ரோ வாட்டர் நிர்வாக இயக்குனர் திரு. டி. கே. ஏ. திவான் முகமது கூறுகிறார்:

''1982—ஆம் ஆண்டுபருவமழை பொய்த்த போதே, ரெட்ஹில்ஸ் நீர் அளவு, நிலத்தடி நீர் இவைகளை வைத்துக் கணக்கிட்டு, ஒருநாள்விட்டு ஒருநாள்தான் தண்ணீர் விட வேண்டியிருக்கும் என்று தீர்மானித்து விட்டோம். புழலேரியில் குன்னக்குடி வயலின் வாசித்தது. எல்லா மதத்தினரும் செய்த பிரார்த்தனைகள், யாகங்கள் — இவை யாவும் தனிப்பட்ட நபர் நம்பிக்கைக்கு மதிப்பு தந்ததோடு, நிலைமை எத்தனை மோசமாக உள்ளது என்று பொது மக்கள் உணர்ந்து, ஓரளவு அவர்களைத் தயார்ப்படுத்தவும் உதவியது. 21.2.83 முதல் இரண்டு நாளைக்கு ஒரு தரம் தண்ணீர் விடுகிற நிலைமை வந்த போது, இயன்ற வரை பண்டிகைகளின் போது சிரமம் வராமல் பார்த்துக் கொண்டோம்.

''கம்ப்யூட்டர் ஸிஸ்டம் மூலம், குறிப்பிட்ட எண் லாரி குறிப்பிட்ட இடத்தில் இன்ன நேரத்தில் வரும் என்று முன் கூட்டியே தெரிவித்ததால், பொது மக்கள் ஏற்பாடுகள் செய்து தண்ணீரைச் சௌகரியமாகப் பிடித்துக் கொள்ள முடிந்தது. பொது மக்களும் நல்ல ஒத்துழைப்பு தந்தார்கள்.''

மழையை அதிகரித்து நீர் நிலைகளிலும் நிலத்தடியிலும் நீரை அதிகரிக்க, செயற்கை முறைகளைக் கையாள்கிறார்களல்லவா? அந்த வகைத் தொடர் ஆராய்ச்சியின் விளைவாக 'எவாபரோ மீட்டர்' என்கிற புதிய கருவியைப் புழலேரியில் நிறுவியிருக்கிறார்கள்.

நிறைய தண்ணீர் ஆவியாகிப் போய் விடுகிறது. வெயில் காலத்தில் இவ்வளவு, மழைக்காலத்தில் இவ்வளவு என்று இக்கருவி மூலம் துல்லியமாகக் கணக்கிட முடியும். வெயில் காலத்தில் நிறைய அளவு தண்ணீர் ஆவியாகிற வாய்ப்பு இருப்பதால், நிலத்தடியில் உள்ள நீர் கடலிலும் ஆறுகளிலும் ஊற்றுக் கண்கள் மூலம் வடிந்து போய் விடாதிருக்கத் தக்க முன் ஏற்பாடுகளைக் கவனிக்கலாம். இதனால் கூடுதலான அளவு தண்ணீரைச் சேமிக்க இயலும்.

இதெல்லாம், எதிர்காலத்தில் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டால், தீவிரமாகத் திட்டமிட்டுக் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள். இப்போது இல்லை. அக்டோபர் இரண்டாவது வாரத்திலிருந்து தினமும் தண்ணீர் விடுவார்கள் என்கிற செய்தி வந்திருக்கிறதே? சென்னை நகர வாசிகள் நல்ல முறையில் பொறுமையாக ஒத்துழைப்புத் தந்ததற்குப் பரிசு!

எதிர்காலத் திட்டம், இதே போன்ற நெருக்கடி வராமலிருக்க முன்னேற்பாடுகள் என்னென்ன?

''கிருஷ்ணா நதித் திட்டம் தவிர, நிலத்தடி நீரை அதிக அளவில் சேமிக்க ''induced recharge'' என்கிற முறையைப் பரிசோதனை செய்கிறோம். நிபுணர்கள் இதுகுறித்து ஆராய்ந்து வருகிறார்கள்.''

தூத்துக்குடியில் தன் சர்வீஸைத் துவங்கி மின் வாரியம், மாநகராட்சி, டான்ஸி போன்ற பல இடங்களில் பணிபுரிந்த திவான் முகமதுவுக்குச் சொந்த ஊர்: ராமநாதபுரத்தை சேர்ந்த இளையாத்தங்குடி. (தண்ணீர்ப் பஞ்சத்தை நன்கு உணர்ந்து அநுபவித்தவர் ஆதலால், நிலைமையை வெற்றிகரமாகச் சமாளித்தார் போலும்!)

—சாருகேசி, தமயந்தி

கவிஞர் சில நினைவுகள்

கவிஞர் கண்ணதாசனின் நினைவு நாள்: அக்டோபர்-17

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் சொந்தமாகத் திரைப்படம் எடுக்கத்தொடங்கியதிலிருந்து மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் —ராமமூர்த்திதான் அவரது ஆஸ்தான இசையமைப்பாளர்களாகஇருந்தனர். கவிஞர் அந்தக் குழுவில் உள்ள இசைக் கலைஞர் பலரிடத்திலும் உரிமையுடன் மனம் விட்டுப் பழகுவார். அவர்களும் கவிஞரிடம் மிக மரியாதையுடனும் பக்தியுடனும் நடந்துகொள்வர்.

அந்தக் குழுவைச் சேர்ந்த தபேலாக் கலைஞர் அனுமந்த் அவர்களிடம் கவிஞர் கேலியும் கிண்டலுமாகப் பேசுவார். ஆரம்ப காலத்தில் அனுமந்த், சுப்பராமன் இசைக் குழுவில் இருந்தபோதே அவருடன் பரிச்சயம் ஏற்பட்டிருந்தது கவிஞருக்கு. அனுமந்த் என்று அழைப்பதற்குப் பதிலாக அனுமாரு என்றுதான் அவரை அழைப்பார்!

இசைக் குழுவினருக்கு உடனடியாகப் பணம் தர மாட்டார் கவிஞர். அவர்களிடம் நெருங்கிப் பழகிய விசேஷமோ, வழக்கமான மறதியின் ஆக்கிரமிப்போ தெரியவில்லை. பணம் தரும் விஷயத்தில் மெத்தனமாகவே இருப்பார்.

இதுகுறித்து விஸ்வநாதனோ ராமமூர்த்தியோ கண்டு கொண்டதில்லை. ஆனால் தபேலாக் கலைஞர் அனுமந்த் மட்டும் அடிக்கடி கவிஞரிடம் பணத்தை நேரடியாகவே கேட்பார்.

சில நேரங்களில் பாடல் ஒத்திகை முடிந்ததும் கவிஞரை அழைத்து. ''அண்ணே, இங்கே கொஞ்சம் கேளுங்க'' என்று சொல்லியவாறு தபேலாவில்'தன்ன தன்ன ரு' என்று தத்தகாரத்தை வாசித்துக் காட்டுவார். நன்கு உற்றுக் கேட்டால், ''சம்பளத்தைத் தா!'' என்னும் வார்த்தைகள் ஒலிப்பது விளங்கும்.

உடனே கவிஞர் அதே தாளத்தில் ''சம்பள மில்லே போ'' என்று வார்த்தைகளைச் சொல்லி, ''இதையும் வாசித்துப் பார்'' என்பார். அதனைத் தபேலாவில் இசைத்துப் பார்த்தால் 'சம்பளத்தைத் தா' என்று வாசித்த போது ஏற்பட்ட ஒலியைப் போலவே கேட்கும்! நகைச்சுவை விருந்தும் அங்கே உருவாகும்!

* * *

கவிஞர் நடத்தி வந்த 'தென்றல்' வார இதழில் ஒரு கட்டுரை 'அரசியற் திருவிழா' என்ற தலைப்புடன் வெளியாகியிருந்தது.

அந்நாளில் திரை உலகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும் 'தென்றல்' இலவசமாக அனுப்பப்பட்டது.

ஒருநாள் மாலை எம்.ஜி.ஆர். வீட்டுக்குக் கவிஞரும் நானும் சென்றோம். கவிஞரைக் கண்டவுடன் எம்.ஜி. சக்கரபாணி அவர்கள் ''ஓய், கவிஞரே! உம்ம பத்திரிகையிலே ஒரு பிழை இருக்குதய்யா!'' என்றார்.

உடனே கவிஞர் ''நீர் என்ன பிழை கண்டீர்?'' என்று கேட்டார்.

''அரசியற் திருவிழா என்று ஒருதலைப்பு போட்டிருக்கிறீரே— அதைத்தான் சொல்றேன்: 'அரசியல் திருவிழா' அப்படீன்னு போட்டிருக்கணும். அல்லது புணர்ச்சி விதிப்படி போட நெனச்சா 'அரசியற்திருவிழா' அப்படீன்னு போட்டிருக்கணும். ரெண்டையும் விட்டுட்டு 'அரசியற் திருவிழா' அப்படீன்னு போட்டிருக்கிறீரே, இது பிழையில்லையா?''

எம். ஜி. சி. அவர்களின் கேள்வியில், தமிழ் இலக்கணப் புலமை மின்னியது. கவிஞர் அதனைக் கண்டு வியந்தார்.

''உண்மைதான் அய்யா! தவறுதான்! இது எப்படி நேர்ந்ததுன்னே தெரியவில்லே! கம்பாசிட்டர் செய்தாரா, இல்லே எங்க சப் எடிட்டர்கள் செய்தாங்களான்னு தெரியலே எப்படி இருந்தாலும் அந்தத் தலைப்பு தவறுதான்!'' என்றார் பெருந்தன்மையோடு.

—தமிழ்ப்பித்தன்

கவிஞரும் மெல்லிசை மன்னர் விஸ்வநாதனும்



மால்டோவா சீரணி—
அவர்களது குறும்புகள் வெகு நவினம்
அதை நீங்கள் எண்ணுதல் வெகு கடினம்!







குழந்தைகளுக்கு அவசியத் தேவை ஆரோக்கியம், பலம் மற்றும் சக்தி. மால்டோவா அவர்களுக்கு அளிப்பதுவும் அவையே! பொன் வண்ண கோதுமை, பார்லி, தூய பால், செழுமையான கோக்கோ சர்க்கரை இவற்றின் சங்கமமான மால்டோவா, பாலுக்குச் சுவை கூட்டி பன் மடங்கு பலனையும் அளிப்பது.

சூரிய வெப்பத்தால் முதிர்ந்த கோதுமை, பார்லி மால்ட்

பஞ்சாபிலிருந்து வரும் கோதுமையும் பார்லியும் மால்டோவா தொழிற்சாலையில் போஷாக்குத் தரும் மால்ட்டாக மாறுகின்றன. அவசியமான தாது உப்புகளும் வைட்டமின் Bயும் நிறைந்த, நவீன தயாரிப்பு முறையில் உருவான, மால்டோவா அதன் சத்துக்கள் உடலில் எளிதில் கலந்துவிடும் பானமாகிறது.



தூய, முழுமையான பால்



எங்கள் பால் சேகரிக்கும் நிலையங்களில் மால்டோவா தயாரிக்கப் பயன்படும் பால் 100% தூய்மையானது. 100% போஷாக்கு நிறைந்தது.

சுவை கூட்டும் கோக்கோ

மால்டோவாவில் தரத்திலுயர்ந்த வெளிநாட்டுக் கோக்கோ சேர்கிறது. அதன் சீரிய சுவையும், போஷாக்கும் உங்களுக்குப் புத்துணர்ச்சியளித்து இன்பப் பாறச் செய்கிறது.

சக்தி தரும் சர்க்கரை

உயர்தரமான வெண்மையான சர்க்கரை சேர்ந்தது. மால்டோவா... தேர்ந்தெடுத்த இன்னமுதம்... சின்னக் குழந்தைகளுக்கு அதிகச் சக்தி தரத் தேவையான ஆமுதம்.

வைட்டமின்களின் விசேஷச் சேர்க்கை

புரதம், கார்போஹைடிரேட்டுகள், வைட்டமின்கள், தாது உப்புக்கள் அனைத்தும் இணைந்த ஈடிணையற்ற படைப்பு மால்டோவா. வைட்டமின் A, நயாசின், வைட்டமின் B_1, வைட்டமின் D_2 இவற்றின் விசேஷச் சேர்க்கை கூடியது. செயற்கைச் சுவையேதுவும் கிடையாது.



JIL ஜகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
Monde உலகத் தரத்தேர்வில் தங்கமெடல் பெற்றது.
1981, 1982.

வைட்டமின்கள் கூடிய மால்டோவா: ஆரோக்கியம், பலம் மற்றும் சக்திக்கு

SIMOES/JIL/2/83 TAM

100 முதல்தர வெற்றி!

நூறு முதல்தரமான (கிளாஸிக்) குதிரைப் பந்தயங்களில் வெற்றி பெற்றவர் என்ற பெருமை, உலகிலேயே இதுவரை ஒரே ஒருவருக்குத்தான் கிடைத்திருக்கிறது. அவரது பெயர் கின்னஸ் புக் ஆஃப் வேர்ல்ட் ரெகார்டில் பதிவாகப் போகிறது. பதினேழு ஆண்டுகளில் இந்தச் சாதனையை நிகழ்த்திய அந்தப் பெருமைக்கு உரியவர் ஒரு தமிழர். அவர் பெயர் திரு எம். ஏ. எம். ராமசாமி.

1966ல் இவருக்கு முதல் வெற்றியை வாங்கித்தந்தது ஸில்வர் ஜெட் என்ற குதிரை. 83ல் மைசூரில் க்வீன் ஆஃப் த ஹில்ஸ்.

ட்ரெயினர் — ஜாக்கி இவர்களது பங்கு என்ன?

குதிரைகளை ஓட்டத்திற்குப் பழக்குபவர் ட்ரெயினர். ஒரு குழந்தையை வளர்ப்பது போல வளர்த்து,விளையாட்டுவீரர் ஒருவரைப் பந்தயத்துக்குத் தயார் செய்வது போலக் குதிரையைத் தயார் செய்ய வேண்டும். மணலிலும், புல் வெளியிலும் அதை ஓடவைக்கப் பயிற்சி கொடுக்க வேண்டும். காலையில் மழையானாலும் வெயிலானாலும் சளைக்காமல் குதிரைக்குப் பயிற்சி அளிக்கிறார் ட்ரெயினர். குதிரைகளைப் பழக்குவதற்கு முதலில் அவற்றை நேசிக்கும் மனப்பான்மை இருக்க வேண்டும். குதிரைகள் மற்ற எல்லாப் பிராணிகளையும் விட அதிக சென்ஸிடிவ்.

குதிரையைப் பந்தயங்களில் ஓட்டுகிறவர் ஜாக்கி. (இவர் எடை குறைந்தவராக இருக்க வேண்டும்!) குதிரையைப் பழக்குகிற டிரெயினருக்கும், ஓட்டுகிற ஜாக்கிக்கும் நல்ல தொடர்பு இருப்பது அவசியம்.


ஒரு பந்தயக் குதிரைக்கு மாதாந்திரச் செலவு எவ்வளவு ஆகும்?

சுமார் 1600 ரூபாய் ஆகும். குதிரையின் ஆகாரச் செலவுடன், குதிரையைப் பார்த்துக் கொள்ளும் குதிரைக்காரரின் சம்பளத்தையும் சேர்த்து.

குதிரையின் உரிமையாளருக்குப் பணம் எப்படிக் கிடைக்கிறது?

ரேஸ் கிளப் அறிவிக்கும் பரிசுப் பணமான 'ஸ்டேக் மனி' — முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவதாக வரும் குதிரைகளுக்கு. இது தவிர, பலவித மான உதவித் தொகைகள்.

பந்தயம் இல்லாதபோது, குதிரைக் காட்சிகளுக்கும், ஹார்ஸ் போலோவுக்கும் (சென்னையிலும் தற்போது விளையாடப் படுகிறது) குதிரைகள் பயன்படுகின்றன. சென்னையில்



இருக்கிற ஈக்வைன் ஹாஸ்பிடல் ஆசியாவிலேயே மிக உயர்வானது. நானூற்றைம்பது குதிரைகள் இங்கே கவனிக்கப்படுகின்றன.

ஜாக்கிக்கு எவ்வளவு கிடைக்கும்?

பங்கெடுக்கும் ஒவ்வொரு ஓட்டத்திற்கும் 200 ரூபாய்; தவிர ஏழரை சதவிதம் பரிசுப் பணத்தில். ட்ரெயினருக்குப் பரிசுப் பணத்தில் பத்து சதவீதம்.

குதிரைப் பந்தயங்கள் தேவைதானா?

மாநில அரசுகள் எல்லாம் லாட்டரி நடத்தும் போது வலுவிழந்த கேள்வி. உலகம் பூராவும் உள்ள ஒரு ஸ்போர்ட் இது. மனிதனின் சூதாட்ட உணர்வு இருக்கிற வரையில், அவ்வப்போது போட்டிகளில் பணத்தைச் செலவிடுவான். கிரிக்கெட்டில் பந்தயம் கட்டுவான். இல்லையென்றால் சீட்டாட்டத்தில்! ரேஸ் கிளப்பினால் அரசுக்கு வருமானம் இருக்கிறதே!

அனுமதியற்ற 'பெட்டிங்' நிறுத்தப்பட வேண்டும். அது ரேஸ் கிளப்புக்குச் சேராமல் தனியார் கைக்குத்தான் போகிறது. ரேஸ் கிளப்பே 'பெட்டிங் ஷாப்'களைத் திறக்க அனுமதி அளிக்க வேண்டும். லைசென்ஸ் பெற்ற 'பெட்டிங் ஷாப்'பை அரசே அனுமதித்தால் அரசுக்கு இன்னும் நிறைய வருமானம் வரும்.

தகவல்: சாருகேசி, தமயந்தி

ஜாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு கேட்கும் 'சிறுபான்மை' வகுப்பினரின் உரிமைக் குரல் இதோ:

பிற்படுத்தப்பட்டோர்	54 சதம்
முஸ்லீம்கள்:	20 சதம்
தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினர்:	40 சதம்
வன்னியர்	20 சதம்
யாதவர்	10 சதம்
	144 சதம்

நூறு சதவிகிதத்துக்கு மேல் போய் விட்டது. அது கிடக்கட்டும்: ''பெரும்பான்மை''யினராகிய மேல் சாதியினருக்கு எத்தனை சதவிகிதம்? —சிவசக்தி





ஆர். எஸ். எஸ். இயக்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ள இந்தப் படம், அஸ்ஸாம் மாநில நிலைமையைத் தெளிவாகச் சித்திரிக்கிறது. பார்த்தவுடனேயே கண்ணீர் பொங்கி வந்தது.

'SAVE ASSAM TODAY TO SAVE INDIA TOMORROW'

என்ற வாசகம் நெஞ்சைக் கிழித்து. ரணகளமாக்கியது.

—பாரதி ரங்கன்


ஆதாயமில்லாமல்...

''மலை உச்சியில் ஆண்டவன். அறுநூறு படிகள். மிகவும் சிரமப்பட்டு, அவ்வளவு படிக்கட்டுகளை ஏறி, கோவிலுக்குள் நுழைந்து, ஆண்டவனைப் பிரார்த்தித்து, பல ரூபாய்களில் காணிக்கை செலுத்துகிறான் மனிதன். ஏன்? அதனால் ஆதாயம் இருக்கிறது என்று நம்புகிறான். சிலபல சமயங்களில் கோரிய காரியமும் நிறைவேறி விடுகிறது. ஒன்றும் லாபமில்லாவிட்டால் உடலை வருத்தி மலை மேல் ஏன் மனிதன் ஏறுகிறான்? பலனை எதிர்பாராத பக்தி என்பது உலகில் இடையிலே கிடையாது!''


சொன்னவர்: குன்றக்குடி அடிகளார்

—சிவசக்தி









வலேசாவுக்கு சமமான நோபல் பரிசு
தொழிலாளர் சமுதாயம்
கர்நாடக அரசு
அதிக அதிகாரம் மாநிலங்களுக்கு... குறைந்த அதிகாரம் ஆளுனர்க்கு.. கடவுளைத் திருப்பிக் கேட்காதே!...
தேசிய ஜனநாயக கூட்டணி
ஸ்ரீநகரில் எதிர்க்கட்சிகளின் மகாநாடு

கல்கி



1983 அக்டோபர் 16
ருத்ரோத்காரி புரட்டாசி 30
மலர் : 42 இதழ் : 11

உணர்ச்சி உறங்கட்டும், அறிவு விழிக்கட்டும்!

இலங்கையில் துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட கொந்தளிப்பு அடங்கி இருக்கும் இந்தச் சமயத்தில் இரு தரப்பினருமே லாப நஷ்டக் கணக்குகளைப் போட்டுப் பார்த்தால் அனைவரும் அறிந்த, ஆனால் உணர்ச்சிக் கொந்தளிப்பில் மறந்துபோன ஒரு மகத்தான உண்மை மறுபடியும் வலியுறுத்தப்படுவதைக் காண்பார்கள். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பதே அந்தப் பேருண்மை.

ஸ்ரீலங்காவின் நிதி அமைச்சர், இலங்கையின் பொருளாதாரம் இந்தக் கொந்தளிப்பினால் ஐந்து ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுவிட்டதாகக் கூறியது கொஞ்சமும் மிகையல்ல. குறைவான மதிப்பீடு என்றே கருதலாம். இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு தமிழர்களே என்பதை மறந்து சிங்களவர் தமிழரைத் தாக்கியபோது தங்களுக்குத் தாங்களே பெரும் துன்பம் விளைவித்துக் கொண்டார்கள். சிங்களவரின் அட்டூழியம் காரணமாக 3500 தொழில்-வர்த்தக நிறுவனங்கள் அழிந்தன என்று அதிகாரபூர்வமான அறிக்கையே கூறுகிறது. தமிழ்த் தலைவர்களின் கூற்றுப்படி, தமிழர்களின் 5,000 கடைகளும், 25,000 சிறிய, நடுத்தரத் தொழிலகங்களும் நாசமாயின. தவிர நூற்பு, நெசவு ஆலைகள் உள்பட பெரிய தொழிலகங்கள் சுமார் 100 அழிந்துவிட்டன.

தேயிலைத் தொழிலாளர்களை அரசு காக்க முயன்றும் தோல்வியே கண்டது. இதனால் தேயிலைத் தோட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே ஈழத்தில் கடுமையான வறட்சி நிலை. அத்துடன் இந்தச் சோதனையும் சேர்ந்து கொண்டிருக்கிறது. எனவே ஈழத்தின் மிக முக்கிய வர்த்தகப் பண்டமாகிய தேயிலையின் ஏற்றுமதி பெருமளவு குறைந்து போகும். தேயிலையை அடுத்து மிக அதிக அளவில் அந்நியச் செலாவணி ஈட்டித்தருவது அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை. ஆனால் இப்போது அதுவும் பாதியாகக் குறைந்துவிட்டது. சென்ற ஆண்டு ஆகஸ்டின் இரண்டாம் வாரத்தில் 33,000 அயல் தேசத்தவர் வந்தனர் எனில் இந்த ஆண்டு அதே கால கட்டத்தில் 15,000 பேர்களே வந்தனர். பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் இரண்டும் பூதாகாரமாக வடிவெடுத்துள்ளன. தமிழர்கள் மறுபடியும் தொழிலகங்களில் ஊழியம் செய்யத் தயங்குவார்கள். சிங்களவரோ கடின வேலை செய்து பழகாதவர்கள். இவர்களுக்குத் தேயிலைத் தோட்டங்களையோ தொழிலகங்களையோ நிர்வகிப்பது ரொம்பக் கஷ்டமாகத் தெரியும்.

கலவரங்களை அடுத்து விலைவாசிகள் பயங்கரமாக ஏறியுள்ளன. அரிசி கிலோ 12 ரூபாய், ஒரு தேங்காய் ஆறு ரூபாய், மீன் கிலோ நானூறு ரூபாய்! இனி விலைவாசிகள் குறைந்தாலும் நீண்ட காலத்துக்குச் சராசரி மனிதனுக்கு எட்டாத நிலையிலேயே இருக்கும்.

85 கோடி ரூபாய் மதிப்புள்ள தமிழரின் சொத்துக்கள் அழிக்கப்பட்டதாக அதிகாரபூர்வமான கணிப்பு. ஆனால் அமிர்தலிங்கத்தின் கணிப்புப்படி ரூ. 400 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் நாசமடைந்துள்ளன. பண்டங்களை நாடெங்கும் விநியோகிக்கிற பெரும் பணியைத் தமிழரே ஏற்றிருந்தனர். தமிழர்களின் கடைகள் மூலம்தான் 90 சதம் சில்லறை வியாபாரம் நடந்தது. கலவரங்களின் விளைவாகக் கடைகள் தரைமட்டமானதால் இப்போது சில்லறை வியாபாரத்தில் இருபது சதம்தான் தமிழரிடம் உள்ளது. உருவாகியுள்ள வெற்றிடத்தைச் சிங்களவரால் இட்டு நிரப்பவும் முடியவில்லை.

ஆக, தமிழர் மீது நடத்திய தாக்குதலால் சிங்களவர் தங்கள் பொருளாதாரத்தைத் தாங்களே அழித்துக் கொண்டனர் எனலாம். இந்தப் பரிதாப நிலையிலிருந்து அந்நாடு மீண்டு வந்து உலகம் வியக்கும் வண்ணம் பொருளாதாரச் செழிப்பை அடைய வேண்டும் என்பதே நம் பிரார்த்தனை. வன்முறைகளால் ஆவது ஒன்றுமில்லை என்பதையும் சம உரிமைகள் பெற்ற சகோதரராய் ஒருவரை யொருவர் மதித்து வாழ்வது அனைவருக்குமே நல்லது என்பதையும் இரு தரப்பினருமே புரிந்து கொண்டு செயல்படட்டும்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

அத்தியாயம் 40

"அதென்னமோ இன்னிக்கு மத்தியானத்திலேர்ந்து நெஞ்சு கமறுது எடுத்துக்கினே இருந்திச்சு. என்னு இது தெரியலியே... புத்தூர் அக்கா வருமா வரப்போற பார்ட்டி நெனைச்சுக்குதான்னு ஒரே யோசனை. நடால்னு நீ வந்து நிக்கிறே. கார்லேந்து எறங்கினவுடனே தெரிஞ்சு போச்சு. என்னைத் தெரில ஒனக்கு? புத்தூர் கேட்டாண்ட...."

"தெரிது வசந்தா...."

"ஐயோ... எம்பேரு கூட நெனைப்பு வச்சுக்கினுருக்கியே. எனக்குத்தான் உம்பேரு மறந்து போச்சு. அன்னிக்கு மல்லிகான்னு ஒரு பொண்ணு அடிபட்டுப் போச்சுன்னு ஓடினேனே, நெனைப்பு இருக்கா... அது செத்துப் போச்சு. அது செத்ததுக்குத் துட்டுக் குடுத்தாங்க கோர்ட்ல."

"தெரியும் வசந்தா."

"அட தெரியுமா? எப்டி எப்டி? ஏய் வெங்குலச்சுமி போய் அந்த டிரைவரை மடக்கி இட்டாந்துரு. தேவருகிட்ட நம்ம கணக்குல முட்டப் பரோட்டா போடச் சொல்லு. முட்ட சாப்டுவியா.., வெங்குலச்சுமி! முட்ட வாணும். வெறும் பரோட்டா சொல்லு. எப்டீ தெரியும் ஒனக்கு? இன்னொரு தபா வந்து தேடினியா?"

"இல்லே வசந்தா...அது ராவுத்தர் வண்டி. ராவுத்தர் எனக்கு ஸ்நேகிதம்தான்."

"பாய் வண்டிதான். பாய்தான் முன்ன நின்னு கம்பெனில பேசித் துட்டு வாங்கிக் குடுத்தாரு."

"நல்லா இருக்கியா வசந்தா?"

"ஐயோ... நல்லா இருக்கேன் தொரை. உம் பேருதான் மறந்து போச்சு. ஒம் புண்ணியத்துல நீ தொட்டுத் தலே தடவி நல்லாஇருன்னு சொன்னியே. அன்னிலேர்ந்து நல்லா இருக்கேன் தொரை. கொஞ்சம் இரு. யாருடி அவ மரத்துக்குப் பின்னுடி? ஊட்டுக்குப் போய் பெட்சீட் எடுத்தா போ."

"ஊட்டுக்குப் பார்ட்டி போயிருக்குக்கா."

"கதவைத் தொறந்து எடுத்தாடீ."

"ச்சு... யாரையும் தொந்தரவு பண்ணாத வசந்தா... புல்—தரைதான்... இதுலயே உக்காரலாம்."

"ஐயோ... தரைல வாணும். இவளே பெரியலச்சுமி. மாங்கா மரத்துல ஒரு பாவாடை சுருட்டி வச்சிருக்கு பாரு. அத எடுத்தா... கொண்டா இப்டி. இந்தா இதுல உக்காரு தொரை." சிகப்புச் சாயம் போன பாவாடை தரையில் விரிந்தது.

"வேணும் வசந்தா. இன்னொருத்தர் துணியைப் பாழ் பண்ணுவானேன். புல் தரை பரவாயில்லே...." விரல் நுனியில் துணியை அப்புறப்படுத்தி விட்டுத் தரையில் உட்கார்ந்தான்.

"என்னதுதான். தொவச்சுக் காயப் போட்டதுதான்."

"இருக்கட்டும். ஆத்தினி துட்டு வாங்கியும் இதே கதைதானு...ஒரு பொட்டிக் கடை வச்சுக்கக் கூடாதா? டீக் கடை திறக்கக் கூடாதா? என்ன பண்ணினே அத்தினி துட்டையும்?"

"ஊடு வாங்கினேன். கல்லு ஊடு. பொம்பளே கடை போட்டா பொறுக்கிக் கூட்டம்தான் சுத்தும். கடனுக்குத் துன்னுட்டுப் போயிடும்."

"இங்க மட்டும் கடன் சொல்ல மாட்டானு?"

"நூத்துக்குத் தொண்ணூறு பேரு கடன் சொல்ல மாட்டான். ஐயோ வவுறு நோவுதேன்னு சொன்னு, கூட ரெண்டு ரூபா குடுத்துட்டுப் போய்டுவான்."

"இது சிரமம் இல்லையா? போலீஸ், குடிகாரன்...."

"டீக்கடை தொறந்தாலும் இதே தொந்தரவுதான். எனக்கு நெளிவு சுளிவு தெரிஞ்ச தொழிலு. கூட பத்துப் பொண்ணுகளைக் கூட்டிட்டு எறங்கிட்டேன். அத்தனைக்கும் நம்ம ஊட்லதான் சாப்பாடு, துணி மணி எல்லாம். ஊட்டுக்கு வர்றியா?"

"இருக்கட்டும். நீ மாறியிருப்பேன்னு நெனைச்சேன்."

"எதை நம்பி மாறிட முடியும்?"

"கல்யாணம் பண்ணிக்க வேணுமா... குழந்தை பெத்துக்க வேணுமா?"

"வேணும் சாமி, வேணும். கல்யாணம் கட்டி, இருக்கிற துட்டை அவன் சலிச்சு அழிக்கிறதுக்கா...? கெட்டுப் போன பொம்பளேஒருஆம்பளையை நம்பி இருக்கிறதொழிலே வுட முடியுமா?"

"ஒரு நல்ல ஆம்பிளே கூடவா இல்லே உன்னைச் சுத்தி?"

"யாரு நல்ல ஆம்பிளேன்னு யாரு கண்டு பிடிக்கிறது? எப்ப நல்ல ஆம்பிளேன்னு எதச் சொல்றது? நான் ஆம்பளய நம்பறது இருக்கட்டும். அவன் என்னே நம்ப வேணுமா?"

"அதனால...."

"ஊடு, கொஞ்சம் நிலம், தொழிலு—அது போதும். கூட உதவிக்குப் பொம்பளேங்க உண்டு. நல்லாத்தான் இருக்கேன் தொரை. ஒரு கொறையும் இல்ல."


"வேதனையா இருக்கு வசந்தா."

"இதுல ஒனக்கு ஏன் வேதனே?"

இலங்கை மாணவரின் சாதனை

இலங்கையைச் சேர்ந்த 17 வயது 'கபில குமார சிங்கே' என்ற மாணவர் புத்த மத கலாச்சாரம் பற்றித் தொடர்ந்து 173 மணி நேரம் பேசிச் சாதனை புரிந்துள்ளார். இதற்கு முன்பு இங்கிலாந்தைச் சேர்ந்த 'ரேமாண்ட்' என்பவர் 150 மணி நேரம் தொடர்ந்து பேசிச் சாதனை புரிந்திருக்கிறார்.

—இரணியல் குமாரசாமி பி. எஸ்ஸி.
அரசினர் கலைக்கல்லூரி, நந்தனம்.




இரும்பு குதிரைகள்
பாலகுமாரன்
ம.செ

''அடங்கி இருக்கணுமேன்னு தோணுத: அப்படி இருக்கப் புடிக்கலேயா உனக்கு?''

''ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொண்ணு புடிக்கும். ஒனக்கு வூட்டுக்கு அடங்கி இருக்கப் புடிக்கும். உங்க வூட்டு அம்மாவுக்கு ஒனக்கு அடங்கி இருக்கப் புடிக்கும். ஆமா... சினிமா புடிக்கப் போவணும்னு சொன்னியே... இன்னமும் ஆபீஸ் வேலைதானா?''

''ப்ச்சு. முடியலே. போகத் தைரியம் இல்லே.''

''எனக்குத் தெரியும், ஒன்னால முடியாதுன்னு. ஒனக்கு ஆபீஸ் வேலைய விட முடியாது. எனக்கு என் தொழிலே விட முடியாது.''

''ஆனா சினிமாவுக்குள்ள நுழையணும்னு ஆசை இன்னும் இருக்கு வசந்தா.''

''எனக்கில்லே. கல்யாணம் கட்டிக்கிற ஆசை இல்லே. ஒன்னிய மாதிரி ஆள் கெடைச்சாக் கூடச் சேர்ந்து கொஞ்ச நாள் இருப்பேனே கண்டி சொந்தம் கொண்டாட மாட்டேன்.''

''ஏன் அப்படி?''

''மனசுல அப்படி விளுந்துபோச்சுதொரை. நீ என்னை மெறிச்சாலும் உங்க வூட்டு அம்மா என்னிய மாதிரி ஆவாது. என்னே எத்தினி வளைச்சாலும் ஒங்க எடத்துக்கு நிமிர முடியாது.''

''ஆம்பிளே மேலே அத்தனே வெறுப்பு சின்ன வயசுலேயே வந்துடுச்சா?''

''வெறுப்பு யார் பேர்லேயும் இல்லே. ஆம்பளே வேற ஜனம். பொம்பளே வேற ஜனம். அதும் புத்தி இதுக்கு இல்லே. இதும் புத்தி அதுக்குத் தெரியலே. அப்புறம் கட்டிப் போட்டுக் குடித்தனம் பண்ணினா எப்படி? ஒண்ணு, கவுறு நஞ்சு போவும். இல்லே... கட்டின எடத்துல காப்புக் காய்ச்சுப் போகும்.''

''ஊர்ல இத்தினி பேர் குடித்தனம் நடத்துறாங்களே எப்படி...''

''கவுறு அறுமா கை அறுமான்னுதான்.''

''எல்லாருமேவா?''

''எனக்குத் தெரிஞ்சவரை அப்படித்தான். பரோட்டா எடுத்துக்க. இந்தாடி. தண்ணி டம்ளரைக் கொண்டா இப்படி. தூசி விளுந்துடப் போவுது'' தண்ணீர்க் குவளையை வாங்கிச் சேலைத் தலைப்பால் போர்த்திக் கைக்குள் வைத்துக் கொண்டாள். விக்கியபோது எடுத்து நீட்டினாள்.

புதையலைத் தேடி: போட்டி முடிவு

சரியான விடை:

(1) டிரான்ஸிஸ்டர் ரேடியோ
(2) கைக்கடிகாரம்
(3) பிரீஃப்கேஸ்
(4) வெள்ளிக் குத்துவிளக்கு
(5) எலெக்ட்ரிக் குக்கர்
(6) சில்க் புடவை
(7) மின்சார இஸ்திரிப் பெட்டி
(8) மின் விசிறி

கூடக் குறைய இல்லாமல் சரியாக எட்டுப் பொருள்களையும் பட்டியலிட்டு அவற்றுள் பரிசாக அளிக்கப்படவிருக்கிற **எலெக்ட்ரிக் குக்கர்** என்பதையும் அடிக்கோடிட்டவர்கள் 68 பேர்.

இவர்களுள் குலுக்கல் முறையில் வெற்றி பெற்றவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்:

கே. சித்ரா,
D 5/5, பி.எச்.இ.எல். டவுன்ஷிப்
திருச்சி-14.

''அன்னிக்கு ஒரு பாட்டுப் பாடினியே சினிமாப் பாட்டு... என்னது... அப்பால அந்தப் படம் பாத்தேன். அன்னிக்கு முழுக்க ஒன் நெனைப்புத்தான். என்ன பாட்டு அது?''

''பனி விழும் மலர் வனம்....''

''பாடு....பாடு....''

''இப்பவா... நான் பாடற மாதிரி இல்லம்மா.''

''ஏன்? என்ன சமாச்சாரம்?''

''சுத்தி ஒரே முள்ளுச் செடியா இருக்கு... எப்படி பனி விழும் மலர் வனம்னு பாடறது?''

''என்னைச் சொல்றயா?''

''எல்லாரையும்தான்.''

''எல்லாரையும்னா?''

''எல்லாப் பொம்பளைங்களையும்தான்.''

''அட்ரா சக்கை... இடிஞ்சு போயிட்டாப்பல இருக்கு.''

''உள்ளுக்குள்ள மொள்ளமொள்ள இடிஞ்சுதான் போறேன். ஒவ்வொரு ஆளா பார்க்கப் பார்க்க இடிஞ்சுதான் போறேன்.''

''எனக்கு இப்ப ஒன்னைத் தோன்லசாச்சுக் கிட்டுப்பாட்டுப் பாடணும் போல இருக்கு. நான் ஒன்னு சொல்லட்டுமா? கஷ்டம், சந்தோஷம் கைபோடற வட்டம் வரைக்கும்தான். கண்ணு பாக்கற வரைதான். எந்திரிச்சு நின்னு தொலைவுல பாத்தா அங்க இருளோன்னு இருக்கும். அங்கேர்ந்து இங்க பாத்தா இங்க இருளோன்னு இருக்கும். எல்லா எடத்துலயும் இருட்டும் இருக்கும்; வெளிச்சமும் இருக்கும். வெளிச்சத்துக்குத் தகுந்தாப்பல கண்ணைக் கசக்கிக்கிறதும், இருட்டுக்குத் தகுந்தாப்பல பழகிப் பாக்கறதும்தான் நல்லது. நான் கஷ்டப்படறதா நீ நெனைக்கக்கறதும் நீ கஷ்டப்படறதா நான் நெனைக்கக்கறதும் தொலைவா பாத்துதான். எல்லாரும் இங்க நல்லாத்தான் இருக்காங்க. அவங்க அவங்க கஷ்டம், அவங்கவங்க சந்தோஷம்னு இருக்காங்க. நீ எல்லாத்திலியும்

''நீங்க ஏன் ரசிகர்களுக்கு ஆட்டோகிராப் போடுவதில்லே?''
நடிகை: ''நான் டாக்ஸி கிராப் தான் போடுவேன்.''
—சீழை அ. கதிர்வேல்





போட்டுப் பொரட்டிக்கிற. புரியாத முழிக்கிற. ஒனக்கு ஒன்னோட கஷ்டமும் தெரியல, ஊரார் சுகமும் புரியல. போவட்டும் வுடு. இன்னிக்கு என்கூட இருந்துட்டுப் போ.''

''ச்சே சே... என்னால இப்படியெல்லாம் இருக்க முடியாது.''

''எனக்கோசரம் இரேன்.''

''உனக்கோசரம்னா?''

''எனக்கோசரம் பாட்டுப்பாடேன்.அப்பப் பாடினியே அந்தப் பாட்டுப் பாடு. நான் தவறுததான் டிரைவரும் கிளீனரும் போதை வர ஆளுமாப் போவுது. பாட்டுப் பாடற ஆளா நீ ஒருத்தனாவது என்கூட இருந்துட்டுப் போயேன்.''

''எனக்கு வாடகை உண்டா?''

''அசிங்கம். வாயைக் கழுவு! வாடகைக்குப் பாடற ஆளுன்னு எட்டி நின்னு துட்டு வீச மாட்டேனா? துட்டா பெரிசு. நான் படுத்துக்கத் துட்டு வாங்கறேன்னுதானே துப்புற மாதிரி கேட்டுட்டே? ஆம்பளை புத்தி. அசிங்க புத்தி. கண்ணுல முள்ளை வச்சிக்கினுதான் குடித்தனம் பண்றியா? இதுல உன் குடித்தனம் பத்திப் பெருமை வேறயா! ஒன்னிய மாதிரி ஆனே பொம்பளையைப் புரிஞ்சுக்கலையே. போதைல வரவனா புரிஞ்சுக்கிடுவான்? ஆனா ஒரு விதத்தில அவன் தேவலாம். வந்தமா போனமான்னு கிளம்பிடுவான். நீங்க நின்னு நெஞ்சுல மெறிச்சுட்டு நடுக் காட்ல தனியா வுட்டுட்டுப் போயிடுவீங்க.''

சுளீரென்று விஸ்வநாதனின் முதுகுவலியில் செருகி நிமிர்ந்தது. லெண்டி பார்க்கில் தனியே விட்டுப் போன காயத்ரி நினைப்புப் பொங்கிற்று. இந்த இடத்தை விட்டு எழுந்து ஓடிவிட வேண்டும் என்று தோன்றியது. எங்கே ஓடுவது? எவ்வளவு தூரம் ஓடுவது? 'எனக்கோசரம் பாடு' என்று கேட்பவளை விட்டு எப்படி ஓடுவது?...

எனக்கோசரம் ஒரு பாட்டுப் பாடு. எனக்கோசரம் ஒரு குழந்தை கொடு. பிறருக்காக இதுவரை ஏதாவதொரு காரியம் நான் செய்திருக்கிறேனா? எல்லாம் என்னைக் கொண்டுதானே. எனக்கோசரம்தானே.... என் பயம், என் விருப்பு, என் வெறுப்பு முன்வைத்துத்தானே என் நடவடிக்கைகள்.

தாரிணியைக் கொண்டாடியதும், தாரிணியோடு சண்டையிட்டதும் காயத்ரியை வியந்ததும், காயத்ரியைத் தனியே விட்டு வந்ததும் என் நியாயங்களில் ஈடுபட்டுத்தானே... என் கற்பிதங்களை முன்வைத்துத்தானே... சரி, அப்படியானால் உண்மையான, நிறைவான வாழ்க்கை எது... புருஷனில்லாமல் தானும் தன் குழந்தையும் என்று ஆசைப்படுகிற காயத்ரியா?... இழைந்து இழைந்து இறுகுகின்ற நானும் தாரிணியுமா...?கைக்கு எட்டிய வட்டம் வரை பார்த்தால் போதும் என்று அன்றன்றைக்கு வாழ்ந்து விடுகிற வசந்தாவா?...இன்னும் எவர் வாழ்க்கை தெரியும் நமக்கு? இன்னும் எத்தனை வகை வாழ்க்கை உண்டு இங்கே... ஹாங் அந்தப் புத்தூர் செக் போஸ்ட்டில் பார்த்தோமே ஒரு டிரைவரை.எல்லாக் கேலிக்கும் நடுவே அப்பாவி மாதிரி நின்று தன் காரியம் சாதித்

துக்கொண்டு போனவனை, வெளியே ஒரு முகமும் உள்ளே ஒரு முகமுமாய்ப் பார்த்தோமே அவனைப் போலவா இருக்க வேண்டும்? வாசல் கதவருகில் நின்றபடி மாணுக்குப் பரிந்து பேசினரே நாணு சார் — இங்கே வாழ்க்கை முறைகள் மாறும். கூட்டுக் குடும்பம் உடைந்தது போல் குடும்பம் என்பதும் உடையும் என்ருரே...குடும்பம் உடைய மரபு என்பதும் உடையும். மரபு என்பது எவருக்கோ எப்போதோ சிறப்பாய்த் தோன்றின ஒன்று. அன்றைய சிறப்பு இன்றைக்கு இழிவு இன்றைய இழிவு. பின்னெரு நாள் சிறப்பு. இதற்குள், இதனிடையில் நிறைவு என்பது எங்ஙனம்? எதை முன்னிட்டு? என்ன அளவு கோல்?

இத்தனை குழப்பத்தில் எது கவிதை... எது கலை வடிவம்... எது சினிமா? நான் குமாஸ்தாவாக இல்லாமல் வேறு விதமாக மாறி என்ன செய்யப் போகிறேன்? எதை எழுதப்போகிறேன்? நாற்பது வருடம் கழித்து என் கதையில், கவிதையில், வெட்கத்தில் அந்தப் பெண் முகம் சிவந்தாள் என்பதை எப்படிப் புரிந்து கொள்வார்கள்?

பச்சை படர்ந்தது, வெட்கத்தில் வளை கழன்றது என்று என்ரு எழுதியதை யார் இன்று நம்பத் தயாராய் இருக்கிருர்கள்! நான் ஒரு குழப்பமான கால கட்டத்தில் ஜனித்திருக்கிறேனு, இல்லை, இப்படி ஒரு மரபுக் குழப்பம் தொடர்ந்து நிலவும் விஷயமா?

இன்று அதிகம் சிறப்பாய்ப் பேசப்படுகிற கொலை, களவு கதைகள்தான் நானும் எழுத வேண்டிய விஷயமா? ஒருவேளை கொலையும் களவும்தான் கடைசிவரை மனிதனுடைய குணமாக இருக்குமோ? இந்தச் சூட்சுமம் சிலருக்குப் புரிந்து விட்டதோ? மென்மை, நெகிழ்ச்சி, குழைவு, காதல் இவை இல்லாது போகும் நேரம் உண்டோ...?இவை காணுமல் போய்விடும் என்றுதான் காயத்ரி கவலைப் பட்டாளோ? அந்தக் கவலையில் கனிந்து கனிந்து தனித்துப் போக நினைத்தாளோ... யாசகம் கேட்டாளோ?

விஸ்வநாதன் புல் மேட்டில் மல்லாந்து சரிந்தான். மேலே இட்டுத் இட்டாய் மேகங்கள் நகர்ந்தன. நிலவு தோன்றித் தோன்றி மறைந்தது. வலப்புறம் திரும்ப அவனையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிற வசந்தா முகம் தெரிந்தது. ஒரு வேதனையும் சோர்வும் கண்களை அழுத்தின. பாடினுல் தேவலாம். யாராவது என்னை மடியில் எடுத்துப் போட்டு இறுக்கிக்கொண்டு தாலாட்டாய்ப் பாடினுல் தேவலாம். ஆனல் எனக்கு வேண்டிய தாலாட்டை நான்தான் பாடிக் கொள்ள வேண்டும். பாடுவோம்.

கனுக் காணும் கண்கள் மெல்ல
உறங்காதோ பாடல் சொல்ல
நிலாக் கால மேகம் எல்லாம்
உலாப் போகும் நேரம் கண்ணே...

என் வாழ்க்கை முழுதும் மேகம் சூழ்ந்த நிலாக் காலமாய்ப் போய்விட்டது. விடியுமா?.

(தொடரும்)



● மகாத்மாவே! உம்மை வணங்குகிறோம்! உங்கள் உயிரைக் கொடுத்து நீங்கள் எங்களுக்கு சுதந்திரம் வாங்கித் தந்தீர்கள். ஆனால் உங்கள் பிறந்த நாளில்... எங்கள் பத்திரிகைகளில் உங்கள் படத்தை அட்டையில் பிரசுரிப்பதை விட, 'சிலுக்கு' படத்தையோ பிரபு படத்தையோ போட்டால்தான் அதிகமாக விற்பனையாகின்றன! அண்ணலே! உங்கள் புகழ் வாழ்க!

குளச்சல் எம். முகமது இப்ராஹிம்

● 'அண்ணலே வணங்குகிறோம்' தலையங்கம் மூலம் இந்தியாவின் முகத்திரையைக் கிழித்துக் காட்டி விட்டீர்கள். சாதாரண பார்வையாக இல்லாமல் நீண்ட பார்வையாகக் கொண்டு எழுதிய தலையங்கம் எனக்குள் சிந்தனைத் தூறல்களைச் சிதற விட்டது.

மேட்டுப்பாளையம் மு. கலியாணசுந்தரம் ஆனந்தி

● மதச் சார்பின்மை பற்றியும் பிற்படுத்தப்பட்டோர் சலுகை பற்றியும் உங்களது சர்ச்சைக்குரிய சொந்த எண்ணங்களை மட்டும் இடைச் செருகலாய் நுழைக்காமல் இருந்திருந்தால்—உண்மையிலேயே சொல்கிறேன்— 'அண்ணலே வணங்குகிறோம்' தலையங்கம் அபாரம், அற்புதம்!

சென்னை-29 இரணியல் 'தயா'

● டாக்டர் கனகா, அமைச்சர் வந்தவுடன் எழுந்து வந்து பேஷண்டுகளின் நிலைமையை விளக்கவில்லை என்று காரணம் காட்டி 'அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது சரியே' என்று சென்னை திரு ஆர். சுந்தரம் எழுதியிருக்கிறார். டாக்டருக்கு, 'திடீரென்று எழுந்து நிற்க முடியாத' வியாதி இடுப்பில் இருப்பது அந்த வாசகருக்குத் தெரியாதா?

தஞ்சாவூர்-1 கே. ஆர். ஜனார்த்தனன்

[கனகா மறுபடி உத்தியோக நியமனம் பெற்றுள்ளார். -ஆர்.]

● 'தராசு' பதிலில் பாதாளச் சாக்கடை அடைப்புக்களை நீக்க இதுவரை எந்தச் சாதனமும் கண்டு பிடிக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறீர்கள். மகாராஷ்டிர மாநிலத்தில் ஷோலாப்பூர் என்னுமிடத்தில் தயாரிக்கப்படும் இத்தகைய சாதனங்களைப் பார்வையிட சமீபத்தில் என் கணவர் சென்றிருந்தார். வட மாநிலங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் இந்தச் சாதனம் பல அளவுகளிலும், இரண்டு மாடல்களிலும் தயாரிக்கப்படுகின்றன.

சென்னை-38 சரோஜா ராஜாராமன்

● 'சோ' அரசியல் கட்சியில் சேருவது குறித்து லிஸ்டர் அனந்தின் கருத்தை நானும் ஆதரிக்கிறேன். நல்ல அறிவாளிகளும், தீர்க்கமான சிந்தனையாளர்களும் கல்வி அறிவு நிறைந்தவர்களும் அரசியலை விட்டு ஒதுங்கி யிருப்பதால்தான், தூய்மையான அரசியல் மறைந்து, ஊழலும், சுயநலமும் மிக்க அரசியல் இன்றைய மக்களை வாட்டி வதைத்து வருகிறது. ஆகவே, சோவைப் போன்றோர் அரசியலில் நுழைவதை வாழ்த்தி வரவேற்கிறேன்.

செங்கல்பட்டு ராணி முருகவேள்

● விமானம் கடத்தியவர்களும், சிமெண்ட் ஊழல் நாயகர்களும், கொலை, கற்பழிப்பு கேஸ்களில் சம்பந்தப்பட்டவர்களும், ஜாதி வெறி பிடித்தவர்களும்தான் அரசியல் நடத்துகின்றனர். சோவின் பாணியிலேயே சொன்னால் அவர் வெளியே இருந்து 'சாக்கடைக்கு' மருந்து அடித்துக் கொண்டிருக்கலாமே தவிர, அதில் இறங்கினால் விஷ வாயு தாக்கித் தன் உணர்வை இழக்க நேரிடலாம்.

விழுப்புரம் கே. எஸ். குமார்

● பிரபுவின் பேட்டி மிகையாகவே எனக்குப் படுகிறது. உண்மையை மறைக்க 'திரை ஞானி' போட்டி போடுவது பேட்டியில் தெளிவாகத் தெரிகிறது. பிரபு இன்னும் கொஞ்சம் வளர்ச்சி யடைந்த பிறகு இந்தப் பேட்டி வெளிவந்திருக்குமானால் ரசித்திருக்கலாம்!

பேராவூரணி நவீன்குமார்

● சிவாஜி பிறந்த நாளில் அவரின் வாரிசு சிங்கக் குட்டி பிரபுவின் அட்டைப் படமும், கட்டுரையும் வெகு ஜோர்.


பெங்களூர்-21 நா. ரா. பூபாலன்

● சாந்தி தியேட்டரில் சிவாஜி நடித்த படங்களை விவரமாக எழுதி வைத்துள்ள செய்தி முன்பே வெளியானதுதான்! இது 'தெரியுமா' உங்களுக்கு?

திருப்பாதிரிப்புலியூர் த. பட்டுமைந்தன்

● இலக்கியப் பிரக்ஞை உள்ளவர்களுக்காகவே எழுதப்பட்ட சிறந்த படைப்பு லா. ச. ரா.வின் 'ஒரு நாயும் ஒரு மனிதனும்'. மனத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் இப்படிப்பட்ட சிறுகதையைப் படித்து நீண்ட காலம் ஆகிவிட்டது.

சென்னை-11 பானுமதி மனோகர்



வியர்க்குருவினின்று நிவாரணம் பெற டால்கம் பவுடர் போதாது, நைஸில் வேண்டும்.



நைஸில் உபயோகியுங்கள்

வியர்க்குருவினின்று விரைவில் நிவாரணம் பெறுங்கள்.



2 தினுசு டப்பாக்களில் கிடைக்கிறது. 'நீலம்', 'சந்தனம்'.

நைஸில், மருந்துக்கலவையுள்ள பவுடர் ஆகும். வியர்க்குருவின் எந்தவிதத் தொல்லையிலிருந்தும் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கென்றே விசேஷமுறையில் தயாரிக்கப்பட்டதாகும். டால்கம் பவுடர்களைப் போலன்றி, பிரச்சினை மோசமாவதனின்றும், பரவுவதனின்றும் எதிர்த்துக் காக்கிறது இது.

1. அளவுக்கு மீறிய வியர்வையைத் தடுக்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமளிக்கிறது.

HTB-GLL/6808

உடல் நலத்தின் உறைவிடம்

க்ளாக்ஸோ



சிவசங்கரி

11

பூகாரிக்கு எதிரில் வண்டியை நிறுத்தி விட்டு, இக்னிஷயனை பாலாஜி அணைத்தான்.

வெள்ளைச் சீருடை அணிந்த சர்வர் ஓடி வந்து ஜன்னல் அருகில் நிற்க, பாலாஜி கௌரியைப் பார்த்து, ''என்ன சாப்பிடறே?'' என்றான்.

''நீங்க?''

''வழக்கம் போல ஆப்பமும், சிக்கன் கறியும்தான்.''

''எனக்கும்.''

''இரண்டு பிளேட் ஆப்பம், சிக்கன் கறி, ஜில்லுனு தண்ணி, சூடா ஸ்பெஷல் மசாலா பால்.''

சர்வர் நகர, அவன் நின்ற இடத்தைத் தட்டுக் கொள்ளாமல் குண்டுமல்லி வைத்திருந்த ஆள் ஆக்கிரமித்துக் கொண்டான்.

''பூ ஸார்... குண்டுமல்லி ஸார்...''

வேண்டுமா என்று கௌரியைக் கேட்காமல் இரண்டு ரூபாய்த் தாளை எடுத்து நீட்டி, பூக்காரன் கொடுத்த எட்டு முழம் பூவைப் பாலாஜி வாங்கிக் கொண்டான்.

''வெச்சிக்கிறியா டார்லிங்?''

''கொண்டை போட்டிருக்கேன்... வீட்டுக்குப் போய்ப் பின்னி வைச்சிக்கறேனே..... ப்ளீஸ்....''

பாலாஜி பக்கத்தில் பூப்பந்தை வைத்தான். மூச்சை இழுத்து, வண்டியினுள் அவசரமாய்ப் பரவிய மணத்தை ஸ்வாசித்தான்.

சீட்டில் சரிந்து உட்கார்ந்து, மனைவி பக்கம் திரும்பி, அவள் கையை எடுத்து வாயில் வைத்து முத்தமிட்டு, ''படம் பிடிச்சிதா கண்ணம்மா?'' என்றான்.

''சுமாரா... நம்ப முடியாத சண்டை ஜாஸ்தி....''

''ஜேம்ஸ் பாண்ட் படம்னு ஆக்ஷனைத் தவிர வேறு என்ன இருக்கும்?... ஆமா



மாலையில் பூக்கும் மலர்கள்

சாயங்காலத்துலேந்து பார்க்கறேன். நீ ஏன் எப்படியோ இருக்கே... தலைவலியா?''

கடுகத்தனை மாற்றம் இருந்தாலும் கணவன் புரிந்து கொண்டு விடுவது வழக்கம் போலச் சந்தோஷத்தைத் தர, கௌரி சிரித்தாள்.

''ஒண்ணுமில்லே பாலா...''

''இதானே வேணுங்கறது!''

''உங்களுக்குச் சரியான கழுகுக் கண் தான் போங்க.''

''தாங்க்ஸ்... மொதல்ல விஷயத்தைச் சொல்லு.''

''இன்னிக்கு மத்தியானம் அக்கா வந்திருந்தாங்க...''

''ம்.''

''நாம வெளில தத்து எடுக்கக் குழந்தை தேடின விவரம் அவங்களுக்கு எப்படியோ தெரிஞ்சிட்டது. என்கிட்டே விருந்து மறைச்சிட்டீங்க பாத்திங்களான்னு வருத்தப்பட்டாங்க....''

''அவ்வளவுதானு?''

'''சுரேஷை அழைச்சுக்கிட்டுப் போய்ப் பிள்ளையாட்டம் வளருங்கன்னு சொன்னேன், அதைக் காதில போட்டுக்காம யாரோ முன் பின் தெரியாத பிள்ளையை எடுத்து வளர்க்கத் தலைவிதியா?'னு கேட்டாங்க.''

''நீ என்ன சொன்னே?''

''தத்து எடுக்க நினைச்சது உண்மை தான்க்கா. ஆனா, இப்ப வேணும்னு தீர்மானம் பண்ணிட்டோம்னு சொன்னேன். 'ஏன்?'ன்னுங்க... சும்மாதான்னேன்... இன்னும் கொஞ்ச நான் பார்க்கலாம்னு இருக்கீங்களான்னுங்க.... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே... எல்லாப் பிள்ளைகளையும் நம்மதா பாவிச்சிட்டாப் போச்சுங்கற முடிவுக்கு வந்துட்டோம், அதான்னேன்....''

''ஐம் ஸாரி கௌரி... அக்காவுக்குச் சில சமயம் எந்த அளவுக்கு உரிமை எடுத்துக்கலாம்ன்ற எல்லை மறந்துடுது... இது நம்ப

பார்க்காமப் போய்ச் சேர்ந்திட்டா... இனி இவன் என்ன ஆனாலும் எனக்குக் கவலையில்லே. அவனே போயிட்டப்புறம் இவன் என்ன ஆனா எனக்கு என்ன? எங்கேயாவது ஆயுசோட இருந்தாச் சரி... என் தங்கம் இவனாலதானே என்னை விட்டுப் பிரிஞ்சா? அகனால இவனும் எனக்கு வேணும். எங்க வேணா எடுத்துக்கிட்டுப் போய், எப்படிவேணா வளருங்க... எனக்கு அக்கறை இல்லே...பாவி பிள்ளை பிறந்தா 'கோகுல கிருஷ்ணன்'னு பேர் வைச்சு, 'கோகுல்னு கூப்பிடணும்'னு சொல்லிட்டு இருந்தா... அந்தப் பேரை இவனுக்கு நீங்க வைச்சிங்கன்னா நான் சந்தோஷப்படுவேன். மத்தபடி இவன் எங்கேயாவது நல்லா இருந்தாச் சரி. அவனே போயிட்டா... இனி இவன் மட்டும் எனக்கு எதுக்கு?... அவ....''

சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டு மூலையோடு மூலையாய் அவன் நிற்க, ''நாங்க வறோம். அப்புறம் பேசிக்கலாம்'' என்று பாலாஜி கௌரியுடன் கிளம்பி விட்டான்.

போகும் வழியில் கௌரி மௌனமாய் வர ''என்னம்மா?'' என்றான் மெதுவாய்.

''அந்த மனுஷனோட வேதனையை நினைச்சா கஷ்டமா இருக்கு பாலா... ஐம் ஸாரி ஃபார் ஹிம்.''

''குழந்தையைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?''

''எனக்குப் பிடிச்சிருக்கு... ஆனாலும்...''

''ஆனாலும்?''—

''சொல்லத் தெரியலே பாலா... என்னமோ தயக்கமா இருக்கு.''

''நா சொல்லட்டுமா? அந்தத் தகப்பனால குழந்தையைப் பிரிஞ்சு நிச்சயமா இருக்க முடியாதுன்றது உனக்குப் புரியறதாலதான் இந்தத் தயக்கம்... அவன் அடிபட்டுப் போயிருக்கான். அந்த அதிர்ச்சி கொடுத்திருக்கிற வெறுப்புக்கு ஆளாகிப் பேசறான். அதான் ஒரு க்ஷணம் குழந்தை என்னவானாலும் கவலையில்லேன்றான்; மறு க்ஷணம் கோகுல் கிருஷ்ணன்னு பேர் வையுங்கனு கெஞ்சறான். இந்தக் குழந்தை அவனுக்கு வேணும். கொஞ்ச நாள்ல மனசு தேறினப்புறம் 'இவனைப் பிரிஞ்சு என்னால இருக்க முடியலே: எனக்குத் திருப்பித் தந்துடுங்க'னு நம்மகிட்ட வந்து அழுவான். வேணாம் கௌரி... ஒரு அப்பாவையும் பிள்ளையையும் பிரிச்ச பாவம் நமக்கு எதுக்கு; என்னம்மா?''

அதற்கப்புறம் பார்த்த குழந்தைகள் அவளுக்குத் திருப்தி உண்டாக்கவில்லை.

ஐந்து மாசங்களாகத் தேடுகிறோம், இன்னும் மனசுக்குப் பிடித்ததாக ஒன்று கூட அமையவில்லையே!

ஒருவேளை பாலாஜி துவக்கத்தில் கூறியது போல் என் எதிர்பார்ப்பு அதிகமோ?

எப்பேர்ப்பட்ட குழந்தையானாலும் ஆரோக்கியமாக இருந்தால் போதும் என்ற திருப்தியுடன் அதற்கு மேல் தூண்டித் துருவாமல் இருந்துவிட வேண்டுமோ?

குழப்பம் அதிகமானதும், ஒரு நாள் இரவு பாலாஜியிடமும் இது பற்றிப் பேசினாள்.

''ரத்த சம்பந்தமில்லாத குழந்தையிடம் ஒட்டுதல் ஏற்படுமா, பாலா?''

''ஏன் சாத்தியமில்லே கௌரி? நமக்குனு ஒண்ணு எடுத்து வளர்க்கத் துவங்கிட்டா தானா பாசம் வந்துடும்னே நான் நினைக்கிறேன். மனுஷ ஜாதிக்குச் சம்பந்தமே இல்லாத நாய், மாடு, பூனை மேல உசிரையே வைச்சிருக்கிறவங்களை நீ பார்த்திருக்கப்போ இந்தச் சந்தேகம் உனக்கு வர்றது எனக்கு ஆச்சரியமா இருக்கு. விருப்பு, வெறுப்பு எல்லாத்துக்கும் மனசுதான் காரணம். அதுக்கு மஞ்சக் கண்ணாடி மாட்டாம புழுக்கம் இல்லாம, காத்தோட்டமா வைச்சுக்கிட்டா எல்லாமே சாத்தியம்தான்.''

பாலாஜியின் இந்தப் பேச்சுக்குப் பிறகு தன் சிந்தனை மெதுவாக வேறு பாதையில் செல்ல முற்படுவதைக் கௌரி உணரவே செய்தாள். அடுத்து வந்த மாதங்களில் ஏதோ ஓர் உந்துதல் காரணமாய், சென்னையில் உள்ள அத்தனை இல்லங்களுக்கும் எந்த ஓர் உள் நோக்கமும் இல்லாமல் சென்று வந்தாள்.

இன்று பார்ப்பது இந்தப் பத்து மாசத்தில் ஏழாவது குழந்தை.

இன்னொரு தரம் குனிந்து குழந்தையின் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்ட நிமிஷத்தில் தான் என்ன செய்ய வேண்டும் என்பது தெளிவாகிவிட, மென்மையாய்ப் புன்னகைத்துக் கொண்டே நிமிர்ந்தாள்.

''என்ன கௌரி, தீர்மானம் பண்ணிட்டீங்களா? அதான் இந்த சந்தோஷமா?''

கௌரி பல் தெரியச் சிரித்தாள்.

''நிஜம்தான். தீர்மானம் பண்ணிட்டேன் மிஸ்ஸஸ்.''

''வெரி குட்... டாக்டர் கிட்டப் பேசிடறீங்களா?''

''கண்டிப்பா... இன்னிக்கு ராத்திரியே.''

பையன்: அம்மா, என் கையிலே குத்தியிருந்த முள்ளைப் பின்னாலே எடுத்துவிட்டேன்.

அம்மா: பின்னினாலா? அது ஆபத்தாச்சே! உனக்குத் தெரியாதா?

பையன்: இல்லேம்மா; நான் சேஃப்டி பின்னினால்தானே எடுத்தேன்?

—பி. சிவா
3வது ஆண்டு இரசாயன இயல்,
ஏ. எம். ஜெயின் கல்லூரி
சென்னை-600.061.




"குடும்பப் பொறுப்புக்கு ஈடு கொடுக்க கொள்ளைத் தெம்புதேவை...எனக்கு அள்ளித் தருகுது நான் பருகும் விவா"
''குடித்தனம் நடத்துகிற பொறுப்புத் தான், காலெல்லாம் பம்பரமாய் ஓடியாடி உழைக்க வைக்கிறது என்னை... அதுவும் உற்சாகத்தோடு செய்கிறதைக் கச்சிதமாய்ச் செய்கிறேன். நான் பருகும் விவா எனக்கு வற்றாத தெம்பு தருகிறது. பார்லி, கோதுமை இவற்றின் மால்ட் சத்துக்கள், பால், வைட்டமின்கள் அடங்கிய விவா ஜீரணிக்க எளிதானது. பாலிலேயும் சரி, நீரிலேயும் சரி கலக்க இலகு. சூடான பானமாகவோ, குளிர் பானமாகவோ சுவையுடன் அருந்தலாம். அலுக்காமல் உழைக்க எனக்கு சளைக்காத தெம்பு-- தருகிறது விவா.''
ViVA
The Family Health Drink
BUILDS UP STAMINA
ViVA
"தெம்பு தரும் விவா உனக்கு நன்றி!"
மாண்ட் (உலக) தேர்வில் வெள்ளிப் பதக்கம் வென்றது, ஆம்ஸ்டர்டாம் 1981
JiL ஜகத்ஜீத் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
ASP/JIL: V/3/2012 TM

நிசப்தமான சூழ்நிலையில் தூரத்தில் கடல் ஹாஷ் ஓ... ஹாஷ் ஓ என்று குரல் கொடுப்பது பெரிசாகக் கேட்டது. காற்று மந்தஹாசமாய் உடலைத் தழுவியது.

கௌரி இரண்டு கால்களையும் மடித்து, கணவனை நெருங்கி உட்கார்ந்து அவன் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

பாலாஜி குனிந்து அவள் கண்களை முத்தமிட்டுத் தோளை இறுக அணைத்துக்கொண்டான்.

தத்து எடுக்க வேண்டாம், ஊர்பிள்ளைகளை நம்முடையதாகவே எண்ணி உதவலாம் என்று தீர்மானித்து ஒரு மாசம் கூட ஆகவில்லை. அதற்குள் சுருங்கி இருந்த மனசு பகபகவென்று விரிந்து, முன் பின் தெரியாத நபர்கள் மேலெல்லாம் கூட அன்பை வர்ஷிக்க முற்பட்டு விட்டதை நினைக்கையில் ஆச்சரியம் எழுந்தது. கூடவே ரொம்ப சந்தோஷமாகவும் இருந்தது.

நான் — என்னுடையது — இது என் வம்ச வளர்ச்சிக்காக — என்று ஒரு வட்டத்துக்குள் சுழலாமல், வெளியில் வந்து நீ, நீ, நீ என்று எல்லாரையும் அணைத்து இதம் தர முயற்சி செய்வது இது நாள் அறியாத நிம்மதியைத் தருவதை உணர முடிந்தது.

மைனஸ் பாயிண்டை எண்ணி மாய்ந்து போகாமல், ப்ளஸ் பாயிண்டுகளைப் புரிந்து கொண்டு விவேகத்துடன் ஒவ்வொரு படியாக உயர எண்ணுவதன் மூலம் தானும் மணத்து, சுற்றுப்புறத்தையும் மணக்க வைக்கலாம் என்கிற தெளிவு, மனசை எந் நேரமும் பன்னீர் சாரலாய்க் குளிர வைத்தது.

''காலைல அப்பா வந்திருந்தார். அக்கா பேச்சை எடுத்ததுல அதுபத்தி சொல்ல மறந்திட்டேன்.''

''என்ன விஷயம், சும்மாதானே?''

''இல்லே... மௌபரீஸ் ரோடுல எட்டு க்ரவுண்ட் மலிவா விலைக்கு வந்திருக்கிறதைப் பத்தித்தான் திரும்பப் பேசினார். 'ப்ரோக்கர் அவசரப்படுத்தறார்.. எனக்கு அதை விட இஷ்டமில்லே... மாப்பிள்ளை கிட்டப் பேசினியான்னு கேட்டார்...''

''......''

''என்ன பாலா... போன வாரமே அவர் கேட்டார், எஸ் ஆர் நோ-னு நாம சொல்ல வேணுமா?''

''எட்டு இரெண்ட் — மௌபரீஸ் ரோடு லன்னு என்ன விலை தெரியுமா கௌரி?''

''சொல்றேன்னு தப்பா எடுக்காதீங்க பாலா... அது பத்தி நாம கவலைப்பட வேணும்னு அப்பா சொல்லிட்டார் இல்லே?''

''அதுக்காக, சரின்னு உடனே நான் தலையாட்டிடலாமா டார்லிங்?... நியாயம்னு ஒண்ணு இருக்கே?''

கௌரி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''எல்லாத்துலேயும் ப்ராக்டிகலா இருக்கற நீங்க இந்த விஷயத்துல மட்டும் பிடிவாதமா இருக்கறது எனக்கு வேடிக்கையா இருக்கு பாலா... இதையே உங்கப்பா தர வந்தார்னு ஏத்துக்கிட்டு இருப்பீங்கதானே?''

''ம்.''

''அப்ப எங்கப்பாவை நீங்க அன்னியமா நினைக்கிறதாத்தான் அர்த்தம். நான் அவருக்கு ஒரே பெண். 'என்னது எல்லாம் உனக்கு'ன்னு அவர் சொல்றது தப்புன்னு தீர்மானிக்க நமக்கு என்ன உரிமை?''

''......''

''ப்ளீஸ், நான் சொல்றதைக் கேளுங்க பாலா. நீங்க தனியா ப்ராக்டீஸ் பண்ணத் துவங்கி ஒரு வருஷம் ஆயாச்சு. உங்க வருமானம் நாளுக்கு நாள் ஏறிட்டுத்தான் போறது. திட்டமிட்டு வசதியா நமக்குன்னு ஒரு நர்ஸிங் ஹோம் இருந்தா இன்னும் எத்தனை பேருக்கு உதவ முடியும்ங்கறதை உங்களுக்கு நான் சொல்லித் தரணுமா பாலா?''

''அதுக்காக மாமனார் கிட்டே யிருந்து லட்சக் கணக்குல ஓஸியா பணம் வாங்கிக்கறது சரியா கண்ணம்மா? நான் சம்பாதிச்சுக் கட்டினாத்தானே எனக்குப் பெருமை...''

''இன்னும் பத்து வருஷத்துல நீங்களே சம்பாதிச்ச பணத்துல அருமையா நர்ஸிங் ஹோம் கட்டிடலாம்... ஆனா, அதுவரைக்கும்? இப்ப மத்தவங்க நர்ஸிங் ஹோம்ல ஏழைகளுக்குன்னு உங்களால அதிகமா உதவ முடியறதில்லே... ரூம் வாடகை, தியேட்டர் சார்ஜ் எல்லாம் அவங்கஇஷ்டப்படி கொடுக்க வேண்டியிருக்கு... நமக்குன்னு ஒண்ணு இருந்தால், ஜெனரல் வார்டை நல்ல விதமா அமைச்சு இன்னும் நிறைய ஏழைகளுக்கு இலவசமா சிகிச்சை செய்யலாம்னு நீங்களே அடிக்கடி சொல்லலியா?... அப்பா நம்ம மனசை நல்லாப் புரிஞ்சுக்கிட்டிருக்கார். தானும் இந்த சர்வீஸ்ல பங்கெடுக்க ஆசைப்படறார். வேணா, எனக்கு அவர் கொடுத்த நகை, பணம் எல்லாத்தையும் திருப்பித் தந்திடறேன். ஆனா, நர்ஸிங் ஹோம் கட்ட அவர் உதவறதைமட்டும் ஏத்துக்கங்க பாலா, ப்ளீஸ்.....''

பாலாஜி பதில் ஏதும் கூறாமல் அப்படியே சில நிமிஷங்களுக்கு உட்கார்ந்திருந்தான்.

பின், சின்னதாக ஒரு புன்னகை உதட்டில் விரிய ''ஆல்ரைட்... யூ வின். நாளைக்கு மாமா கிட்டே தானே இது விஷயமாப் பேசறேன்'' என்றான்.

(தொடரும்)

மேலட்டை வண்ணப்படம் :

திலீப் பானர்ஜி





சென்னை நகர விற்பனை நிலையம்

3, வெங்கடநாராயணா ரோடு, தி. நகர், சென்னை-600017

கே. பொன்ராஜன்
இறுதியாண்டு (இயந்திரவியல்)
அரசினர் பொறியியற் கல்லூரி
கோவை

அழைப்பு மணி ஒலித்தது.

சிவ் எட்ட இருந்த பட்டன்களை இயக்கினன். திரையில் யோக் தெரிந்தது. கையில் நிறைய பொட்டலங்கள். இன்று யோக் வரும் என்பதையே மறந்திருந்தான்.

''யோக்.... நான் என்னென்ன ஆர்டர் செய்திருந்தேன்?''

சில வினாடிகளில் ஒரு நீண்ட பட்டியல் தெரிவிக்கப்பட்டது.

''சரி ராஜுவைச் சரிபார்த்து வாங்கச் சொல்.'' சொல்லிவிட்டுப் படுக்கையில் சாய்ந்துகொண்டான். ரோபோராஜு சப்த மின்றிப் போனது.

''பில் 630 ரூபாய்.'' இரண்டு தரம் எண்ணிக் கொடுத்தான். பிடிக்கவில்லை. திருப்தியில்லை. கையிலிருந்து பிடுங்கினன். யோக் நின்றது. மகா கஞ்சன். இரண்டு நிமிடம் கழித்துக் கொடுத்தான்.

''ராஜு 200 மில்லி காப்பி வேண்டும்.'' சப்தமிட்டான்.

போரடித்தது. ''டேர்... இன்னைக்கு ஏதாவது நல்ல புரோகிராம் இருக்கா?''

''எஸ் சார். விஜியில் ஒரு லேடீஸ் புரோக்கிராம்.''

''எத்தனை மணிக்கு? எத்தனை மணிக்கு?'' ஆர்வம் மேலோங்கியது.

''செவன் தெர்ட்டிக்கு சார்.''

ஏழு பதினைந்து ஆகியிருந்தது. ராஜு காப்பி கொண்டு வந்தது.

கி. பி. 2238-ல் ரோபாட்டும், கம்ப்யூட்டரும் இவ்வளவு உதவியாக்கப்பட்டிருந்தன. நிறைய மாற்றங்கள். அரசியலும் கூட. மனித மனங்களிலும் கூட.

எப்படியோ ஏழு முப்பது. இன்று திரையை 100 செ. எம். ஆகப் பெரிதாக்கி வைத்தான்.

இது ஒரு தனியார் டி. வி. ஒலிபரப்பு.

பெண்கள் ஆடினர். பாடினர். எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டும் இவை மாறவில்லை. அழகாக... அழகாக... இருந்தனர்.

மனக் குதிரை பாய்ந்தது. தனி வாழ்க்கை போரடித்தது. துணை தேவையாகத் தோன்றியது. ஸ்பரிசம்... அன்பு... எல்லாம் வேண்டுமென்று நினைத்தான்.

டி.வி.யைப் பார்...க்கவே முடியவில்லை. அவசரம் .... அவசரமாகத் தோன்றியது. யோசிக்கவில்லை. — முடியவுமில்லை!

''டேர்...! என் Personal use Computer நான் கல்யாணம் செஞ்சுக்கணும்.'' நன்றாக அமர்ந்து கொண்டான்.

உடனே ''Matrimonial Service Computer உடன் தொடர்புகொள்'' என்றது டேர்.

சில நொடிகள்... MSC கிடைத்தது.

''MSC நான் கல்யாணம் செஞ்சுக்கணும்''

''குட். கோட் நெம்பர் சொல்லுங்கள்.''

''CP 8342 Crime Police''

பொறுத்தான். ''.38'' வினாடிகள். உடனே அவனுடைய முழு உருவம் திரையில் பிரகாசித்தது.

''இது நீங்கள்தானே?''

''எஸ்... எஸ்.... நானேதான்'' அவசரமாகப் பதிலளித்தான்.

—''சரி. உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.''

''MSC உனக்கு என்ன வேண்டும் கேள்.''

''சரி. பெயர், படிப்பு, வயது, உயரம், எடை.....''

''சிவ், PPS, 29.32, 163 52 பாட்டுவரும், ஹாக்கி,....''

— 'சரி, கொஞ்ச நேரம் பொறுங்கள்.''

ராஜு சிகரெட் கொண்டுவந்து கொடுத்தது. டி. வி.யை மறுபடியும் போட்டான். அணைத்தான்.


''சிவ்... சிவ்....'' — குரல் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடியது. ஓடிவந்தான்.

''வந்துவிட்டேன்''

''திரையில் பார்க்கவும்.''

பார்த்தான்.

பட்டுப் புடவை. லிப்ஸ்டிக். கொஞ்சம் மூக்கு பெரிது.



''ஏதோ ஊர்வலம்மா இன்னிக்கு. நேபியர் பார்க்கிலிருந்து புறப்படுது.''

''ரொம்ப நேரமாகுமோ? அப்....பா'' கண்களை இறுக மூடி இடுப்பைப் பிடித்துக் கொண்டாள் ஜானகி. ''கொஞ்சம் தண்ணி குடும்மா.''

வெந்நீரை ப்ளாஸ்க் மூடியில் ஊற்றி ஆற்றிக் கொடுத்தாள் பார்வதி.

''பார்க்கதேம்மா'' டிரைவர் இறங்க எத்தனித்தபோது புல்லட்டில் வேகமாக வந்து இறங்கினார் ஒரு டிராஃபிக் இன்ஸ்பெக்டர்.

''ஊர்வலம் ஆரம்பிச்சாச்சு. ட்ராஃபிக்கைக் கன்னிமாரா பக்கம் 'டைவர்ட்' பண்ணிவிடு'' என்றார் டிராஃபிக் கான்ஸ்டேபிளிடம்.

சில நிமிடங்களில் வண்டிகள் 'யூ டர்ன்' அடித்துத் திரும்பின.

கன்னிமாரா ஹோட்டலை அடைந்தபோது மெதுவாகிப் பாலத்தையடைந்ததும் நிற்க வேண்டியதாயிற்று.

ட்ராஃபிக் ஜாம்.

இடுப்பே இற்றுவிடும் போலிருந்தது ஜானகிக்கு. கீழுதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டாள்.

'ஈடில்லாத் தலைவர்..... வாழ்க!'

'இணையில்லாத் தலைவர்.... வாழ்க!'

தலைவர் வந்ததும் கோஷத்தின் பரிமாணம் பன்மடங்கு அதிகமாயிற்று. ஜீப்பில் நின்று கைகூப்பிய தலைவர், கூட்டத்தின் அளவைப் பார்வையிட்டார். இன்னும் கொஞ்சம் லாரிகளை ஏற்பாடு செய்திருக்கலாம் என்று தோன்றிற்று.

ஊர்வலம் நகர ஆரம்பித்தது.

டெண்டர்ஸ்டேட்மெண்டை மிகக் கவனமாகப் படித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் சத்தியராஜ். மிக முக்கியமான அவசரமான ஸ்டேட்மெண்ட். பல லட்சங்களுக்கான காண்ட்ராக்ட்.

போன் மணி அழைத்தது. படித்துக் கொண்டே ரிஸீவரை எடுத்தார். ''ஹலோ சத்தியராஜ்... என்ன, அம்மாவுக்கா? இதோ வரேன். கவனமாப் பார்த்துக்கோ.''

ரிஸீவரைப் போட்டுவிட்டு, ஸ்டேட்மெண்டை எறிந்துவிட்டுப் புறப்பட்டார்.

''சார் இன்னிக்கே அனுப்ப வேண்டிய ஸ்டேட்மெண்ட்'' என்று மென்று விழுங்கிய செக்ரட்டரியை லட்சியம் செய்யாமல் வெளியே ஓடி, டிரைவரை எதிர்பார்க்காமல் அவரே காரை எடுத்தார்.

அவருடைய அம்மாவுக்குத் திடீரென 'மார்புவலி' வந்து மூச்சுத் திணறிவிட்டதாம்.

'ஜெனமேஜெயன்'



டாக்டர் வந்து பார்த்தும் பயனில்லையாம். 'உங்க முகத்தைப் பார்க்கணும்னு ஆசைப்படறாங்க. சீக்கிரம் வாங்க. எனக்குப் பயமா இருக்கு' என்றாள் சத்தியராஜின் மனைவி. அதனால்தான் அத்தனை அவசரம்.

சத்தியராஜுக்கு எந்தத் தெய்வமும் அம்மாவுக்கு அடுத்தபடிதான். அளவிட முடியாத பாசம். அவரைப் படிக்க வைத்து ஆளாக்கி இன்று பல லட்சங்களுக்கு அதிபதியாக்கினவள். ஒவ்வொரு நாளும் வெளியில் புறப்படும்போது அம்மாவின் கால்களைத் தொட்டு வணங்கி விட்டுத்தான் வருவார்.

பெரியார் பாலத்தை அடைந்தபோது நடு ரோட்டில் காரை நிறுத்தினார் கான்ஸ்டேபிள்.

பிரேக்கை வேகமாக உதைத்து ''ஏன்?'' என்று கத்தினார் சத்தியராஜ்.

''ஊர்வலம் போகுது. டிராபிக்கை டைவர்ட் பண்ணியிருக்கோம். நீங்க எங்கே போகணும்?''

''அசோக் நகர். நான் ரொம்ப அவசரமாப் போகணுமே.''

''எக்மோர் வழியாப் போகலாம். ஆனால் அங்கே ட்ராஃபிக் ஜாம் ஆகியிருக்கும். அவசரமானா பீச் ரோடில் சைதாப்பேட்டை போய்ப் போகலாம்.''

சத்தியராஜ் வேகமாகக் காரைத் திருப்பிய போது, ''ஒரு நிமிஷம்'' என்றார் கான்ஸ்டேபிள். சற்றுத் தள்ளி ஒயர்லஸில் பேசிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டரிடம் போய் ஏதோ கேட்டுவிட்டு வந்தார்.

''சாரி சார். ஊர்வலம் பெல்ஸ் ரோட்டைத் தாண்டிட்டதாலே பீச் ரோடிலும்

புகழ் பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியரான விக்டர் ஹ்யூகோவிற்கு அவருடைய மனைவி ஜூலியட் டிரௌட் 1833லிருந்து 1883 வரை தொடர்ந்து காதல் கடிதம் எழுதி வந்தார். கடிதங்களின் எண்ணிக்கை சுமார் 17,000 ஆகும். சில வேளைகளில் அவர் ஒரு நாளில் மூன்று கடிதங்கள் கூட எழுதுவாராம். இத்தனைக்கும் கணவனும் மனைவியும் தினசரி சந்தித்துக்கொள்ளத் தவற மாட்டார்களாம்!

—மூர்த்தி நாதன்



கட் பண்ணிட்டாங்களாம். பூந்தமல்லி ரோடிலும் எக்கச்சக்க ஜாமாம். நீங்க பேசாமல் வெயிட் பண்றது நல்லதுன்னு நெனைக்கிறேன்.''

ஸ்டியரிங்கை ஆவேசத்தோடு குத்தினார் சத்தியராஜ். 'அம்மா, அம்மா' என்று அவர் மனம் ஜபித்துக் கொண்டே இருந்தது.

இத்தனை வருஷமாச்சு. என்றைக்காவது அம்மா எதையாவது ஆசைப்பட்டுக் கேட்டிருப்பாளா? எது வாங்கிக் கொடுத்தாலும் 'எனக்கெதுக்குடா ராஜா இதெல்லாம்? நீ சந்தோஷமா இருந்தாப் போதும்' என்பாள்.

அந்த அம்மாவுடைய ஒரே ஆசையை, இறுதி ஆசையை, என் முகத்தைப் பார்க்க வேண்டும் என்ற நியாயமான ஆசையைப் பூர்த்தி செய்ய முடியாமல் போயிடுமோ?

ஸ்டியரிங்கில் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டார் சத்தியராஜ்.

ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது.

''**போ**யிட்டு வரேம்மா'' அம்மாவின் காலில் விழுந்து வணங்கினான் பாலகுமார்.

''கடைசியில் கடவுள் கண்ணைத் திறந்திருக்கார்.'' திருநீறு எடுத்து மகனுடைய நெற்றியில் இட்டாள் காமாட்சி.

''டாடா அண்ணா!'' கடைக்குட்டி விஜய் கையாட்டினான்.

ஹைதராபாத்தில் நாளைக்கு பாலகுமாருக்கு இண்டர்வியூ. பிரிலிமினரி டெஸ்ட் வைத்து அதில் தேறியவர்களுக்கு ஃபைனல் டெஸ்ட் ஒன்று வைத்து வடிகட்டி, அதிலும் தேறியவர்களுக்கு மட்டும் இண்டர்வியூ.

இரண்டு டெஸ்ட்களிலுமே பிரமாதமாகச் செய்திருந்தான் பாலகுமார். 'மெரிட்' மட்டுமே பார்க்கப்படுவதால் இண்டர்வியூவில் நிச்சய வெற்றி கிடைக்கும் என்று உறுதியாக நம்பினான். மிக நல்ல வேலை, நல்ல சம்பளம்.

'வரலாறு படைக்கும் மாபெரும் லட்சிய ஊர்வலம்' — வண்ணச் சுவரொட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது 4-இ வந்தது. 'இதில் போனால் வால்டாக்ஸ் ரோடில் போய் இறங்கலாம். சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் பக்கம்' என்று ஏறிக் கொண்டான் பாலகுமார்.

ஜல் ஹவுஸ் வந்ததும் பஸ் இடதுபுறம் திருப்பி விடப்பட்டது.

கொஞ்சம் சீக்கிரமாகவே புறப்பட்டது நல்லதாய்ப் போயிற்று என்று நினைத்தான் பாலகுமார். ஆனால் ரத்னா கேஃபை அடையவே பதினைந்து நிமிடங்களானபோது ஒரு பயம் பரவிற்று மனத்தில். ரோடை அடைத்துக் கொண்டு பஸ்கள், டாக்ஸிகள், ஆட்டோக்கள்... எல்லாமே நத்தைகளாய்...

''பெரிய பேஜாராப் போச்சு. எப்பப் பாரு ஏதாச்சும் ஊர்வலம்.''

பஸ்ஸிலிருந்தவர்கள் ஆளுக்கொன்றாக விமர்சித்தார்கள்.

பஸ் மெதுவாகப்போகப் போகக் கடிகாரம் மிக வேகமாக ஓட ஆரம்பித்தது. பாலகுமார் வேர்வையைத் துடைத்துக் கொண்டான்.

In Trust For The People...

The entire wealth gathered by the Founder of Tata Enterprises, and his sons and successors, over almost a century of industrial pioneering is bequeathed to Tata philanthropic trusts and foundations.

The whole of that wealth is held in trust for the people and used exclusively for their benefit—scholarships for education, grants for rural welfare, contributions for medical research, support for national institutions, and donations for relief from natural disasters.

The circle is thus complete: what came from the people goes back to the people many times over.



TATA ENTERPRISES

'ஒருவேளை ரயிலைப் பிடிக்க முடியாமல் போய்விட்டால்?' — 'நோ' என்று பெருஞ் சத்தமாய் ஓலமிட்டது பாலகுமாரின் மனம்.

அப்படி மட்டும் ஏதாவது ஆகிவிட்டால்... வீட்டுக்குப் போவதை விடக் கடலுக்குப் போகலாம்.

ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது.

ஜானகி நெளிந்தாள். கணத்துக்குக் கணம் வலி அதிகரித்துக் கொண்டே போயிற்று. இடுப்பைப் பிடித்துக் கொண்டு, தலையைத் திருப்பி, கண்களை இறுக்கி, பற்களைக் கடித்து. ''அவருக்குப் போன் பண்ணச் சொன்னியாம்மா?'' என்று கேட்டாள்.

''பரமசிவம் பண்ணி யிருப்பான். நம்பர் கொடுத்திருக்கேன்.''

வண்டிகள் பத்தடி நகர்வதும் நிற்பதுமா யிருந்தன.

எழும்பூர் அரசினர் மகப்பேறு மருத்துவ மனைக்குப் போய் விட்டாலே போதும் என்று தீர்மானித்தார்கள்.

எதிராஜ் கல்லூரியைத் தாண்டியாகிவிட் டது.

So nsar, yet so far என்ற வாசகத்தின் முழுமையான பொருள் அப்பொழுதுதான் புரிந்தது ஜானகிக்கு. ஆஸ்பத்திரி இதோ கிட்டத்தான் இருக்கிறது. இருந்தாலும் இன்னும் எ....த்....த....னை தூரம்!

நினைவு தெரிந்த நாள் முதலாகத் தன் அம்மாவின் அன்பையும் பாசத்தையும் பிரதி பலித்த பல நிகழ்ச்சிகள் சத்தியராஜின் நினை வில் படமாக ஓடின. ஜுரமாகக் கிடந்த வனைத் தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு இருட்டில் ஒரு மைல் தூரம் நடந்து டாக்ட ரிடம் போனது. எதிர் வீட்டுப் பையனின் புது சைக்கிளை ஆசையுடனும் ஏக்கத்துட னும் இவன் பார்ப்பதை யறிந்து, மறுநாளே தன் கழுத்துச் சங்கிலியை அடகு வைத்துப் புது சைக்கிள் வாங்கித் தந்தது...

ஊர்வலத்தின் வாலாகச் சைக்கிள்கள் நகர்ந்து பின்னால் போலீஸ் வேன் கடந்த தும்—

காரைக் கிளப்பி ஆக்ஸிலேட்டரை மிதித் தார் சத்தியராஜ். அவர் பனகல் பார்க்கைக் கடந்து அசோக்நகரைத் தொட முயன்று கொண்டிருந்த அதே நேரத்தில்—

''சத்தியராஜ் இன்னும் வரலையா?'' ஈனமான, ஏக்கம் நிறைந்த குரலில் கேட் டாள் அன்னபூரணி அம்மாள்.

''இதோ இப்ப வந்துடுவாங்க'' மாமி யாருக்குச் சமாதானமாகச் சொன்னாலும், 'அப்போதே புறப்பட்டவர் ஏன் இன்னும் வந்து சேரலே?' என்று கவலையாயிருந்தது காமினிக்கு.

''சத்...தியா!'' மகனைப் பார்க்கவேண்டும் என்ற தன் இறுதி ஆசை நிறைவேறாமலே அன்னபூரணியின் தலை சாய்ந்தது.

பாலகுமாரனின் நம்பிக்கை செத்து விட்டது. பஸ் 'பல்லவன் டிரான்ஸ்போர்ட் ஆபீஸை'க் கடந்தபோது ரயில் புறப்பட வேண்டிய நேரமாகி விட்டது.

'ஒரு கால் மணி நேரம் — வேண்டாம் ஒரு பத்து நிமிஷம் ரயில் லேட்டாகப் புறப்படக் கூடாதா?'

வால்டாக்ஸ் ரோடில் திரும்பி, ஸ்டாப்பில் பஸ் நிற்கு முன்பே குதித்து, இடித்துத் தள்ளிக் கொண்டு மூச்சிரைக்க ஓடியவனை வரவேற்றது காலி பிளாட்பாரம்.

உறைந்து போய் நின்றான் பாலகுமார்.

நெஞ்சை அடைப்பது போலிருந்தது ஜானகிக்கு. பேசமுடியவில்லை. தொண்டை வறண்டு விட்டது. 'தண்ணீர் வேண்டும்' என்று சைகை காட்டினாள். ஒரே ஆயாசமாக இருந்தது.

பிளாஸ்கில் தண்ணீர் தீர்ந்து விட்டிருந் தது.

''அம்....மா'' முனகினாள். மூச்சிரைத்தது.

ஏகமாய் வேர்த்துக் கொட்டிற்று. ''ஜானு ஜானும்மா....'' துண்டால் வேர்வையைத் துடைத்து விட்டாள் பார்வதி.

ஜானகியின் கண்கள் செருகின.

நெரிசல் குறைந்து விட்டது. டாக்ஸியின் வேகம் அதிகரித்தது.

மருத்துவ மனையின் வாசலை அடைந்த போது ஜானகியின் முனகல் நின்றுவிட்டது. மூச்சும்தான்.

''ஜா... ஜா....'' என்று கதறினாள் பார் வதி.

ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது.

சாப்பிட வந்தவர்: சாப்பிட்டவங்க காசு கொடுத்துட்டு வாசல் வழியாத்தானே வெளியே வருவாங்க? சில பேரைக் கொல்லைப்புற வழியாய் அனுப்புகிறீர்களே, ஏன்?

ஓட்டல் முதலாளி: இவங்களெல்லாம் போராட்ட வீரர்கள். பக்கத்துக் கொட் டகையிலே உண்ணாவிரதம் இருக்கிற வங்க!

கே. உமா
பி.எஸ்ஸி இரண்டாம் வருஷம்
அரசினர் மகளிர் கல்லூரி
கும்பகோணம்



அந்த ஸ்பரிசம்

ஞானம்பாள் செல்வம்

"புள்ளைக்கு உடம்பு சரியில்லே...காய்ச்சல்... ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வந்துடுறேன். தரும ஆஸ்பத்திரி. கொஞ்சம் நேரம் தான் ஆகும்..." — திண்ணையில் முடங்கிக் கிடந்த மாமியாருக்கு முதுகைக் காட்டிச் சொல்லிவிட்டு வீதியில் இறங்கி நடந்தாள் மரகதம்.

காலை ஒன்பது மணிக்கே வெயில் எரித்தது.

கண்ணில் படும் பொருள்களை யெல்லாம் இடுப்பில் இருந்து கொண்டே கையை நீட்டி நீட்டி வாங்கித் தரச்சொல்லி அழுதுகொண்டு வரும் இரண்டரை வயது மகன் மாணிக்கத்தை "ம்...ம்.... வாங்கித் தர்றேன்... வாங்கித் தர்றேன்" என்றே கூறி வாயை அடைத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாய் மணிக்கூண்டின் அருகே நின்ற அந்தப் பெரிய கட்டிடத்துக்கு வந்து சேருவதற்குள் அவளுக்கு வியர்த்துக் கொட்டி விட்டது.

அந்த வானளாவிய கட்டிடத்தை மறைத்து நின்ற கம்பிக் கதவைப் பிடித்தபடி, ஏற்கெனவே குஞ்சு குளுவான்களுடன் பல பெண்மணிகள் தவம் புரிந்து கொண்டிருக்க, மரகதம் அந்தக் கூட்டத்திற்குள் நுழைந்து, கம்பிக் கதவை நோக்கி மெல்ல ஊடுருவத் துவங்கினாள்.

தீபாராதனைக்காகக் காத்து நிற்கும் பக்தர்களைப் போல் உள்ளே எக்கி எக்கிப் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்த அந்தத் தாய்மார்களின் முகங்கள் சட்டென்று மலர்ந்து பிரகாசிக்க... இதோ... அதோ... என்று அலறி அடித்துக் கொண்டு தரையில் மேய்ந்து கொண்டிருந்த குழந்தைகளை மளமளவென்று வாரி இடுப்பில் செருகிக் கொள்ள... அந்தக் காக்கி நிஜார்க்காரன் கதவைத் திறப்பதற்குள் அவனை அடியோடு தரையில் வீழ்த்திவிட்டு, உள்ளே பாய்ந்து விட்டது பெண்கள் வெள்ளம்!

அந்த மனித வெள்ளத்தில் நீந்தி முன்னேறிக் கொண்டிருந்தாள் மரகதம். எதிரே நின்ற அந்தக் குறுகிய சந்திற்குள் ஏற்கெனவே தங்களைத் திணித்துக் கொள்ள முயன்று கொண்டிருந்த சில வேங்கைகளுடன் மீண்டும் போராடி ஒருசில சிராய்ப்புக் காயங்களுடன் வியர்க்க விறுவிறுக்கக் கதறும் குழந்தையோடு அந்தச் சிறிய சந்திற்குள் மரகதம் நுழைவதற்கும், கவுண்டர் பயங்கர அலறலுடன் அதன் ஒற்றைக் கண்ணைத் திறப்பதற்கும் சரியாக இருந்தது.

சொர்க்கத்துக்கு வாங்கப்படும் அனுமதிச் சீட்டைப் போல் முன்னால் நின்றுகொண்டிருந்தவர்களின் முகங்கள் மலர்ந்து பிரகாசிக்க... டிக்கட்டை வாங்கிக்கொண்டு ஒவ்வொருவராய்த் தியேட்டருக்குள் பறக்கத் துவங்கினர்.

அந்தச் சிறிய துவாரத்துக்குள் தரையில் விழுந்த மீன்களாய்த் துடித்துக்கொண்டிருந்த கைகளுடன் போராடிக்கொண்டிருந்த மரகதம் மடித்து வைத்திருந்த இரண்டு ரூபாயை நீட்டி "ஒண்ணு குடுங்க... ஒண்ணு குடுங்க..." என்று குரல் கொடுக்க, உள்ளே இருந்த தாடிக்காரன், மரகதத்தின் சிவந்த பூப்போன்ற கையை உள்ளே இழுத்து வைத்து, மீதத் தொகையுடன் டிக்கட்டை



யும் அவள் உள்ளங்கையில் வைத்து அழுத்தி, மடித்து வெளியே தள்ள... துடிதுடித்துப் போனான் மரகதம்.

அவள் முகம் ஜிவ்வென்று சிவந்து கொதிக்க, கவுண்டருக்குள் மீண்டும் ஆவேசமாய் முகத்தைத் திணித்தாள்.

''ஸார்... கொஞ்சம் வெளியே வர்றீங்களா...?''

''ஏன்?''

''ஒரு முக்கியமான விஷயம்....''

கனத்த கனவுகளோடு வெளியே வந்த தாடிக்காரனை அவன் சற்றும் எதிர்பாராத விதமாய்க் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள் மரகதம்.

''ஏண்டா... ஒன்னை இங்க டிக்கட் குடுக்க உக்கார வச்சிருக்கா... ஒவ்வொருத்தி கையைப் புடிச்சிப் பாக்க உட்கார வச்சிருக்கா...?''

''என்னம்மா... நீ ஒம்பாட்டுக்கு பேசுறே? அதெல்லாம் பார்த்தா... ஏம்மா நீ சினிமாவுக்கு வர்றே?''

''அப்படின்னா... சினிமாவுக்கு வரணும்னா எல்லாத்தையும் உதுத்துப் போட்டுட்டுத்தான் வரணும்ங்கிறியா... நீ....?''

மீண்டும் கையை ஓங்கியவளைப் பின்னால் நின்று கொண்டிருந்தவர்கள் இழுத்துப் பிடித்தனர்.

''சரி...சரி... விடும்மா... ஏதோ...தெரியாத்தனமாப் பட்டிருக்கும். அதுக்குப் போயி இப்பிடி ஆர்ப்பாட்டம் பண்றியே?''

அவ்வளவுதான்! மரகதத்துக்கு வந்த கோபம் கொஞ்ச நஞ்சமல்ல.

''என்னது? தெரியாத்தனமாப் பட்டிருக்குமா? என்னமா வெடுக்குன்னு புடுச்சி இழுத்தான் இந்தப் பொறுக்கி ராஸ்கல்....! சினிமாவுக்கு ஓடியார்றதாலே எவளுக்கும் சூடு சொரணை இருக்காதுன்னு நெனைச்சுக்கிட்டான் போலிருக்கு... அப்படி அவன் கை பட்டு... இவன் கை பட்டு இந்தச் சினிமாப் பாக்கணும்னு எனக்கு ஒண்ணும் அவசியமில்லே... ஒங்க சினிமாவும் சரி... நீயும் சரி... இந்தாய்யா....''

இடிபட்டு, மிதிபட்டு வாங்கிய டிக்கெட்டைச் சுக்கு நூறாய்க் கிழித்து அந்தத் தாடிக்காரனின் முகத்தில் அலட்சியமாய் வீசி எறிந்து விட்டு, தன்மான உணர்வோடு தியேட்டரை விட்டு வெளியேறிய மரகதத்தை, அக்கம் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பெண்கள் அசைவற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்தத் தாடிக்காரன் உட்பட.

அவர்கள் உள்ளங்களில் மரகதம் மலையாய் உயர்ந்து இறுகிக் கொண்டிருந்தாள்.

முன்னோடி!

ஜெகஜீவன்ராம் மீண்டும் இந்திரா காங்கிரஸில் சேரப் போகிறாராம். அவரது ஒரு நிபந்தனைதான் முட்டுக்கட்டையாக இருக்கிறதாம். அந்த நிபந்தனை: அவரது மகன் சுரேஷ் ராமும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுக் கட்சியில் பொதுக் காரியதரிசி பதவியாவது அல்லது அதற்கு இணையான பதவியாவது அவருக்குத் தரப்பட வேண்டும்! ஜெகஜீவன்ராம் ஆளும் கட்சியில் சேரப் போகிறார் என்றால், தேர்தல் வருகிறது என்றுதானே அர்த்தம்!

—'பாதுஷா'





ஸாரி, இடது சாரி!

இடது சாரிக் கம்யூனிஸ்ட் கட்சி அமைத்த ஓர் அரசு, ஒரு பக்கத்துக்குக் கிட்டத்தட்ட பத்தாயிரம் ரூபாய் கட்டணம் வசூலிக்கும் அமெரிக்க மாதப் பத்திரிகையில் விளம்பரம் கொடுக்குமா?


ஏன் கொடுக்காது?

1982 நவம்பர் ரீடர்ஸ் டைஜஸ்ட் பக்கம் 233லிருந்து 264 வரை பாருங்கள்.

32 பக்கங்களுக்கு மேற்கு வங்க சர்க்காரின் விளம்பரம் வந்திருக்கிறது!

—சேலம் பாவை





-இளை. அ. கதிர்வேல்

நட்சத்திர கிரிக்கெட் மாதிரி நம்மூர்







அரசியல்வாதிகள் கிரிக்கெட் ஆடினால்...



"கிருஷ்ணா! கிருஷ்ணா!"

சிறந்த மரமாகத் தேர்ந்தெடுத்து அதில் கிருஷ்ணர் பொம்மைகளை நாளைக்கு ஒன்றாகக் கையால் செதுக்கி உருவாக்குகிறார் பெரியவர் கிருஷ்ணா ராவ். ஒவ்வொன்றும் ஒரு விதத்தில் அழகு கொஞ்சுவதாக இருக்கும் அவர் முதலாளி பிரகாஷ், கிருஷ்ணர் பொம்மைகளுக்கான ஏற்றுமதி ஆர்டர்களைப் பூர்த்தி செய்ய உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடுகிறார். கிருஷ்ணர் பொம்மைகளைத் தானியங்கு முறையில் தயாரிக்க இயந்திரம் ஒன்றைத் தொழிலகத்தில் நிறுவுகிறார். கிருஷ்ணா ராவை ரிடையர் ஆகி கணக்குத் தீர்த்துப் பணம் வாங்கிப் போகச்சொல்கிறார். கிருஷ்ணாராவின் பெரிய குடும்பம் அவரது சொற்பவருவாயை நம்பி இருக்கிறது. எனவே கிருஷ்ணாராவ் கலங்கிப்போய் முதலாளியைக் கெஞ்சுகிறார். பிரகாஷ் பிடிகொடுத்துப் பேசாதிருக்கவே, யூனியன் தலைவர் ராஜசேகரை அணுகுகிறார் கிருஷ்ணா ராவ். அவரை வேலை நீக்கம் செய்ய முதலாளிக்கு உரிமை இல்லை என்றும் அவர் சார்பில் நாம் வாதாடுவதாகவும் கூறும் ராஜசேகர், "உங்க பெண்ணுக்கு வேலை போட்டுத் தரேன், யூனியன் ஆபீஸுக்கு அனுப்பி வையுங்க" என்கிறார்.

பகுதி 3

(ராஜசேகரன் மீசையை முறுக்கிக் கொண்டு குறுக்கே நடந்து, மேடையின் இடது புறத்தில் மேஜைக்கருகே நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் முதலாளியைப் பார்க்கிறார். எதிர் நாற்காலியில் உட்கார்ந்து மேஜை மேலிருந்து சிகரெட் எடுத்துப் பற்ற வைக்கிறான்)

ராஜசேகர்: என்ன ரொம்ப மாறுதல் எல்லாம் கொண்டு வராப்ல இருக்குதே?

பிரகாஷ்: இல்லையே! ஒன்னைக் கேக்காம செய்வேனா ராஜா?

ராஜசேகர்: செய்வ. அதனாலதான் சொல்றேன்.... கிழவனைத் தூக்கப் போறியாமே?

பிரகாஷ்: மோல்டிங் மிஷின் ஒண்ணு வருது.

ராஜசேகர்: மிஷினைப் பத்தி அப்புறம் பேசலாம். கிழவனைத் தூக்கப் போறியா?

பிரகாஷ்: ஆமாம். அவரு ரிட்டயர் ஆக வேண்டிய ஸ்டேஜ் வந்திருச்சு. ரிக்கார்டைப் பார்த்தேன். காண்ட்ராக்ட் ஜாப் மாதிரிதான். எப்ப வேணா நோட்டீஸ் கொடுத்து நிறுத்தலாம். தெரியுமில்லே?

ராஜசேகர்: சேட்டு, இதான் வாணாங்கறது. லேபர் லா தெரியாதவனா நீ? இல்லே, எனக்குத்தான் தெரியாதா?

பிரகாஷ்: இப்ப என்ன பண்ணணும்கறே?

ராஜசேகர் (கண்டிப்பாக): ஒரு மெசின்னா ஒரு மெசின் உள்ள வரக் கூடாது.

பிரகாஷ்: வந்தா?

ராஜசேகர்: கொளுத்திடுவோம்!

பிரகாஷ்: அதனால மானேஜ்மெண்டுக்கு ஏதும் நஷ்டமில்லே. எல்லாம் இன்ஷூர் பண்ணிருக்கோம்.

ராஜசேகர் (கண் சிவக்க): இன்ஷூரன்ஸ் பாலிஸி, ஏஜெண்டு, உன்னே, எல்லாரையும் சேர்த்துக் கொளுத்துவோம். பலப் பரீட்சை பண்ணிப் பார்க்கறியா?

மாறுதல் வரும்



நிபுணர்: பாருங்க, பெரியவரே! இதைத்தான் கண்ட்ரோல் பானல்னு சொல்லுவாங்க. இதிலே பாருங்க ரெண்டு விளக்கு இருக்குது! ஒண்ணு சிவப்பு, ஒண்ணு பச்சை, இது ஆரஞ்சு. உங்களுக்குச் சிவப்பு - பச்சை தெரியுதில்லே?

பிரகாஷ்: இத பாரு, நாங்க பழைய மிஷினை எடுத்துட்டுப் புது மிஷின் வாங்கறோம்.
ராஜசேகர்: என்ன மிஷின்? எனக்கு இன் வாய்ஸ் லிஸ்ட் வேணும். அப்புறம் கிழவனை என்ன செய்யறே?
பிரகாஷ்: இத பாரு ராஜா. உனக்குத் தொழிலாளிங்களோட நல்வாழ்வில இன்ட்ரஸ்ட்தானே?
ராஜசேகர்: சொல்லு.

சுஜாதா

பிரகாஷ்: இந்தா ஷிவாஸ் ரீகல்! வாராவாரம் பிளேன்ல ஒண்ணு வந்து எனக்கு! இது ஒனக்கு!



பிரகாஷ்: எங்கப்பா இந்தத் தொழிற்சாலையை நடத்தியபோது, அப்ப சூழ்நிலை வேற மாதிரி இருந்துச்சு. மார்க்கெட்டே வேறே. எங்கப்பா ஏதோ பழைய டிரெடிஷன்ல ப்ரொடக்டிவிட்டி, எஃபிஷியன்ஸி எதையும் பார்க்காம, குடும்பம் நடத்தறாப்பல ஃபாக்டரியை நடத்திக்கிட்டு இருந்தாரு. காம்படிஷன் இல்லே. ஸெல்லர்ஸ் மார்க்கெட். ஏதோ நஷ்டமில்லாம ஓடிக்கிட்டிருந்தது. இப்ப போட்டி அதிகமாயிருக்கு. போன வருஷத்து பாலன்ஸ்ஷீட்டைப் பார்த்தே இல்லே? முப்பது லட்சம் நஷ்டம். இன்னும் ஒரு வருஷத்துக்குள்ள இழுத்து மூட வேண்டிய ஆக்ஸிஜன் கேஸ் இந்த ஃபாக்டரி! எல்லாருக்கும் வேலே போக வேண்டியது தான். நல்லவேளை, இந்த எக்ஸ்போர்ட் ஆர்டர் வந்திச்சு. இதுதான் நம்மையெல்லாம் காப்பாத்தப் போகுது. ஆனா டெலிவரில அவங்க ரொம்ப கறார். டெலிவரி ஒழுங்காச் செய்யலே, ஏகப்பட்ட நஷ்டம் வந்துரும். அவங்க குறிப்பிட்ட டயத்துக்குள்ள டெலிவரி செய்யணும்னு மெஷின் இல்லாம முடியாது... இத பாரு, நீ ஒரு வயசான கிழவன் கேஸுக்கு ஆர்க்யூமென்ட் பண்ணிட்டு இந்த பாக்டரியையே இழுத்து மூட வேண்டிய நிலைமைக்கு வர மாதிரி அவ்வளவு பிடிவாதமா இருக்கப் போறியா? ஒட்டு மொத்தமான தொழிலாளர்கள் நல்வாழ்வு உனக்கு முக்கியமா, இல்லே ஒரு தனி ஆளோட நல்வாழ்வா? இப்ப இந்த ஆர்டர் வந்து அதை நிறைவேற்றிட்டம்னு ப்ராஃபிட் நிச்சயம் கிடைக்கும். உங்களுக்கு ப்ராஃபிட் ஷேரிங், போனஸ்



கிருஷ்ணராவ் ரிடையர் ஆகவேண்டிய ஸ்டேஜ் (புகைப்படங்கள்: ரங்கேஷ்)

கிடைக்கும். நான் என்ன, எல்லாரையுமா வீட்டுக்குப் போகச் சொல்லப் போறேன்! இள வயசுக்காரங்களை மறுபடி டிரெயினிங் செய்து உபயோகிக்கப் போறேன். ரிட்ரென்ச்மெண்ட் இருந்தா பத்துப் பேர்சண்டுக்கும் குறைவாத்தான் இருக்கும். ஸ்ட்ரெச்சர் கேஸ், ரீடிரெயின் பண்ண முடியாதவங்க — இவங்களை மட்டும்தான் எடுக்கப் போறேன்.


ராஜசேகர்: அதெல்லாம் முடியாது. யாரையும் நீக்கக் கூடாது.

பிரகாஷ்: அப்ப மிஷினுவது கொண்டு வரலாமா?

ராஜசேகர்: இது ஒர்க்கிங் கமிட்டியில் மீட்டிங் போட்டுத் தீர்மானிக்கணும்.

பிரகாஷ்: ஒர்க்கிங் கமிட்டி என்னப்பா ஒர்க்கிங் கமிட்டி? நீதானே எல்லாம்! உன் பேச்சைக் கேக்காம இருப்பாங்களா? இத பாரு, ஒரு ஒப்பந்தம் வெச்சிக்கலாம். ஆரம்பத்தில யாரையும் வேலைல இருந்து நீக்கறது இல்லே. தாத்தாவை எங்கயாவது மூலேல உக்காத்தி வச்சிரலாம். இல்லே, கண்ட்ரோல் பானல் இருக்கு. அதை இயக்கறதுக்கு ரெண்டு முறை

> ரஷ்யப் புரட்சி சமயம். தொழிலாளர்களுக்கு இன்னின்ன வேலை என்றும், சிறிதே கல்வியறிவு பெற்றவர்களுக்கு இன்ன வேலை என்றும், நிரம்பக் கல்வியறிவு பெற்றவர்களுக்கு இன்னின்ன வேலை என்றும் ஒதுக்கினார் லெனின். மாணவர்களுக்கு மட்டும் எந்தவித வேலையையும் ஒதுக்காமல் சென்று விட்டார். ''சமுதாயப் பொருளாதாரப்புரட்சிக்கு நாம் செய்ய வேண்டியது ஒன்றுமே இல்லையா'' என்று ஆச்சரியம் அடைந்த மாணவர்கள் லெனினிடம் சென்று வினவினர். லெனின் புன்னகை மாறாமல் கூறினார்: ''படிக்கின்ற வேலையே உங்களுக்குப் போதுமானது. அதை ஒழுங்காகச் செய்து வாருங்கள். எதிர்காலத்தில் நீங்கள் ஒரு அறிஞராகவோ, மருத்துவராகவோ, தொழில் நுட்ப வல்லுனராகவோ ஆகும் போது உங்களை அறியாமலேயே நீங்கள் சமுதாயப் பொருளாதாரப் புரட்சிக்கு உதவியவர்களாவீர்கள்!''
>
> -அனந்தபத்மநாபன்
> இயந்திரவியல் இரண்டாம் ஆண்டு
> தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அரசினர்
> தொழில் நுட்பக் கல்லூரி வேலூர்



இருக்கு. ஆட்டோன்னு போட்டா தானாகவே செய்து கொடுக்கும். ஆனா தாத்தாவுக்கு வேலை கொடுக்கறதுக்காக அதை மேன்யூவல் மோடிலே போட்டு, பட்டனை அமுக்கிக்கிட்டு இருக்கும்படி வேலை போட்டுத் தர்றேன். அவரு ரிடையர் ஆனப்புறம் ஃபுல்லா ஆட்டோவிலே போட்டுரலாம்.

ராஜசேகர்: பார்க்கலாம்; எல்லாம் யோசிக்க வேண்டியதுதான்.

பிரகாஷ்: நான் உன்னை அவசரப்படுத்தலை ராஜா. நல்லா யோசிச்சுப் பாரு. (மேஜையிலிருந்து பாட்டிலை எடுத்து) இந்தா ஷிவாஸ் ரீகல். வாரா வாரம் பிளேன்ல ஒண்ணு வருது எனக்கு. இது ஒனக்கு. எடுத்துக்க. (வற்புறுத்திக் கொடுத்தவாறு) மெஷினை மட்டும் விட்டுரு.

ராஜசேகர் (அதை அலட்சியமாக எடுத்துக் கொண்டு): அப்ப வர்றேன். நாளைக்கு இதைப்பத்தி தீர்மானமா முடிவெடுத்துச் சொல்றேன்.

• • •

பாகவதர்: ராஜசேகரன் கிருஷ்ணா ராவிடம் வந்து நடந்ததைச் சொன்னான்.

• • •

ராஜசேகர்: கை குடு காம்ரேட். வெற்றி!

கிருஷ்ணா ராவ்: என்ன?

ராஜசேகர்: சேட் ஒத்துக்கிட்டான். உன்னை யாரும் ரிடையர் பண்ணப் போறதில்லை.

கிருஷ்ணா ராவ்: அப்ப அந்த மிஷின் வரப் போறதில்லையா?

ராஜசேகர்: அது வேறே இஷ்யூ! இப்ப உனக்கு வேலை போகலை. அதானே வேண்டியது. உன் டூட்டிலே கொஞ்சம் மாறுதல் கொண்டு வருவாங்க. வரட்டும். வேலை போகாததுதானே முக்கியம்.

கிருஷ்ணா ராவ்: மாறுதல்னு?

ராஜசேகர்: அந்த டீடெய்ல்ஸ் எல்லாம் புரொடக்ஷன்காரங்க கிட்டக் கேட்டுக்க. உனக்கு இத்தனை செஞ்சதே பெரிசில்லையா?

கிருஷ்ணா ராவ்: (பொம்மையை எடுத்து) எல்லாம் கிருஷ்ணர் அருள்!

ராஜசேகர்: கிருஷ்ணன் அருள் இல்லை. யூனியன் அருள்!

கிருஷ்ணா ராவ்: மெஷின் வராதில்லையா?

ராஜசேகர்: மெஷின் வருது. இல்லை—அதைப் பத்தி உனக்கென்னய்யா கவலை? சொன்ன வேலையைச் செய்துர வேண்டியதுதானே? மாசா மாசம் சம்பளம் வரும். அது போதும்லே?

கிருஷ்ணா ராவ்: எனக்கு அந்தச் சரண்டற வேலையைத் தவிர வேறு ஏதும் தெரியாதே!

ராஜசேகர்: எல்லாம் சொல்லிக் கொடுப்பாங்க. கவலைப்படாதே... அப்புறம் உன் டாட்டருக்கு வேலை வேணுமின்னியா. சாயங்காலம் அனுப்பு.

கிருஷ்ணா ராவ்: எனக்கு வேலை போகலேன்னு அனுப்பத் தேவையில்லை ராஜசேகர், என்

வாம் உன் தயவாலே நல்லபடியா ஆய்டுத்து. படிப்பை முடிச்சரட்டும். ப்ளஸ்-டு படிக்கிறது.

ராஜசேகர்: ஓ. அப்படியா? இன்னும் கொஞ்சம் நாளாகும் வேலைக்கு வர.

(ராஜசேகரன் செல்கிறான்.)

• • •

பாகவதர்: கொஞ்ச நாள்ல மெஷின் வந்தது.

(மிருதங்க ஒலி துடிப்புடன் கேட்க, இரண்டு பேர் ஒரு பானலை எடுத்து வருகின்றனர். அதன் மேல் இருக்கும் பாலிதின் கவரை நீக்கி, அதில் இருக்கும் குமிழ்களைத் திருகி, ஒரு புத்தகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க, ராவ் ஆவலாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார். கூடவே நிபுணர் ஒருவர் வந்து விளக்க ஆரம்பிக்கிறார்.)

நிபுணர்: இதுல டெம்பரேச்சரை ஸெட் பண்ணணும். இதுல ரேட். இதுல தெர்மோ கப்பிளை கனெக்ட் பண்ணணும். இதான் கண்ட்ரோல் பானல்... யார் ஆபரேட் பண்ணப் போறாங்க?

ஒருவன்: இதோ, இவர்தான்.

நிபுணர்: வாங்க பெரியவரே. ஏம்பா, இதை விட கிழமா உங்களுக்கு ஆள் அகப்படலையா? ரொம்ப சோடா பாட்டிலா இருக்காரே?

முத்து: இவரைத்தான் ட்ரெய்ன் பண்ணணும்னு முதலாளி சொல்லியிருக்காரு. தாத்தா, பாத்து வாங்க.

நிபுணர்: பாருங்க, பெரியவரே. இதைத்தான் கண்ட்ரோல் பானல்னு சொல்லுவாங்க. இதில பாருங்க, மூணு விளக்கு இருக்குது. ஒண்ணு சிகப்பு, ஒண்ணு பச்சை, இது ஆரஞ்சு. உங்களுக்குச் சிவப்பு-பச்சை தெரியுதில்லே?

கிருஷ்ண ராவ்: தெரியும்பா, சொல்லு.

நிபுணர்: இத பாருங்க, இந்தப் பொத்தான், இதை அமுக்கினா மிஷினுக்குள்ள ப்ராஸஸ் ஸ்டார்ட் ஆகும். டெம்பரேச்சர் ஸெட் பாயிண்ட்ஸ் எல்லாம் முன்னாலேயே ஸெட் பண்ணி வெச்சிருக்கோம். அதெல்லாம் நீங்க தொடவேண்டியதில்லே. நீங்க என்ன பண்றீங்க....

கிருஷ்ண ராவ்: பொத்தானை அமுக்கறேன்.

நிபுணர் (வேகமாகப் பேசுகிறார்): அமுக்கினா பிற்பாடு மோல்டிங் ப்ராஸஸ் துவங்கும். ரா மெட்டீரியல்லாம் டூல் வழியா இன்ஜெக்ஷன் பண்ண ஆரம்பிச்ச கொஞ்ச நேரத்துல இந்தப் பச்சை விளக்கு எரியும். அதுக்கு அப்புறம், இதோ பாருங்க, 'எஜெக்ட்'னு எழுதியிருக்கு பாருங்க, இந்த பட்டனை அமுக்கிட்டா சூட்டில ஒரு பொம்மை கிருஷ்ணர் வந்து விழும். டெம்பரேச்சர் அலார்ம், ப்ரெஷர் அலார்ம், வாக்கும் லீக் அலார்ம், ராமெட்டீரியல் லெவல் அலார்ம் இதெல்லாம் பானலுக்குள்ள இந்தக் கண்ணாடிக்குள்ள தெரியுது பாருங்க. இதான். இதுல ஏதும் எரியக் கூடாது. அப்புறம் ஏதாவது சந்தேகத்துக்கு இடமா ஆச்சு, புகைஞ்சுது, வாசனை வந்திச்சு,



அதுவும் இதுவும்!

வானவெளி ஷட்டில் 'சேலஞ்சரி'ல் பயணம் செய்து திரும்பிய டாக்டர் ஸாலி ரைட் என்னும் அமெரிக்கப் பெண்மணியைச் சமீபத்தில் ஒரு வரவேற்பில் பத்திரிகையாளர்கள் ''உங்களுக்குப் பயமாக இருந்ததா?'' என்று கேட்டதற்கு அவர் சொன்னார்: ''பயமா! நியூயார்க் நகர டாக்ஸிகளுக்கு உறைபோடக் கூடக் காணாது சேலஞ்சர்!''

—ரீஸர்ச் அண்ட் ரெஃபரன்ஸ்

இந்த மாதிரி எமர்ஜன்ஸியின்போது இந்த மஷ்ரும் ஸ்விட்சை மேலே தட்டிருங்க. இது கவுண்டர் மெஷின். அவர்-மீட்டர். மற்றபடி வேற ஒண்ணும் கிடையாது. மிஷின்ல எல்லாம் ரொம்ப சுலபம். ஆனா அலாரம் பைபாஸ் பண்ணிடாதீங்க. இன்டர் லாக்கெல்லாம் கண்டிஷன்ல இருக்கணும். இல்லேன்னா, திறந்து கிறந்து வெச்சீங்கன்னா, உங்களையும் சேர்த்து இழுத்துப் போட்டு சப்பக்குனு கிருஷ்ணனா ஆக்கிடும். பவர்ஃபுல் மெஷின்!

(எல்லோரும் போய்விட, ராவ் மெஷினையே வெறித்தவாறு நிற்க, முதலாளி வருகிறான்.)

பிரகாஷ்: என்ன ராவ், எல்லாம் கேட்டு வெச்சுக்கிட்டீங்களா?

கிருஷ்ண ராவ் (திகைப்பில்): முதலாளி, எனக்கு ஒண்ணும் புரியலே. இந்த மெஷின்ல அவர் சொன்ன மாதிரி செஞ்சா என்ன ஆகும்?

பிரகாஷ்: பொம்மை வரும். மூணு நிமிஷத்துக்கு ஒரு பொம்மை.

கிருஷ்ண ராவ்: எனக்கு வேண்டாம் முதலாளி. இதைப் பார்த்தாலே எனக்குப் பயமா இருக்கு. அவர் சொன்னதில ஒரு அட்சரம் புரியலே. என்னமோ இதுங்கறார், டெம்பரேச்சர்ங்கிறார், சூட்டுங்கறார், பூட்டுங்கறார். எனக்குத் தலைகால் புரியலே. எனக்கு வேற வேலை ஏதாவது குடுங்கோ.

பிரகாஷ்: வேற வேலை எல்லாமே இந்த ஃபாக்டரியில இப்படித்தான் இருக்கப் போகுது, மிஸ்டர் ராவ். அதான் நான் சொன்னேனே.

கிருஷ்ண ராவ்: கையால செய்யும்படியா, மூளை தேவைப்படறதா ஒண்ணுமே இல்லையா?

(தொடரும்)

ஒவ்

இன்று அத்தனை அவசரம் இருக்கவில்லை. எல்லாவற்றிலும் எருமை வேகம்... எழுந்திருந்தது... காப்பி குடித்தது...குளித்தது... சாப்பிட்டது... எதிலும் ஒரு நிதானம்... தாமதம். இன்கம்டாக்ஸ், பாங்க் என்று இப்படி இரண்டு மூன்று இடங்களுக்குப் போக வேண்டிய வேலை இருந்தது.

இன்று லீவு போட்டதே இதை யெல்லாம் சரிக்கட்டத்தான்.... அந்த ஆரம்ப சாவதானம் சோம்பலாக மாறிவிட... சரி ஒரு தூக்கம் போடலாம்.... அடுத்த வாரம் மறுபடி ஒரு நாள் லீவு போட்டு....

கீழே ஏதோ சப்தம் கேட்டது. லாரியோ பஸ்ஸோ வந்து நிற்கிற ஓசை... 'ட்ரும்... ட்ரும்....' என்று அதன் உறுமலும், அதிர்வும் விடாமல் கேட்டபடி இருக்க.... எழுந்து வெளியில் வந்தேன். லாரிதான். பெரிய லாரி.

பின் பக்கம் தடுப்புப் பலகையை 'மடேர்' என்று தள்ளிவிட்டு ஏழெட்டு ஆட்கள் இறங்கிக்கொண்டிருந்தார்கள். கேட்டருகில் வயதான ஒருவர் நின்றிருந்தார். மெலிந்த தேகம்... உயரம்... உள்ளே. கீழ் வீட்டைக் கவனித்தபடி இருந்தார்.

''.....யெஸ்....''

பார்வை அப்படியே ஏறி என்னிடம் வந்தது. அங்கிருந்தே ஏதோ சொல்ல முயன்றார். குரல் எட்டவில்லை. 'ஒரு நிமிஷம்' என்கிற மாதிரி ஜாடை காட்டி, வாயிலிருந்த புகையிலையைத் துப்பினார். ஒரு உரிமையோடு கேட்டைத் திறந்து மேலே வந்து வாசலில் கொஞ்சம் தயங்கினார். கோலத்தைப் பார்த்தார். செம்மண்ணைப் பார்த்தார்.

''....நீங்கள் தமிழா....?''

''....ம்.....''

''அதான் வாசல்லே இருக்கிற கோலம் சொல்லிடறதே! இந்தப் பக்கமும் கோலம் போடறா.... சின்னதா ஒரு கையகலத்துக்கு... கோலமா அதெல்லாம்... இந்த மாதிரி... பெரிசா... அழகா....''

ஒருவித சிநேகத்துடன் சிரித்தார். சிரித்தபடியே உள்ளே நுழைந்து, ஒரு விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டினார்.

''....நான் அபர்ணா பாக்கர்ஸ்லேர்ந்து வரேன்.... கீழ் போர்ஷன்லே ஒருத்தர் இருக்காரே....?''

ஜி. நாராயணன்



''...ஆமாம்.... நாகராஜன்....''

''....ம்.... நாகராஜன்தான்....''

''....அவர் ஊரிலே இல்லியே.... குடும்பத்தோட லீவில் போயிருக்கார்...''

''எனக்குத் தெரியும்.'' கிழவர் கொஞ்சம் நிறுத்தினார். ''...அவருக்கு விஜயவாடாவுக்கு மாற்றல் ஆயிடுத்து....''

''....அட....!''

''...உங்களுக்குத் தெரியாதா?....?''

''ம்ஹூம்.... இப்ப — இதுவரையிலும் தெரியாது.''

''...ஆச்சரியம்தான். ஒரே வீடு... கீழே-மேலேன்னு இருக்கிற ரெண்டு பேர்... அவருக்கு டிரான்ஸ்ஃபர் ஆனது உங்களுக்குத் தெரியாது.....!''

''....சொன்னாத்தானே தெரியும். சொல்லலே.... தெரியாது....''

''...உங்களுக்கு ஏன் சொல்லாமல் விட்டுட்டார்?''

''தெரியல்லே.. எப்பவும் போல, அவன் பின்னே சாவியைக் கொண்டு வந்து கொடுத்தான்.... சரி, ஊருக்குப் போறான்னு நான் நினைச்சண்டு இருக்கேன்....''

''....ஊருக்குப் போறவனுக்கு வீட்டுச் சாவியை ஒருத்தர் கிட்டே கொடுக்கணும்னு தெரிஞ்சிருக்கு... டிரான்ஸ்பர் ஆயிடுத்துன்னு ஒரு வார்த்தை சொல்லத் தெரியல்லே... ...எங்க ஆபீசுக்கு, சாவியோட ஒரு தடவை லெட்டர் எழுதி... இன்னொரு ரிமைண்டர் போட்டு... 'கவர்னர்பேட்டில் வீடு பார்த்தாச்சு. சாமானெல்லாம் ஒழுங்கா வந்து சேரணும்'னு எங்களுக்கு எழுதின மாதிரி உங்களுக்கும் ரெண்டு வரி எழுதியிருக்கலாம்....''

முன்னாள் ஜனாதிபதி சஞ்சீவ ரெட்டி ராஷ்டிரபதி பவனை விட்டு வெளியேறிய போது இந்திரா காந்தியிடம் கூறிய வார்த்தைகள்:

''ஜனநாயகத்தை அழித்து விட வேண்டாம். ஏனெனில் அதுதான் நான் ஜனாதிபதி பதவியை அடைவதற்கும், நீங்கள் ஆட்சியை மீண்டும் பிடிப்பதற்கும் உதவியது.''

—காயத்ரி



கிழவர் என்னையே சற்று பார்த்தபடி இருந்தார். பிறகு பால்கனிக்குப் போனார். அங்கிருந்தே கூலியாட்களிடம் இரைந்தார்.

''சப் டீக் ஹை... கோலோ....''

நாகராஜனை மனத்துக்குள் நான் இன்னமும் வசை பாட.....

''**....யா**ரு வந்திருக்கா....?''

கமலா எதிர் சோபாவில் வந்து உட்கார்ந்தாள்.

''...நாகராஜனுக்கு டிரான்ஸ்ஃபர் ஆயிடுத்து. விஜயவாடா.... சாமான்களை எடுத்துண்டு போறதுக்கு லாரி வந்திருக்கு....''

''...நம்ப கிட்டச் சொல்லல்லியே....!''

''வேண்டாம்னு விட்டுட்டான்....''

''அவருக்கு ஒண்ணும் தெரியாது. அப்பாவி. அந்த மாமிதான் மகா அழுத்தம்... எல்லாத்தையும் மூடி மூடி வைச்சு... ஒரு புடவை வாங்கினால்கூட, அதிலே ஒரு ரகசியம்...''

பால்கனியிலிருந்து கிழவர் திரும்பி வந்தார். கமலாவைப் பார்த்துக் கைகளைக் கூப்பினார். சிரித்தார்.

''...என் வொய்ஃப்... கமலா....''

கிழவர் நெற்றியைச் சுருக்கினார். அப்புறம் புருவம், கண் எல்லாம் சுருங்கியது. கொஞ்சம் கமலாவின் அருகே சென்றார்.

''...எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு! ....ம்.... சட்டென்று நினைவு வர மாட்டேங்கிறது.... வயசாயிடுத்து... ஏதோ கல்யாணத்திலே.... எங்கேயோ பார்த்திருக்கேன்... வந்து.... உங்களுக்கு ஊர் கல்லிடைக்குறிச்சியா?''

''...இல்லே... தஞ்சாவூர்ப் பக்கம்...''

''தஞ்சாவூரா?''

''நேமம்.''

''ஆமாம்.... அங்கே..... நீங்க....?''

''அப்பா பேரு ராமரத்னம்.....''

''ராமரத்தினம் பொண்ணா நீங்க? சரியாப் போச்சு...! அதான் பார்த்த மாதிரி இருக்கே... யார்ரு யார்ருன்னு மண்டையைக் குடைஞ்சுக்கறேன்... அந்தப் பேச்சு... நடை.... சிகப்பு.... உங்க... குடும்பமே சிகப்புன்னா....''

கமலா கண்களை மூடிக் கொண்டு விட்டாள்.... ஆகாயத்தில் பறக்கிற மாதிரி முகத்தில் ஒரு பெருமை.... பரவசம்... பிறகு என்னைப் பார்த்தாள்... தயங்கினாள்.

''... அப்பாவைச் சிகப்புன்னு சொல்ல முடியாது.... இருந்தாலும் கறுப்பிலே சேர்த்தியில்லே.....''

''....எனக்குத் தெரியாதா ராமரத்தினத்தை... சிகப்புதான்... உன்னோட பார்க்கிறபோது வேணா கொஞ்சம் நிறம் மட்டுன்னு சொல்லலாம்.... மற்றபடி....''

''என்னமோ ...அப்பாவே எனக்கு மறந்து போயிடுத்து....''

''...அது எப்படி மறக்கும்?''

''...அஞ்சாறு வருஷம் ஆயிடுத்து மாமா.. அப்பா.....''

சட்டென்று கமலா கண் கலங்கினாள்.

''....யாரு.... ராமரத்தினமா போயிட்டான்.... ஏய்.... ஏய்.... என்னடா இது...''

துவண்டாற்போல் கிழவர் சோபாவில் சாய்ந்தார். ஒரு விநாடி நேரம் இமைக்காமல் கமலாவையே பார்த்தார். ''...உனக்குத் தெரியாதும்மா... ஊர்ப் பக்கம் வந்தால், சாப்பிடாமப் போகக் கூடாதுன்னு வழியை மறிச்சு இழுத்துண்டு போவான். அது ஒரு காலம்... உன் அம்மா பண்ணிப் போட்ட கத்தரிக்காய் ரசவாங்கி, பருப்பு உசிலிக்கு ஈடு கிடையாது... காப்பிக்கும் டிபனுக்கும் என்ன குறைச்சல்... சாப்பிட வயிறுதான் ரெண்டு வேணும்...''

இவ்வளவு நேரம் கழித்து, கமலா என்னிடம் திரும்பினாள். ''அவர்கிட்டே சொல்லுங்கோ...இன்னிக்கு இங்கேயே சாப்பிட்டுப் போகலாம்....''

''வேண்டாம்மா... இன்னொரு நாளைக்கு வரேன்.... இப்ப வேலை நிறைய இருக்கு.''

எழுந்தார். கீழே இறங்கி... நானும் அவர் கூடவே எழுந்து இறங்கி....

கிழவர் மேலே வந்தது...உட்கார்ந்தது... பேசினது எல்லாவற்றுக்குமாக எத்தனை நேரம் ஆகியிருக்கும்...?அரை மணி இருக்கலாம்.... அதற்குள் அங்கே அத்தனையும் எடுத்து... வைக்கோல் வைத்துச் சுற்றி... சாக்கைப் போட்டுத் தைத்து....

இது மனுஷ வேகம் இல்லை... ராட்சத வேகம்.... ஒவ்வொருவருக்கும் ஆயிரம் கை இருப்பது போல் ஒரு பிரமை. அத்தனை பரபரப்பு... அதற்காக ஓர் இடத்தில் வைக்கோல் நீட்டிக் கொண்டிருந்தது... தையல் விட்டிருந்தது என்றில்லை... சுத்தமானவேலை. இருந்தும், கிழவர் சத்தம் போட்டார். பாத்திரங்கள் இருந்த பெட்டி ஓசைப்பட்டது என்று மீண்டும் பிரிக்கச் சொல்லி... உள்ளே இன்னும் வைக்கோல் போட்டு... மறுபடியும் மூடி....

'பாக்கிங்' மூடிய மூடிய, முன் அறையில் கொண்டு வந்து வைத்து, கொலுவாக அடுக்கினார்கள். ஒன்று - இரண்டு - மூன்று என்று வரிசையாக நம்பர் போட்டு வந்தார்கள்.... 'முப்பத்தாறு எண்களுக்கும் ஒரு லிஸ்டு தயாரித்தார்கள். பீரோ, ப்ரிஜ், டி.வி.... டைனிங் டேபிள்... சோபா செட்., லாரியில் ஏற்றும்போது ஒருவன் கூடவே நின்று, லிஸ்டில் 'டிக்' செய்து.....

''...எதுக்கு மூணு காப்பி எடுக்கணும்?'' கிழவர் கேட்டார்.

''...ஒண்ணு இன்ஷூரன்ஸ் கம்பெனிக்கு பார்ட்டிக்கு ஒண்ணு... நமக்கு ஒண்ணு...''

டார்பாலின் போட்டுக் கட்டிய பிறகு, ஒருவன் உள்ளே வந்தான். அலமாரியின் அடியில் போட்டு எண்ணெய்ப் பிசுக்கேறின நியூஸ் பேப்பர்,சணல், கூளம் என்று மீதம் இருந்ததையெல்லாம் அள்ளித் திரட்டினான்.குப்பைத் தொட்டிக்கு எடுத்துப் போனான்.

வீடு 'ஹோ' வென்று கிடந்தது.

கிழவர் இரண்டு கைகளையும் கூப்பினார்.

''....வரட்டுமா....''

சிரித்தார். லாரியில் முன் பக்கம் போய் உட்கார்ந்தார். 'டாடா' காட்டினார்.

நாலைந்து நாட்கள் ஓடிவிட்டன.

வாசலில் 'சடசட'வென்று இரைச்சல். ஓர் ஆட்டோ வந்து நிற்க....

முதலில் நாகராஜன் இறங்கினான். அடுத்து அவன் மனைவி... பையன்... இரண்டு பெட்டி.... படுக்கை.... கூடை......

''....மேலே போய்ச் சாவி வாங்கிண்டு வா.....''

நாகராஜன் பையனிடம் சொன்னது காதில் விழுந்தது.... சாமான்களை விஜயவாடா அனுப்பிவிட்டு இவன் எதற்காக வந்து நிற்கிறான்?

பையன் மேலே ஏறி வருவது தெரிந்தது.

''....அங்கிள்.... சாவி....''

''....விஜயவாடா...ஊர் எல்லாம் எப்படி இருக்கு.... சுத்திப் பார்த்தியா?''

''...நாங்க பெங்களூர் போயிருந்தோம்.''

''...அப்பா ஜாயின் பண்ணியாச்சா இல்லியா?''

பையன் புரியாமல் கொஞ்சம் யோசனை செய்தான்.

''...உங்க அப்பாவுக்கு விஜயவாடா டிரான்ஸ்ஃபர் ஆயிருக்கு இல்லியா?... அங்கே ஜாயின் பண்ணியாச்சான்னு கேட்கிறேன்.''

''இல்லியே.... டிரான்ஸ்ஃபர் இல்லைன்னு அப்பவே முடிவு ஆயிடுத்தே... இன்னும் ரெண்டு மூணு வருஷத்துக்கு அசைக்க மாட்டோம்னு சொல்லியிருக்கா... நீங்க சாவி தரேளா? கீழே வெயிட் பண்றா....''

''...உங்களுக்கு மாற்றல் ஆயிடுத்துன்னு, அபர்ணா பாக்கர்ஸ்லேருந்து ஒரு கிழவர் வந்து,எல்லாச் சாமான்களையும்'பாக்'பண்ணி லாரியில் கொண்டு போய்.....''

''....நோ.....''

பையன் கொஞ்சம் பெரிதாக இரைந்தான். பிறகு நாகராஜனைப் பார்த்துக் கத்தினான்.

''....டாடி.... இந்த அங்கிள் என்னமோ சொல்றார்.... நம்ம வீட்டுச் சாமான்களை எல்லாம் யாரோ லாரியில் கொண்டுபோய்...''

புரிந்துகொள்ள நாகராஜனுக்குக் கொஞ்ச நேரம் ஆயிற்று... பிறகு கண்களில் கோபம், எரிச்சல் எல்லாம் வெளிப்பட... வேகமாக மேலே வர ஆரம்பித்தான்.

ஒரு கிழிசல் துணி, காகிதம் கூட இல்லாத வீடு கண் முன்னால் வந்து நின்றது.

''...சப் டீக் ஹை... கோலோ...''

''...புதுசு புதுசா வழி கண்டு பிடிச்சுத் திருடறான்....''

வயதான மெலிந்த உருவம் தெரிகிறது. ஒட்டின வயிற்றைத் தொட்டுக் காட்டுகிறது.... '... என்ன குறைச்சல்... சாப்பிட வயிறுதான் ரெண்டு வேணும்....' கடைசியில் ஒரு ஜான் வயிற்றை வைத்துக் கொண்டு அத்தனையையும் விழுங்கிவிட்டாரே!

இனி....?

போலீஸ் ஸ்டேஷன்... விசாரணை... அலைச்சல் எல்லாம் இருக்கிறது....

இதற்கெல்லாம் என்றைக்கு லீவு போடலாம்?

உத்தமமான முதலீட்டின் சின்னம்



யூனிட்டுகள்

ஆம் நீங்கள் எதிர்பார்க்கும் பாதுகாப்புடன் அதிக வருமானத்தைத் தரக் கூடிய முதலீடு யூனிட்டுகள்தான்.

யூனிட்டுகள் தரும் வருமானம் வருடாவருடம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. 1982-83 ஆம் ஆண்டுக்கான யூனிட்டுகள் அளித்த டிவிடெண்ட் 13.5%.

மேலும் யூனிட்டுகள் பிரத்யேக வருமானவரி மற்றும் சொத்துவரி சலுகைகளை அளிக்கிறது.

முதலீட்டுக்கு முழுப்பாதுகாப்போடு உங்களுக்குத் தேவையானபோது எளிதில் பணமாக்கும் வசதியை அளிக்கும் யூனிட்டுகளுக்கு இணையான முதலீடு வேறு கிடையாது.

இப்பொழுதே யூனிட்டுகளில் முதலீடு செய்து மேற் கண்ட நன்மைகளை பெறுவீர்.

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.

யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா

(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்) தலைமை அலுவலகம் : பம்பாய்

பிராந்திய செயலகம் : ரெஜீனா மான்ஷன், 46 செகண்ட் லைன் பீச், சென்னை-600 001. போன் : 27433

தமிழ் நாட்டிலுள்ள எங்கள் முக்கிய பிரதிநிதிகள் : ● கோவை, பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கு : திரு. ஏ. தனபால், 10-ஜே. ஹூஸார் ரோடு, கோவை-641 018. போன்-34776 (அலு). ● மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு : திரு எம். இராமமூர்த்தி, 30, எல். ஐ. சி. காலனி, மதுரை-625 002 போன் : 30160 (அலு) ● சேலம் மாவட்டத்திற்கு : திரு என். கே. இங்கர்சால், 155, கவர்னரம்பிகை தெரு, அன்னதானப்பட்டி, சேலம்-636 002. போன்-64302 (வீடு) ● தஞ்சை மாவட்டத்திற்கு : திரு கே. முத்துசாமி, 52-ஏ, வ. உ. சி. நகர், தஞ்சை-613 007. போன்-1224 (வீடு) ● நெல்லை மற்றும் குமரி மாவட்டங்களுக்கு : திரு எம். எம். காஜா, பாக்காலி பில்டிங் அனெக்ஸ், 41-B, திருவனந்தபுரம் நெடுஞ்சாலை, எல். ஐ. சி. அருகில், பாளையங்கோட்டை-627 002. போன்-4520 (அலு) 5395 (வீடு)

Sista's-UTI-128/83-TM A

பாங்க் மோசடிகளைத் தவிர்க்க முடியுமா?

“தவறு செய்யாதவர்கள் உலகத்தில் யார் உளர்?'' என்று சீதாபிராட்டி அனுமானிடம் சொல்லுவதாக ராமாயணத்தில் ஒரு கட்டம் வருகிறது. இது அனைவருக்கும் பொருந்தும் என்றாலும் அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு — குறிப்பாக பாங்கில் வேலை பார்ப்பவர்களுக்கு — மிகவும் பொருந்தும். ஏனென்றால் முழுக்க முழுக்க எண்களையே பார்த்து வருவதால் சிறிய கவனக் குறைவும் பெரிய தவறுக்கு வித்தாக அமைந்து விடும்.

ஆனால் ஒன்று: தற்செயலாக நடந்த தவறு வேறு. திட்டமிட்டு இழைக்கப்படும் தவறு வேறு.

சில வாரங்களுக்கு முன்பு கிட்டத்தட்ட இரண்டரைக் கோடி ரூபாய் வரை பாங்குகளைச் சிலர் மோசடி செய்ததாகவும் போலீசார் ஆராய்ந்து வருவதாகவும் செய்தி வந்தது. கோடிக் கணக்கில் மோசடியாவது! இது எப்படிச் சாத்தியம்?

சென்னையைத் தலைமையகமாகக் கொண்ட பாங்க் அதிகாரி ஒருவர் தெரிவித்த தகவல்: ''குறிப்பிட்ட கரண்ட் அக்கவுண்ட் ஒன்றில் நிறைய வரவு செலவு இருந்து வந்திருக்கிறது. வேறு பாங்கின் செக் — அதுவும் 'பே-ஆர்டர்'ஐ — அடிக்கடி கணக்கில் வரவு வைத்து எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். (வெளியூருக்கு டிராஃப்ட் மாதிரி உள்ளூரில் 'பே ஆர்டர்') திடீரென்று ஒரு நாள் அந்த பாங்க் தங்களுடைய செக்கையே திருப்பி விட்டது! (செக்கைத் திருப்புவதற்கான 20 காரணங்கள் இருந்தும், தனியாக ஒரு காரணம் போட்டிருந்தார்களாம்.) இது தவறு என்று நாங்கள் அந்த பாங்குக்கு வக்கீல் நோட்டீஸ் விட்டிருக்கிறோம்.''

இந்தியாவின் மிகப் பெரிய வங்கியின் அதிகாரிகள் கூறுவது என்ன? விசாரித்துச் சேகரித்த தகவல்கள்:

'ஏற்கெனவே வடக்கில், இந்தப் பாங்கின் 'சப்சிடரி' வங்கியில் ஒரு கம்பெனி மோசடி செய்து வந்திருக்கிறது. அக்கம்பெனியின் ஆட்கள்தான் சென்னைக் கிளையில் நிறைய டெபாசிட் செய்து வந்திருந்தார்கள். எக்கச்சக்கமாக டெபாசிட் இருந்ததால் பின் தேதியிட்ட 'பே ஆர்டரை'க் கொடுத்து வந்திருக்கிறார்கள். இத்தகைய 'செக்'குகளின் தொகை மிக அதிகமாக வருவதும் போவதுமாயிருந்ததால், 'கிளியரிங்'கில் ரிசர்வ் பாங்க் லேசாகச் சந்தேகப்பட்டு, எங்களை விசாரிக்கச் சொல்லி யிருக்கிறார்கள். பிறகு எந்தக் கிளை யென்று கண்டுபிடித்து, இத்தகைய முறைகேடுகளை நிறுத்தி விட்டோம்.''

''என்னதான் பாங்கே கொடுக்கும் செக் என்றாலும் அது பாஸ் ஆகுமுன் கோடிக் கணக்கில் பணம் எடுத்துக் கொள்ள அனுமதித்தது தவறு: பாங்க் உதவிப் பொது மேலாளருக்குக் கூட இதுபோல் அனுமதி வழங்க (அதாவது க்ளியர் ஆகுமுன்) முப்பது லட்சம் வரைதான் எல்லை இருக்கிறது. ஒரு சாதாரணக் கிளை மேலாளர் எப்படி இது போல் அனுமதி தந்து, பணம் எடுத்துக் கொள்ள வழி வகுக்கலாம்?''

இன்னொரு விஷயம். பிசினஸ் அக்கௌண்டில் கம்பெனி, பார்ட்னர்ஷிப்பில் லட்சக் கணக்கில் பணம் புழங்கலாம்: அரசாங்க நிறுவனங்களில் கோடிக் கணக்கில் பணம் வரத்துப் போக்கு இருக்கும். ஆனால் தனிப்பட்ட P.oprietorship கணக்கில் எப்படி கோடிக் கணக்கில் பணம் வருவது சாத்தியம்? எந்த அதிகாரிக்கும் சந்தேகம் ஏற்பட வேண்டுமே?

''மாயை கண்ணை மறைத்து விடும் சார்!'' என்கிறார் உயர் அதிகாரி ஒருத்தர்.





(பம்பாயைத் தலைமை இடமாகக் கொண்ட வங்கியில் பணி புரிபவர்.) பாதி வேடிக்கையாகவும் பாதி சீரியஸாகவும் அவர் தொடர்ந்தார். ''சில குறிப்பிட்ட தேதிகளில் — முக்கியமாக வருட இறுதியில் உள்ள டெபாஸிட் தொகை, வெள்ளிக் கிழமை டெபாஸிட்டுகளின் சராசரி — இவற்றை வைத்துத்தான் பாங்கின் வளர்ச்சி கணிக்கப்படுகிறது. கிளை மானேஜரை இது மிகவும் பாதித்து டெபாஸிட்டுக்காக நியதிக்குப் புறம்பான காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது. ஸ்மூல் வியாபாரிகள் புழங்கும் இடத்தில் பின் தேதியிட்ட டிராப்டுகள் வழங்குவது சர்வசாதாரணம்.(அதாவதுவெள்ளிக் கிழமை அன்றே அடுத்த நாள் தேதியிட்டு டிராஃப்ட் கொடுப்பது, சனி அல்லது திங்கள் அன்றுதான் கணக்கில் பற்று வைப்பது) டெபாஸிட்டுகள் மட்டுமல்லாது மற்றவைகள் — அதாவது கடன் வழங்குவது, வசூல் செய்வது, புத்தகங்களை ஒழுங்காக வைத்து மாதா மாதம் சரி பார்ப்பது — இவற்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்படித்தான் செய்கிறோம் என்று எல்லா பாங்குகளும் வாயளவில் சொன்னாலும் நடைமுறையில் அப்படி இல்லை! டெபாஸிட் ஒன்றே குறிக்கோள்.''

ஒரு விஷயம் நிச்சயமாகத் தெரிந்தது: அதாவது கடன் வழங்கும்போது நிறைய எச்சரிக்கை எடுத்துக் கொள்கிறார்கள். செக்யூரிட்டி கேட்கிறார்கள். இடத்தைப் போய்ப் பார்க்கிறார்கள். (அரசியல் காரணங்களுக்காகக் கொடுக்கப்படும் கடன் விதிவிலக்கு!) அதில் கால் பங்காவது டெபாஸிட்டுகளைப் பெறும்போது எச்சரிக்கையுடன் இருந்தால் நிறைய மோசடிகளைக் குறைக்க இயலும்.

பொதுவாக எடுத்துக் கொள்ள வேண்டிய எச்சரிக்கைகள்:

1. புதிதாகக் கணக்குத் துவங்கும்போது அறிமுகம் கேட்பது. 'அ' என்பவர் சேவிங்ஸ் கணக்குத் துவங்கினால், இன்னார்தான் 'அ' என்று பாங்குக்குத் தெரிந்தவர் அறிமுகப்படுத்துவது அவசியம். இது மிக முக்கியம். இதில் அசிரத்தையாக இருப்பதால் வேறு பெயருக்கு வந்த செக்கை ரசாயனக் கலவை மூலமாக மாற்றித் தங்கள்பெயரில் போட்டுக் கொண்டு ஏமாற்றி விடுகிறார்கள். அதுவும் செக்கின் தொகை பெரிதாக இருந்தால் வாயைப் பிளக்காத ஏஜண்டுகள் அபூர்வம். (மவுண்ட் ரோட் கிளையில் ஒரு கோடி பெரிது என்றால் கே. கே. நகரில் ஒரு லட்சம்.) இந்த 'அறிமுகப்படுத்துதலை' ஒரு சடங்காக எண்ணாது, சீரியஸாக எடுத்துக்கொண்டு கையாள வேண்டும்.

2. திடீரென்று ஒரு கணக்கில் சற்று மிக அதிகமான தொகை புழங்கினால் கவனமாக இருப்பதுடன், என்ன, ஏது என்று விசாரிக்க வேண்டும். அதுவும் குறிப்பாக ஊழியர்கள் கணக்கில் தகுதிக்கு மேல் நிறையத் தொகை வந்தால் ஜாக்கிரதை அவசியம். (சில பாங்குகளில் ஊழியர்களுக்கென்றே தனி லெட்ஜர் உள்ளது)

3. டிராஃப்ட் என்பது கிட்டத்தட்டக் கரன்ஸி நோட்டுக்குச் சமம்தான். ஆனால் இதில்தான் நிறையத் தில்லுமுல்லுகள் நடைபெறுகின்றன. டிராப்ட், டெபாஸிட் ரசீது இவைகளின் மொத்த எண்ணிக்கையைக்குறிப்பிட்ட தேதிகளில் சரிபார்த்தல் நல்லது. டிராப்ட் எழுதும்போது, சில குறியீடுகளையும் (Codes) பயன்படுத்த வேண்டும்.

4. சேவிங்ஸ் கணக்குகளில் செக்குகளுக்குப் பதிலாக 'வித்ராயல் ஸ்லிப்' என்று தனித் தாள்களைச் சில வங்கிகளில் உபயோகப்படுத்துகிறார்கள். வங்கிகளின் கிளையும் வாடிக்கையாளர்களும் பெருகிவிட்ட இந்தக் காலத்தில் உதிரியான இவைகளுக்குப் பதில் தனியாக வாடிக்கையாளர்களிடமிருந்து கடிதம் வாங்கிக் கையெழுத்தைச் சரிபார்த்து, 'செக்' கொடுக்க வேண்டும். (அரசுடைமை ஆகாத சில தனியார் பாங்குகளில் இந்த முறை வரப்போவதாகத் தெரிகிறது.)

பல் போச்சு! பார்வை வந்தது!

குன் தொரெஸ்ஸான் என்ற பெண்மணி சொத்தைப் பற்களை எடுத்துவிட்டு அவை இருந்த இடங்களில் பற்கள் கட்டிக் கொண்டார். அடுத்து படிப்படியாகக் கண் பார்வை மங்கத் துவங்கி விரைவிலேயே அவர் பார்வை போய்விட்டது. இருபத்தி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் வேறு சில சொத்தைப் பற்களை எடுக்கப் பல் டாக்டரிடம் சென்றார். அவர் ஒவ்வொரு சொத்தைப் பல்லாக அகற்ற அகற்ற, குன் தொரெஸ்ஸானுக்கு லேசாகப் பார்வை வர ஆரம்பித்தது. எல்லாச் சொத்தைப் பற்களையும் எடுத்த பின் கண் பார்வை வெகுவாக அபிவிருத்தி அடைந்திருக்கிறதாம்!

அவர் முன்பு பல் கட்டிக் கொண்டதற்கும் கண் பார்வை மங்கிக் குருடானதற்கும், மறுபடி பற்களை எடுத்த பின் பார்வை திரும்பியதற்கும் ஏதோ தொடர்பு இருக்க வேண்டும் என ஸ்வீடன் நாட்டு டாக்டர்கள் கருதுகின்றனர்.

'நியூ ஸைன்டிஸ்டி'லிருந்து
—கணியூர் சீனிவாசன்



5. அடிக்கடி புழங்கப்படாத கணக்குகளில் (Inoperative Accounts) திடீரென்று காசோலை வந்தால் இரட்டிப்புக் கவனம் இருப்பது அவசியம். பெரும்பாலான மோசடிகள் இதில் நடைபெறுகின்றன.

மேலே குறிப்பிட்டவை எல்லாம் மோசடிகள், தில்லு முல்லுகள் ஆகியவை களைத் தவிர்ப்பதற்கான வழிகள். ஆனுல் துப்பாக்கி முனையில் நடக்கும் கொள்ளைகள்?

நல்ல காலமாக வடக்கே இருக்கும் அளவு தெற்கே இன்னும் பரவவில்லை. இருந்தும் இங்கும் சில இடங்களில் அவ்வப்போது நடக்கிறது. (குறிப்பாக திருச்சி ராம்ஜி நகரிலிருந்து ஒரு கூட்டம் வருவதாகச் சொல்கிருர்கள்.) இயன்ற அளவு பாதுகாப்பை இதில் கடைப்பிடிக்க வங்கிகள் முயன்று வருகின்றன. மேலும் என்ன செய்யலாம்?

1. வியாபார நேரம் முடிந்ததும் 'மெயின்' வழியை உடனே மூடிவிட வேண்டும். அதற்குப் பிறகு முன் பின் அறிமுகமில்லாதவர்கள் வருவதைக் கூடுமானவரை தவிர்ப்பது நல்லது.

2. பணக் கட்டுக்களை காஷ் கேபினிலும், உள்ளே சேஃப் அறையிலும் மட்டுமே எண்ண வேண்டும். பெரிய சம்பெனிகள் நிறைய கட்டுகள் கொண்டு வருவதால், வெளியே வைத்து எண்ணுவது சில கிளைகளில் வழக்கமாக உள்ளது. இது கூடவே கூடாது.

3. உள்ளே பெட்டக அறையிலிருந்து பணம் கொண்டு வரும்போது, அவை பூட்டப்பட்ட பெட்டியில்தான் வைத்துக் கொண்டு வரப்பட வேண்டும்.

இதுபோல் பல விதிமுறைகள் அவ்வப்போது வங்கிகளில் கொடுத்துக் கொண்டேதான் வருகிருர்கள். ஆனுல் ஏதாவது ஒன்றைக்கூட முறையாகக் கடைப்பிடிக்காத சமயம் பணம் முற்றும் போய்விடுகிறது. இங்கே ஒன்றைக் குறிப்பிடலாம். போர்ஜரி மாதிரியான மோசடிகள் நிகழும்போது, சிப்பந்திகளும் ஆபீசர்களும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி, (''அன்று பிஸியான நாள்; கையெழுத்துச் சரிபார்க்க அவகாசம் இல்லை!'') யூனியன் அல்லது அஸோஸியேஷன் தயவை நாடலாம். ஆனுல் பணம் தொலைந்து போய்விட்டால் — எந்த விதமான காரணம் சொன்னுலும் செல்லுபடியாகாது!

இந்தச் சமயத்தில் திரு காசிம் (போலீஸ் கமிஷனர்) ஒரு கூட்டத்தில் தமாஷாகச் சொன்னது நினைவுக்கு வருகிறது. ''இந்தக் கவுண்டர்களை யார்தான் டிஸைன் பண்ணுகிருர்களோ? ஏஜெண்டின் அறையைக் கடைசியில் வைத்து விடுகிருர்கள். எனக்கு ஒரு பாங்கின் அடையாறு கிளையில் கணக்கு இருக்கிறது. ஏஜெண்டைப் பார்க்க வேண்டுமென்ருல் எல்லா இடங்களையும் தாண்டித்தான் செல்ல வேண்டியிருக்கிறது. இன்னின்ன இடத்தில் இத்தனை ஆள் இருக்கிருர்கள் என்று சுலபமாக 'நோட்' பண்ணிவிட முடியும். கொள்ளை அடிப்பதென்ருல் முன்னேற்பாட்டுடன் வரலாம்!''

இப்போது பல பாங்குகளில் மானேஜரின் அறையை முன்னுலேயே வைத்து விடுகிருர்கள். காஷியரின் அருகிலேயே ஓர் எச்சரிக்கை மணி வைப்பதையும் பல வங்கிகள் வழக்கமாகக் கொண்டுள்ளன.

கடைசியாக ஒரு வார்த்தை. பொதுவாக பாங்க் உத்தியோகம் என்ருல் கைநிறையச் சம்பளம், குறைந்த வட்டியில் கடன் என்றுதான் பலர் எண்ணுகிருர்கள். ஆனுல் அந்த உத்தியோகத்தில் உள்ள ஆபத்தை யாரும் கவனிப்பதில்லை. எல்லா வேலைகளிலுமே 'ரிஸ்க்' இருக்கிறது. ஆனுல் பாங்கில் அதிகம். பல ஆண்டுகள் கட்டிக் காத்த நல்ல பெயரோ, சேர்த்து வைத்த தொகையோ ஒரு சின்னக் கவனக் குறைவால் பறிபோய் விடக் கூடிய சந்தர்ப்பம் இந்த வேலையில்தான் அதிகம்!

-நமது நிருபர்



சூப்பர் ஹிட் சினிமாப் பாட்டுகளின் வார்த்தைகளைக் கிண்டலாக மாற்றி, அதே டியூனில் பாடுவது கல்லூரி மாணவ மாணவியரின் ஸ்பெஷாலிடி.


இதோ ஒரு சாம்பிள்: (சென்னை மகளிர் பாலிடெக்னிக் மாணவிகள் எழுதியது)

நேத்து ராத்திரி — ஐயோ!
தூக்கம் போச்சுடி — ஐயோ!
கொசுத் தொல்லை தாங்காதம்மா!
மூட்டைப் பூச்சி தூங்க விடாதும்மா!
அம்மாடி.... ஆத்தாடி... இதனுலத்தான்
(நேத்து ராத்திரி)

லைட் ஸ்விட்சைப் போடு
கண்ணடிக்கும் பாரு
தொட்டவுடன் ஷாக்கு
ஸ்விட்ச ரொம்ப வீக்கு
பவர்கட்டால ரூமு ஃபுல்லா டார்க்கு!

மெட்ராஸ்ல கிருஷ்ணா தஞ்சம்
ஹாஸ்டலிலே தண்ணீர் பஞ்சம்
குழாயத்தான் திருப்பு கொஞ்சம்
காத்து சத்தம் நம்மைக் கொஞ்சும்
பார்க்கக் கூட டீவி இல்லே
காத்து வாங்க ஃபேனும் இல்லே
ஆத்திரம்தான் அப்பப்பா!
(நேத்து ராத்திரி)


எஸ். இந்திரா
Basic Engineering Course
W.P.T. Hostel, CPT Campus, Madras-20



இயற்கையின் சீற்றங்களை எதிர்த்து நிற்பதற்கென்றே தயாரிக்கப்படுபவை ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள்.

உன்னத தரக்கட்டுப்பாட்டுக்கென நிர்ணயிக்கப்பட்ட எல்லா சோதனை-களையும் இயல்பாகவே கடந்து காலம் முழுதும் கடுமையான தட்பவெப்பச் சூழ்நிலைகளைத் தாங்குமாறு 'ராம்கோ' அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதிநவீன தொழில் நுட்பம், மிகக் கடுமையான தரக்கட்டுப்பாடு— இவையே "ராம்கோ" அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் அனைவராலும் தேர்ந்தெடுக்கப்படுவதன் இரகசியம்.

இயற்கை வலுவேற்றிய உறுதி — இணையற்ற 'ராம்கோ' தரத்தின் தனிப்பாணி



Ramco

ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளும் மற்ற உபகரணங்களும்- தரமான கூரைகளுக்கு மட்டுமல்ல நிரந்தரமான பாதுகாப்புக்கும் கூட.

சதர்ன் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட்
739, அண்ணா சாலை, சென்னை-600 002. போன் : 82006
பரிபூரண விற்பனையாளர்கள் : ராஜா சாரிடி டிரஸ்ட்

CAS SACL 8 83 TAM A

கேள்விகள் 1,2,3



'1'

டாக்டர் அ. கலாநிதி, எம். பி.

கேள்வி: ஜெயலலிதா இன்னும் அமைச்சராக்கப்படாதது ஏன்?

பதில்: ஏற்கெனவே தமிழக அரசியல் குட்டிச்சுவராகிவிட்டது. இதில் ஜெயலலிதா வந்து குட்டையைக் குழப்புகிறார். ஜெயலலிதாவின் அரசியலை விமர்சிப்பது அவசியம் தானா என்று யோசிக்கிறேன். முதல் காரணம்: ஜெயலலிதாவை அரசியல்வாதி என்றே என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இரண்டாவது: அவரை விமர்சிக்கும் அளவுக்கு என்னுடைய தரம் தாழ்ந்து போய்விடவில்லை என்று நான் நினைக்கிறேன்.

''அவரது அரசியலை விமர்சிக்க வேண்டாம். அவர் அமைச்சராக்கப்படாததன் காரணங்கள் என்னவென நீங்கள் நினைக்கிறீர்கள்?''

''சத்துணவுத் திட்ட உயர் மட்டக் குழுவில் இருக்கிறார். கட்சியில் கொள்கை பரப்புச் செயலாளர். தினமும் போலீஸ் உயர் அதிகாரிகள் ஜெயலலிதாவைச் சந்தித்து உத்தரவுகளைப் பெற்றுச் செல்கிறார்களாம். பெரும்பாலான ஃபைல்களை அவர் பார்வையிடுகிறாராம். முக்கியமான விஷயங்களில் ஜெயலலிதாவைக் கலந்தாலோசிக்காமல் முடிவெடுப்பதில்லை என்கிறார்கள். அவர் சமீபத்தில் கோவை, மேட்டுப்பாளையம் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றபோது பாதுகாப்புக்காக ஒரு எஸ்.பி., ஆறு டி. எஸ். பிகள்., 19 இன்ஸ்பெக்டர்கள், நூற்றுக்கணக்கில் கான்ஸ்டபிள்கள் என்று பெரிய போலீஸ் படையே உடன் சென்றது. இந்த அளவுக்கு எம். ஜி. ஆர். தமக்குக் கூடப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொள்கிறாரா என்பது சந்தேகமே! இப்படி எந்த விதத்தில் பார்த்தாலும், ஒரு அமைச்சரவையே அவருக்குக் கீழ் இருக்கும்போது, அவர் பொறுப்பில் ஒரு இலாகாவைக் கொடுத்து, அமைச்சராக்குவது வேஸ்ட்தானே?''

'2'

சந்திரசேகரன்

இணை செயலாளர், இந்தி பிரசார சபா

கேள்வி: இந்தியில் கிரிக்கெட் காமென்டரி சொல்வது இந்தித் திணிப்பு இல்லையா?

பதில்: காமென்டரி சொன்னால் அது எப்படி இந்தித் திணிப்பாகும்? இதை இந்தித் திணிப்பு என்று சொல்வது பைத்தியக்காரத்தனமான வாதம். வட இந்தியாவை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே ஆங்கிலம் வேண்டாம், இந்தியே போதும் என்கிறார்கள். ஆனால் இந்தி, ஆங்கிலம் இரண்டு மொழிகளிலுமே



○ சந்திரசேகரன்

காமென்டரி ஒலிபரப்பாகிறது. எனவே வட இந்தியர்கள் இதை 'ஆங்கிலத்திணிப்பு' என்று குற்றம் சாட்ட முடியுமா என்ன? மேலும் தமிழ் நாட்டில் மட்டும்தான் இந்திக்கு இத்தனை எதிர்ப்பு. தமிழ் நாட்டைத் தாண்டி வெளியில் போனால் அத்தனை மாநிலங்களிலும் இந்தி இருக்கிறது. அவர்கள் எல்லோரும் ஆங்கில காமென்டரியைவிட, இந்தி காமென்டரியைத்தான் மிகவும் ரசிக்கிறார்கள். சொல்லப்போனால், அவர்கள் இடையிடையே



சொல்லப்படும் இருபது நிமிட ஆங்கில காமெண்டரியை இடைஞ்சலாய் நினைக்கின்றனர். இது ஒருபுறம் இருக்க, ஒருசிலர் இங்கே தமிழில் காமெண்டரி சொல்லலாமே என்பார்கள். உடனே மற்ற மாநிலத்துக் காரர்கள் அவரவர் மொழியில் காமெண்டரி சொல்லச் சொல்வார்கள். இப்படியேபோனால் எத்தனைமொழிகளில் காமெண்டரிசொல்வது? எனவேதான் நிறையப் பேருக்குத் தெரிந்த இந்தி, ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் காமெண்டரி சொல்லப்படுகிறது. நிலைமை இப்படி இருக்க, இந்தித் திணிப்பு அது, இது என்றெல்லாம் சொல்லலாமா? வேண்டுமானால் இந்தி தெரியாத கிரிக்கெட் ரசிகர்கள் நலனுக்காக இப்படிச் செய்யலாம். இந்திகாமெண்டரி முடிந்து ஆங்கில காமெண்டரி ஆரம்பிக்கும்போது, முந்தைய இருபது நிமிட ஆட்டத்தைச்சுருக்கமாகத் தொகுத்துச் சொல்லலாம். ஸ்கோர் சொல்லும்போது, ஆங்கிலத்திலும் சொல்லலாம். தவிர தனித் தனி இந்தி,ஆங்கில காமெண்டரி ஒலிபரப்புக்கான சாத்தியங்களை ஆராயலாம்.

]3[

பஞ்சநாதன்

புத்தகப் பூங்கா உரிமையாளர்

கேள்வி: நூலக இயக்குநர் பதவி அதிகாரமில்லாத பொம்மைப் பதவியா?

பதில்: அதில் என்ன சந்தேகம்? பதிப்பகத்தினர் தாம் வெளியிடும் புத்தகங்களின் பிரதியைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்துக்கு அனுப்பி வைப்பார்கள். அவர்கள் புத்தகத்தைப் படித்து, நல்ல புத்தகமெனில் நூலகத் துறைக்குச் சிபாரிசு செய்வார்கள். நூலக ஆணையாளர் அந்தப் புத்தகங்களுக்கு ஆர்டர் தருவார். (பதிப்பகத்தார் ஒரு பதிப்பில் போடும் 1200 பிரதிகளில் நூலக ஆணையாளர் 600 பிரதிகளுக்கு ஆர்டர் தந்து விடுவார். இதை நம்பியே பலர் புத்தகம் போடுகிறார்கள்.) இப்போதைய பிரச்சினை என்னவெனில் 81ம் வருடத்துக்குப் பிறகு ஆர்டரே தரப்படவில்லை. முன்பு ஆர்டர்படி சப்ளைசெய்யப்பட்டபுத்தகங்களுக்குப்பணமும் தரப்படவில்லை. காரணம் கேட்டால் 'பணம் இல்லை' என்கிறார்கள். பொதுமக்களிடமிருந்து நூலக வரி என்று வாங்குகிறார்கள். ஆனால் அந்தப் பணத்தில் புத்தகங்கள் வாங்குவதில்லை. அப்படியெனில் அந்த வரிப் பணம் என்னவாகிறது? சிறிய நகராட்சிகள், ஊராட்சிகள் வசூலித்த பணத்தை அரசாங்கத்துக்குச் சரியாகக் கொடுப்பதில்லை. பெரிய நகராட்சிகள், மாநகராட்சிகள் இவை ஒழுங்காக வரிப் பணத்தை அரசாங்கத்துக்குக் கட்டினாலும் அரசாங்கம் அந்தப் பணத்தை வேறு விதங்களில் செலவிடுகிறதே தவிர புதுப் புத்தகங்கள் வாங்கவோ, கொடுத்த ஆர்டர்படி சப்ளை செய்தவர்களுக்குப் பணபாக்கியைத் தரவோ முன்வருவதில்லை. அரசு பணம் ஒதுக்காதபோது, நூலக இயக்குநர் எப்படிப் பணம் கொடுக்க முடியும்? சிபாரிசு செய்யப்படும் புத்தகங்களுக்கான ஆர்டரில் வெறுமனே கையெழுத்திட்டுத்தான் என்ன பிரயோசனம்? எனவே, அவர் அதிகாரமில்லாத ஒரு பொம்மை என்பது தெரிகிறதல்லவா?


—ஜானி

சோடா

அரசியல்வாதிகளின்
ஆஸ்தான பானம்
காலிகளுக்குக்
கைகண்ட ஆயுதம்
அஜீர்ண அவதியாளருக்கு
அதிசய நிவாரணி
குடிகாரர்களுக்குக்
குட்டித் தேவதை
குழந்தைகளுக்குக்
குளுகுளு அமிர்தம்!

—நவீன்குமார்





''இனி ஒரு நிமிடம் கூட உங்களுடன் சேர்ந்து வாழ முடியாது.... உங்க பேச்சை இனிக் கேட்கவே மாட்டேன். நான் வரேன்....''

''ஒரு நிமிஷம் இரு.... எனக்கு ராஜஸ்தான் லாட்டரிலே 10 லட்சம் பரிசு விழுந்திருக்கு....''

''அப்படியா? அத்தான், இனி உங்கசொல்தான் எனக்கு தேவ வாக்கு! உங்களை விட்டு ஒரு நிமிடமும் என்னால் பிரிந்திருக்க முடியாது!''

— ராஜேஸ்வரி

81ம் ஆண்டு நிறைவு விழா அழைப்பு

அன்புடையீர்,

எங்கள் 81ம் ஆண்டு நிறைவு விழா 6-10-1983 முதல் 3-11-1983 வரை கொண்டாடப்படுகிறது.

இந்த அரிய தருணத்தில் நீங்களும் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைய அழைக்கிறோம்.

6-10-1983 முதல் 3-11-1983 வரை எல்லா பட்டு ஜவுளி தினுசுகளுக்கும் விசேஷ தள்ளுபடி **20%**

நூல் மற்றும் இதர வகைகளுக்கு **12½%**

தரத்தையும் விலையையும் ஒப்பிட்டுப் பார்த்து உங்கள் தேவையை வாங்கிக் கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

சம்பூர்ணம் சில்க்ஸ்

பட்டுப் புடவைகளுக்கு பெருமை வாங்கித் தந்தவர்கள்

48, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை Pin 600 004

ஸ்தாபிதம்: **1902** போன்: **71719**

தீபாவளி வரை எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடை உண்டு

சந்தோஷ குடும்பத்தின் உண்மை ரகசியம்,
எப்பொழுதும் நேர்த்தியான தேர்ந்தெடுப்பு.





இதன் வெளிப்படை உண்மை அனைவருக்கும் ஏற்ற
எமது வண்ண வண்ண ஆடைகள் மற்றும் உள்ளாடைகள்.

MLTEX

Under Control Briefs & Vests

Manufactured by: 3-L Bridgeway Colony TIRUPUR 638 607.

எமது தயாரிப்புகள் கிடைக்குமிடம்: அருணாசலா வி. மார்க்கெட்ரோடு, சேலம், பாலாஜி ஏஜென்சீஸ், தஞ்சை

நல்லவன் உறையும் பதி

ஆனந்தி



○ ஆடல்வல்லான்

கோனேரிராஜபுரம் என்ற ஊர் இசையுலகில் மிகவும் பிரசித்தம். இந்த ஊர் நடராஜமூர்த்தியும் பெருங் கீர்த்தி வாய்ந்தவர்.

தேவார காலத்திலேயே இந்த ஊர் புகழ் பெற்றிருந்தது என்பது நாவுக்கரசர் பெருமானின் பதிகத்திலுள்ள இரண்டே அடிகளில் தெரிகிறது.

''உமைக்கு நல்லவன் தான்உறை யும்பதி
நமக்கு நல்லது நல்லம் அடைவதே''

அந்தக் காலத்தில் இந்த ஊர் திருநல்லம் என்ற பெயரோடு விளங்கியிருக்கிறது.

''நமக்கு நல்லது நல்லம் அடைவதே'' என்று ஜபித்துக் கொண்டே கோனேரி ராஜபுரத்தின் எல்லையை அடைகிறோம். வழியெங்கும் வயலும் வரப்புமாகக் காட்சி யளிக்கிறது.

நல்லோர் வாழும் நல்லம். நான்மறைகள் செழிக்கும் நல்லம். நல்ல கட்டுப்பாட்டுடன் மக்கள் வாழும் நல்லம். நல்ல வீடுகள் உள்ள நல்லம். நல்லவன் கோவில் திகழும் நல்லம். நல்ல ஊரமைப்புக் கொண்ட நல்லம். நல்ல நெல் வயல்கள் சூழ்ந்த நல்லம்... அடுக்கிக் கொண்டே போக லாம்.

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு ஓவியர் மணியம் அவர்கள் இந்த ஊர் நடராஜரையும், சிவகாமி அம்மையையும் தம் தூரிகை வர்ணத்தால் வரைந்து கொண்டு வந்தார். அந்த ஓவியம் கல்கி தீபாவளி மலரில் ஆர்ட் காகிதத்தில் நீலநிறப் பின்னணியோடு வெளிவந்தது. அப்போது முதல் இந்த ஊர் நடராஜரைத் தரிசிக்க வேண்டுமென்று நந்தனாரைப் போல் மனத்தில் ஓர் அவா குடி கொண்டு விட்டது. இந்த ஆசை எதிர்பாராத விதமாக நிறைவேறியது. நியாயமான அபிலாஷைகளை ஈசுவரன் நிறைவேற்றியே தருகிறான்.

ஞானசம்பந்தர் பெருமான், ''நலமார் மறையோர் வாழ் நல்லம் நகர்'' என்று இந்த ஊரில் வாழ்ந்த வேத விற்பன்னர்களைப் போற்றுகிறார். அவருடைய பதிகம் குளிர்ச்சி

○ மாப்பிள்ளை சுவாமி



யும் பசுமையுமாய் உள்ளத்தைக் குளிரச் செய்கிறது.

''குளிரும் மதிசூடிக்கொன்றைச்சடைதாழ
மிளிரும் அரவோடு வெண்ணூல்
திகழ்மார்பில்
தளிருந் திகழ்மேனித் தையல் பாகமாய்
நளிரும் வயல்சூழ்ந்த நல்லம் நகரானே!''

என்று சிவபெருமான் தண்அருளைப்பாடுகிறார்.

திருநல்லம் கோவில் ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்க வேண்டும். பிற்காலச் சோழர்களில் சிவநேசச் செல்வரான கண்டராதித்தரும் செம்பியன் மாதேவியாரும் இந்தக் கோவிலுக்குத் திருப்பணிகள் செய்திருக்கிறார்கள். அவர்கள் இருவருடைய உருவமும் கோட்டத்தில் சிவபூஜை செய்வது போலப் பொறிக்கப்பட்டிருக்கிறது.

வெளிப்பிராகாரத்தில் உள்ள பிள்ளையார் எதிரே குட்டிக் கொண்டபோது கம்மென்று மணம். அருகே பன்னீர் மரம். அடியில் உதிர்ந்து கிடக்கும் வெள்ளை வெளேரென்ற மென்மையான பன்னீர்ப் புஷ்பங்கள். மணம் எவ்வளவு மென்மையோ பூவும் அவ்வளவு மென்மை. கைச்சூடு படாமல் மெல்லப் பொறுக்கி அர்ச்சனைத் தட்டின்மீது வெற்றிலையோடு வைத்ததும் இன்னும் வெளுப்பாகத் தெரிந்தது.

நந்திகேச்வரர் அருகில் நின்று கொண்டு ஓங்கி வளர்ந்த வில்வ மரத்தைப் பார்த்தால் அதில் இலைகளின் நிறத்திலேயே கிளிகள். வால் ஆட்டுகின்றன. கழுத்தை நொடிக்கின்றன.

திரு நல்லத் தலபுராணம் நந்தி பகவான் ஸனத்குமார முனிவருக்குக் கூறுவது போல் அமைந்துள்ளது. ''ஓம் நமசிவாய'' என்ற மந்திரத்தின் பெருமையை எடுத்துக் கூறிய பிறகு, நந்திபகவான் இந்தத் தலத்தில் கிளி ஒன்று இந்த மந்திரத்தை ஓதியதால் மோக்ஷம் பெற்ற கதையைக் கூறுகிறார்.

○ அகஸ்தியர்



ஞான கூபம் என்ற பெயருடைய கிணறு விசுவகர்மாவினால் அமைக்கப்பட்டது. இக் கிணற்று நீரை ஒரு சொட்டுப் பருகினாலும் சிவஞானம் உண்டாகுமாம். சுமதி என்ற அழகிய யுவதி ஒரு கிளியை அன்போடு வளர்த்து வந்தாள். அதற்குத் தேனும் பழமும் கொடுத்துப் பேசப் பழக்கினாள். ஞானகூபத்தின் நீரைத் தினமும் அதற்குப் புகட்டி வந்தாள். அதனால் ஞானம் பெற்ற அந்தக் கிளி அரச மரத்தில் உட்கார்ந்து கொண்டு போவோர் வருவோரையெல்லாம் அழைத்து, ''ஏ ஜனங்களே! முன் பிறவியின் பயனாலோ, நல்லோர் சேர்க்கையினாலோ இந்தத் தலத்துக்கு வந்து இங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கி, களைப்பாறுவதற்காகவாவது கோவிலுக்குள் சென்று, ஞானகூப தீர்த்தத்தைச் சிறிது பருகினாலும் போதும், நிச்சயம் முக்தியடைவீர்கள். இது சத்தியம்'' என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தது. ஆறாயிரம் ஆண்டுகளாகப் பிரும்ம ராக்ஷஸனாகத் திரிந்து கொண்டிருந்த ஓர் அரசன் இந்தக் கிளியின் சொல்லைக் கேட்டு சாப விமோசனம் பெற்றான். நந்தியின் அருகில் நின்று கொண்டு பசுங்கிளிகளை வில்வ மரத்தில் கண்ட பொருத்தம் வியக்கச் செய்கிறது.

குருக்கள் அர்ச்சனை செய்து பிரஸாதம் வழங்குகிறார்.

பூமி தேவியை வராஹப் பெருமான் தூக்கிக் கொண்டு வந்து காப்பாற்றிய போது அசுரர்கள் துன்புறுத்தாமலும், ஸ்திரமாகவும் இருக்கும்பொருட்டு சிவபெருமானைப் பூஜிக்கச் சொன்னார். பூமாதேவி இந்தத் தலத்துக்கு வந்து சிவலிங்கம் பிரதிஷ்டை செய்வித்து 'சிவதுஷ்டிகர ஸ்தோத்திரம்' என்ற ஐந்து அழகான சுலோகங்களைச் சொல்லி ஈசுவரனை மகிழச் செய்து வரங்களைப் பெற்றாள். இதனால் திரு நல்லத்துக்கு பூமீச்வர க்ஷேத்ரம் என்ற பெயர் வழங்குகிறது.

மூவாயிரம் ரிஷிகளுக்கு முதல்வராய் விளங்கிய கௌதம ரிஷி பஞ்சாக்ஷரத்தை ஓதி ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்து உமா மஹேச்வரரின் தரிசனம் பெற்றார். பவானி தேவியுடன் காட்சி கொடுத்த ஈசன் கல்யாண சுந்தரராய் அங்கேயே இன்னும் நாம் காணத் தரிசனம் கொடுக்கிறார். இன்று இவரை ''மாப்பிள்ளை சுவாமி'' என்று இந்த ஊரில் வசிப்போர் பெருமையுடன் உரிமை கொண்டாடுகிறார்கள்.

வலம் வரும்போது திருவண்ணாழியின் பின்பக்கக் கோஷ்டத்தில் லிங்கோத்பவர் இருபுறமும் பிரும்மாவும் விஷ்ணுவும் வணங்கக் காட்சியளிக்கிறார்.

அகத்திய முனிவர் சின் முத்திரையோடு உபதேச கோலத்தில் அமர்ந்திருக்கிறார். அம்பிகையின் சந்நிதி கிழக்குப் பார்த்து அமைந்திருக்கிறது. அங்க வடிவழகி என்றும்,

தேஹசுந்தரி என்றும் அழைக்கப்படும் தேவி, பெயருக்கேற்ற எழில் தோற்றத்துடன் அருள் சுரந்த விழிகளுடன் காட்சி தருகிறாள். கோனேரிராஜபுரத்தில் அங்கவளநாயகி என்று பெண் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டப்படுகிறது.

தேவியின் கோவிலில் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட ஓவியம் இருக்கிறது. இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், கோனேரிராஜபுரம் வைத்தியநாத ஐயர், அழக நம்பியா பிள்ளை, கோவிந்தசாமி பிள்ளை மூவருமாகக் கச்சேரி செய்கிற ஓவியம் இது. அடுத்து ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் ஹரிகதை செய்யும் ஓவியம். அம்பாள் சந்நிதியில் ஹரிகதையும், கர்நாடக இசையும் சதா முழங்குகிறது!

நடராஜர் சந்நிதி! முதலில் தோன்றுவது இந்த நடராஜ மூர்த்தியை யாரும் கடத்திக் கொண்டு போய் விட முடியாது என்பது தான். விக்ரகத்தைச் சுற்றிச் சுவர் எழுப்பியிருக்கிறார்கள். நல்ல பாதுகாப்பு.

நெற்றியில் அப்பிய சந்தனம் குங்குமத்தோடு நடராஜாவைத் தரிசிக்கும்போது எக்களிப்பே உண்டாகிறது. எடுப்பான நாசி, காந்த சக்தியுள்ள கண்கள். விரித்த செஞ்சடையில் விண் மீன்கள். தோளில் இடிக்கும் காதுகள் (ஆபரணம் காணவில்லை) ருத்ராக்ஷ மாலை. எனது பாதத்தைப் பற்றிக் கொள் என்று குறிப்பாகக் கூறும் நீண்ட கரம், அஞ்சல் என்ற கரதலம், ஐந்தொழில் புரிவதைக் காட்டும் தாண்டவத் திருக்கோலம், அருகில் சிவகாமி தேவியார். அசாத்தியமான கலை. இவ்வளவு பெரிய உருவத்தில் இவ்வளவு கலையை எப்படிக் கொண்டு வர முடிந்ததோ!

அடுத்ததாக இடது கையில் குமுத மலரேந்தி அழகு மயமான சங்கரனை நோக்கி நாணத்துடன் வலது கரத்தை நீட்டும் பவானிதேவி. மான் மழு ஏந்தியவராய், பிரம்பு தாங்கியவராய், ரிஷபத்தின் மீது கை ஊன்றியவராய், கல்யாணசுந்தரராய்க் காட்சி தரும் ஈசன்.

திரிபுர தகனம் செய்த கோலத்தில் வில்லேந்திய கரத்தோடு காட்சி தரும் திரிபுரநாதர் வடிவமும் பார்த்து மகிழ வேண்டிய கோலம்.

கோவிலிலிருந்து திரும்பும்போது மணியோசை கேட்கிறதே என்று பார்த்தால் விநாயகர் கோவில் கணநாயகனுக்குத் தீபாராதனை நடக்கிறது. அந்தத் தெருக் கோடியிலேயே துர்க்கையம்மன் கோவிலும் இருக்கிறது. சிறிய ஆலயம் தான். மிகவும் சக்தி வாய்ந்த தேவி என்று கூறுகிறார்கள். ஆகாச துர்க்கையானதால் அம்மனுக்கு மேலே இடைவெளி விட்டே கட்டியிருக்கிறார்கள்! வெயிலும் மழையும், காற்றும், பனியும், வெளியும் அவள் உகந்தவை.

ஊருக்கு வடபுறத்தில் இரண்டு ஊருணிகள் இருக்கின்றன. அவற்றின் கரையில் ஐயப்ப சுவாமியின் கோவில் இருக்கிறது. கோவிலை நெருங்கும் போது ''கீச்மூச்'' சென்று ஒரே ஆரவாரம். நிமிர்ந்து பார்த்தால் பனை மரங்களில் தூக்கணாங்குருவி காலனியே காணப்படுகிறது. குளக்கரையும், கோவிலும் ஊஞ்சலாடும் கூடுகளும், அங்குமிங்கும் பறக்கும் குருவிகளும் மற்றபடி அமைதியான சூழ்நிலையும் இதமாக இருக்கின்றன.

ஐயப்ப சுவாமிக்கு அபிஷேகம் நடக்கிறது. கம்பீரமாக அமர்ந்திருக்கிறார். பாலபிஷேகம் செய்து தீபாராதனை காட்டிப் பிரசாதம் தந்தார் குருக்கள். எல்லாக் கோவில்களிலும் நித்ய பூஜைகள் நன்றாக நடப்பதும், பெரியவர்கள் சிரத்தையோடு கவனித்து வருவதும் ஊருக்கே பெருமை சேர்க்கிறது.

புகைப்படங்கள்: பட்டாபிராமன்

அருள்வாக்கு

ஒரு தேசத்தின் பண்புக்கு அளவுகோல் எது? ஒரு நாடு என்று இருந்தால் அதில் எல்லோரும் பண்பாளராக (Cultured) இருக்க முடியாது. திருடன், பொய்யன், மோசக்காரன் எல்லோரும் இருக்கத்தான் செய்வார்கள். இப்படிப்பட்டவர்கள் இருந்தாலும், 'இந்தத் தேசத்தில் பண்பு இருக்கிறது. கெடுதலானவர்கள் இருந்தாலும் கூட இந்த நாடு பிழைத்துப் போகும்' என்று தெரிந்து கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும்? ஒரு நோயாளிக்குப் பல கோளாறு இருந்தாலும் டாக்டர் இதயத்தைச் சோதனை செய்து பார்த்துவிட்டு, 'இருதயம் நன்றாக இருக்கிறது. ஆகவே பயமில்லை' என்கிறார் அல்லவா? அது போல் ஒரு தேசத்தில் கோளாறுகள் இருந்தாலும் அதன் பண்பாட்டை உரைத்துப் பார்க்க ஓர் இருதய ஸ்தானம் இருக்கிறதா?

இருக்கிறது. ஒரு தேசத்தின் பண்பு உயர்ந்திருக்கிறது. மனோபாவங்கள் உயர்ந்திருக்கின்றன. அங்கங்கே அழுக்குகள் இருந்தாலும் மொத்தத்தில் அது சுத்தமாக இருக்கிறது என்பதை உரைத்துப் பார்ப்பதற்கு அந்த தேசத்து மகா கவிகளின் (இலக்கிய கர்த்தாக்களின்) வாக்கே ஆதாரமாகும். ஒரு தேசத்தின் பண்புக்கு இதயமாக அல்லது உரைகல்லாக இருப்பது அந்த நாட்டு மகா கவிகளின் வாக்குத்தான்.

— ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்



டெபாஸிட்டர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

3



தீபாவளி போனஸ்!

ஸ்ரீராம் டிரஸ்ட்-அமுதசுரபி அளிக்கும் அரிய வாய்ப்பு!

போனஸ் 1: • 7 ஆண்டுகளுக்கு தொடர்ந்து அமுதசுரபி தீபாவளி மலர்


போனஸ் 2: • 84 மாதங்களுக்கு தொடர்ந்து அமுதசுரபி மாத இதழ்

போனஸ் 3: • 6 பிரபல தென்னகத்* திருத்தலங்களின் பலவண்ண, தெய்வத் திரு உருவங்கள்.
('சில்பி' வரைந்தது)

நீங்கள் ரூ. 1000 டெபாஸிட் செய்யுங்கள்.
7 ஆண்டுகளில் ரூ. 2000ஆக திருப்பித் தருகிறோம்.
அத்துடன் மேற்கண்ட எல்லா அன்பளிப்புகளும் உங்களை அடையும்.

அயல்நாட்டு அன்பர்கள் ரூ. 2000 டெபாஸிட் செய்தால் ரூ. 4000ஆக திரும்பப் பெறலாம். அவர்களுக்கு கப்பல் தபால் மூலம் அன்பளிப்புகள் அனுப்பப்படும்.

*1. ஸ்ரீ குருவாயூரப்பன் 2. திருப்பரங்குன்றம் ஸ்ரீமுருகன் 3. பத்ராசலம் ஸ்ரீராமர் 4. தஞ்சை ஸ்ரீ பங்காரு காமாட்சி 5. சங்கரன் கோவில் ஸ்ரீ கோமதி அம்மன் 5. திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மன்.



மேலும் முழு விபரங்களுக்கு:

ஸ்ரீராம் டிரஸ்ட்
123, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை 600 001

ADWAVE/ST AS/2145


இமாலயன்
சூப்பர் பம்பர்
(இமாசல பிரதேச லாட்டரி)
முதற் பரிசு ரூ.
2 கோடியே
2 லட்சம்
இரண்டாம் பரிசு ரூ. 25 லட்சம்
மூன்றும் பரிசு ரூ. 10 லட்சம்
நான்காம் பரிசுகள் 30 ரூ. 1 லட்சம் வீதம்
மற்றும் பல பல "ஹிமாலய" பரிசுகள்
குலுக்கல் நாள் 8-11-83
164-வது குலுக்கல் நாள்
டிக்கட்டின் விலை
ரூ. 10 மட்டும்

இரண்டாவது டெஸ்ட்

மூன்றாவது அணியை மறக்கலாமா?



○ வாஸிம்ராஜா

நிர்ஜனையாக ஆரம்பித்து மியாவ் என முடிந்தது ஜலந்தரில் இரண்டாவது டெஸ்ட். டாஸ் வென்ற கபில்தேவ், பாகிஸ்தானை மட்டை பிடித்து ஆடச் செய்தது சரியே என்பது அன்று மாலைக்குள் ஏழு விக்கெட்கள் சரிந்தபோது நிரூபணமாயிற்று. இதில் நாலு விக்கெட்டுகள் கபில்தேவுடையவை. இன் ஸ்டிங்கையன்லா ஜுரத்திலிருந்து முற்றிலும் மீளாத மியான்தாத் 66 அடித்தது பாராட்டுக்குரியது. இரண்டாம் நாள் வாஸிம் ராஜா ஆபத்தான நிலையில் இருந்த பாக் அணியைத் தமது அபார ஆட்டத் திறனால் காத்துப் பத்திரமான நிலைக்குக் கொண்டு சேர்த்தார். ஸ்கோர் 337. அடுத்து கவாஸ்கரும் அமர்நாத்தும் அவுட் ஆக, இனி ஆட்டத்தில் சூடு பிடிக்கும் என்று தோன்றியபோது மழை மூன்றும் நாள் ஆட்டத்தைப் பாழ்படுத்தியது. அன்றைய தினத்தை ஓய்வு நாளாகக் கருதி மறுநாள் ஓய்வு தினத்தன்று ஆடலாம் என்ற கோரிக்கையை ஜாகிர் அப்பாஸ் மறுதளித்துத் தமது தலைமையிலும் போலர்களிடமும் நம்பிக்கையின்மையைப் புலப்படுத்தினார்.

மறுபடி ஆட்டம் தொடங்கியபோது பாகிஸ்தான் போலர்கள்தான் தங்கள் திறமையை முழுமையாகக் காட்ட முடியாமல் அந்த பிட்ச்சில் திணறினார்கள் என்றால் நமது பாட்ஸ்மன்களோ அழுது வடிந்தார்கள். கபில் தேவிடம் காரணம் கேட்கப்பட்டபோது அவர், ''எப்படியானாலும் மாட்ச் டிரா தான். எனவே நமது பேட்ஸ்மென்கள் அடுத்து வரும் மாட்சுக்கு பிராக்டிஸ் செய்தார்கள்'' என்றார்!

கிரிக்கெட்டில் இரு அணிகள் தவிர மூன்றாவதாகக் காசு கொடுத்து ஆட்டத்தைப் பார்க்க வரும் ரசிகர்கள் அணி என்பதாக ஒன்று இருப்பதை இவர்கள் அடிக்கடி மறந்து போகிறார்கள். ரசிகர்களின் பேராதரவினால்தான் இவர்கள் செல்வச் செழிப்பில் மிதக்கிறார்கள். ரசிகர்கள் கிரிக்கெட் ஆட்டத்தைத்தான் பார்க்க வருகிறார்கள்; பிராக்டிஸ் செய்வதை அல்ல. இதைக் கவனத்தில் கொள்ள வேண்டாமா?

கெய்க்வாட் இரட்டைச் செஞ்சுரி போட்ட போதிலும் அதை எட்டிப் பிடிக்க பிரம்மப் பிரயத்தனம் செய்தார். 672 நிமிஷங்கள் எடுத்துக் கொண்டார். ஒப்புநோக்குகையில் வாஸிம் ராஜாவின் 125 அற்புதமான முயற்சி. சுறுசுறுப்புடன் போலிங்கைத் தாக்கி ரசிகர்களை மகிழ்வித்தார். தமது அணியை ஓர் இக்கட்டில் காப்பாற்றிய மாவீரரானார். தொடர்ந்து அவரது லெக் பிரேக்குகளும் கூக்ளிகளும் 50 ரன்களை கொடுத்து நாலு விக்கெட்டுகளை வீழ்த்தின. வாஸிம் ராஜா மேன் ஆஃப் தி மேட்சாகப் பெருமை யுற்றதில் வியப்பில்லை.

-பி. என். சுந்தரேசன்

தமிழ் வடிவம்: குட்டி கிருஷ்ணன்

படங்கள்: பாலாஜி

○ கெய்க்வாட்





பரவசமூட்டும் பல்வகை
வண்ணங்களில்...
அழகிய கலைமணம் கமழும் பட்டு,
பருத்தி, ரெடிமேட் ஆடைகள்
20% தீபாவளி
சிறப்புத் தள்ளுபடியுடன்!
அக்டோபர் 10 முதல்
ஹேண்ட்லூம் ஹவுஸ்
7, ரத்தன் பஜார், சென்னை-3.
• ஞாயிறும் திறந்திருக்கும்
மற்றும் கோயம்புத்தூர்
27/28, திவான் பகதூர் ரோட்,
ஆர்.எஸ். புரத்தில்
எமது ஷோருமிலும்
இச்சலுகை உண்டு!
ADWAVE/HH/2454



''நேற்று எனது மதுக் கோப்பையில் எறும்பு விழுந்து விட்டது. எடுத்துப் போட்டு விட்டேன். காலையில் கூட ஒரு பூச்சி விழுந்து விட்டது. எடுத் தெறிந்து விட்டேன். கோப்பையில் புதிய மதுவை ஊற்றினேன். இப் போது நானேஅதில் விழுந்து விட்டேன். நான் என்ன செய்வேன்?''

எழுதியவர்:
கேரளக் கவிஞர் வயலார் ராமவர்மா
தகவல்: இரா. பொன்னுண்டான்
பி.எஸ்ஸி., இயற்பியல் 2ம் ஆண்டு
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி,
தேவகோட்டை.



இ. ஸ்ரீ திருவேங்கடம்,
பி. எஸ்.ஸி இறுதியாண்டு.,
எஸ். வி. கலைக் கல்லூரி, திருப்பதி

மாணவர் பக்கம்

இதயமே....!
மெதுவாய்.....
மெதுவாய்த் துடி!
அவளைக் கண்டதும்
ஆனந்தம் எனக்கும்தான்.
ஆனால்....
உள்ளிருக்கும் அவனுக்கு
அடிபடுமென உனக்குத் தெரியவில்லையே!
இதயமே....!
மெதுவாய்.....
மெதுவாய்த் துடி!

—ம. ஸ்ரீதரன்
பி.எஸ்ஸி. வேதியியல் (முதலாம் ஆண்டு) ஏ. எம். ஜெயின் கல்லூரி,
மீனம்பாக்கம்



பட்ஜெட் துண்டுகளைப்
பார்த்துப் பார்த்தே
எங்கள் இதயங்கள்
இரும்பாகி விட்டன...

அழுக்கின்ற அளவுக்கு
ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும்
எங்கள் மனங்களில்—
சகாராவின் பாதிப்பு
சற்றே அதிகம்தான்.....

ஒருமுறை கோட்டைத் தாண்டி
சீதை அடைந்த துன்பம்
எங்களுக்குத் தெரியும்
அதனால்தான்—
நாங்கள்
'வறுமைக் கோட்டை'
என்றுமே தாண்டுவதில்லை....

-ப. சுந்தரமூர்த்தி
பி. எஸ்.ஸி., வேதியியல் பிரிவு,
இரண்டாம் ஆண்டு,
பச்சையப்பன் ஆடவர் கல்லூரி,
காஞ்சிபுரம்-3.



அண்ணாயிசத்துக்குப் பதினைந்து லட்சமாமே?

○ டி. வி. பாலகிருஷ்ணன். நக்கலே ★

? ஒதுக்கீடு என்று சொல்லித் திறமையை ஒதுக்கி விட்டால் நாடு பின்னோக்கிப் போகும் அபாயம் ஏற்படாதா?

! இந்த அபாயத்தைப் பற்றிப் பல முறை எச்சரித்தாகி விட்டது. இப்போது அதை விடப் பெரிய அபாயம் நாட்டுக்குத் தோன்றியுள்ளது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு மட்டும் போதாதென்று தாழ்த்தப்பட்டவர்கள் எளிதில் பட்டங்கள் பெற வேண்டும்என்பதற்காக கல்வியின் தரத்தையே குறைக்க வேண்டும் என்று தீவிர முயற்சி நடக்கிறது. ஐ.ஐ.டி. பட்டமளிப்பு விழாவில் இந்த அதிர்ச்சி தரும் செய்தியை வெளியிட்டிருக்கிறார் இந்திரேசன்.

○ எஸ். சம்பத்குமார், சென்னை-5

? வோட்டுப் போடுவதற்கு மட்டும்தான் மக்களா?

! இல்லையே! அதன் பின் விளைவுகளை அனுபவிப்பவர்களும் மக்கள்தான்.

○ என். சக்திவேல், பழனி

? சமீபத்தில் உங்களைத் திகைக்க வைத்த செய்தி எது?

! அமெரிக்காவில் ஒருவர் 156 பேரைக் கொலை செய்து 'ரிகார்ட்' ஏற்படுத்தியிருக்கிறார் என்ற செய்தி அளித்த திகைப்பை விட, இத்தனை கொலைகளைச் செய்த பிறகுதானே அவரை அமெரிக்கப் போலீஸார் கண்டுபிடித்துச் சிறைப்படுத்த முடிந்தது என்ற எண்ணம் அதிகமான பிரமிப்பை ஏற்படுத்தியது.

○ லட்சுமி செங்குட்டுவன், வேலூர் (சேலம்)

? ராணுவ உடையில் வந்து ஜெயிலை உடைத்து விடுதலைப் புலிகளைக் காப்பாற்றிய எனதருமை உடன்பிறப்புக்களின் வீரத்தைப் படித்தபோது எனக்கு உடம்பு புல்லரித்து விட்டது. உங்களுக்கு?

! புல்லரிப்பைத் தொடர்ந்து கவலையும் ஏற்பட்டது-பின் விளைவுகளை எண்ணி.

○ நெல்லை கவாதி, சென்னை-33

? எதை நினைத்தால் எரிச்சலாக இருக்கிறது?

! மருத்துவக் கல்லூரிகளில் டாக்டர்களின் பட்ட மேற்படிப்புக்கு மாணவர்களை அனுமதிக்கின்ற தேர்வுக் கமிட்டி தன் பணியை நிறைவேற்றி இரண்டு மாதங்களுக்குப் பிறகு தமிழக அரசு, பட்ட மேற்படிப்புக்கான இடங்களை அதிகரித்திருப்பதாகவும் புதிய இருபது இடங்களுக்கு இன்னின்னாரைத் தேர்ந்தெடுத்திருப்பதாகவும் கூறி ஒரு பட்டியலையும் கல்லூரிகளுக்கு அனுப்பியுள்ளது. தேர்வுக் கமிட்டி தன் பணியைத் தொடங்கு முன்னரே இருபது இடங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதைக் கூறுதலும், தேர்வுக் கமிட்டியைப் புறக்கணித்து, அரசே இருபது பேர்களைத் தேர்ந்தெடுத்திருப்பதும் எரிச்சலூட்டும் அதிகார துஷ்பிரயோகங்கள். வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டப் பட்டிருப்பதாக நம்ப நிச்சயம் இடமிருக்கிறது. அரசின் ஒவ்வொரு செயலையும் எதிர்த்து மக்கள் நீதிமன்றத்துக்குப் போய்க் கொண்டிருக்கமுடியாது. ஆட்சியிலுள்ளோர் நியாய உணர்வோடு நடந்தால்தான் உண்டு.

○ வி. நாகராஜன், ஈரோடு

? நமது ஆதரவு இல்லாத பட்சம் ஈழத் தமிழர்கள் சாத்வீக முறையில் தனி நாடு பெற முடியுமா?

! தனிநாடு கோரிக்கை, வன்முறை இரண்டும் கைவிடப்பட வேண்டும். சிங்களவருடன் சம உரிமைகள் சகல விதத்திலும் பெற சாத்வீக முறையில் போராட வேண்டும். அப்போது இந்தியாவின் ஆதரவு மட்டுமல்ல, உலக நாடுகள் அனைத்தின் ஆதரவையும் பெறுவது சாத்தியமே.



○ இந்திரேசன்

○ கோயா



சாத்வீக முறை பயனளிக்காது என்று கருதுவதற்கில்லை. காந்திஜிக்குப் பிறகு அமெரிக்காவில் மார்ட்டின் லூதர் கிங் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறார்; வலேசாவுக்கு நோபெல் பரிசே கிடைத்திருக்கிறது.

○ பி.வி.எஸ். வாசன், சென்னை

? குதிரையே பொய்க் குதிரை என்னும்போது காலை மட்டும் பொய்க் கால் என்பானேன்?

! குதிரைப் பொம்மைக்கு மானுடர் கால் இருப்பது பொய் என்பதால். நியாயமாகப் பொம்மைக் கால்தானே இருக்க வேண்டும்!

○ கி. பி. ராஜு, கல்பாக்கம்

? அண்ணாயிசத்தை அமல்படுத்த 15 லட்சம் ரூபாய் மக்களிடம் வசூல் செய்யப் போகிறாராமே எம்.ஜி.ஆர்.?

! அண்ணாவின் இலக்கிய, அரசியல் ஆற்றல்களை ஆய்வு செய்யப் பல்கலைக்கழகம் முன்வருவதில் தவறில்லை. ஆனால் 'அண்ணா

நீங்கள் கேட்டவை

தராசு

விலை' என்ற கருத்து எம். ஜி. ஆரின் கற்பனையிலன்றி வேறெங்குமில்லை. இதற்கு மக்களின் வரிப் பணத்தைப் பயன்படுத்துவதைக் காட்டிலும் வசூல் செய்து அளிப்பதே மேல். ஆட்சேபிக்க அதிகம் இடம் தராது.

○ வி. லலிதா, புதுக்கோட்டை

? இரண்டாவது ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் பந்தயத்திலும் இந்தியா வெற்றி பெற்று விட்டதே?

! மகிழ்ச்சிதான் என்றாலும் வெற்றி ஷாட் சந்தீப் பாட்டீல் கரத்தாலேயே அடிக்கப்பட்டிருந்தால் ஓஹோ என்று இருந்திருக்கும். ஒரு சிக்ஸரில் மெய் சிலிர்க்க வைத்தவர் அடுத்த சிக்ஸர் முயற்சியில் ஆட்டம் இழந்தது என்னவோ போலிருந்தது. போங்கள்.

○ ஆ. சந்திரசேகரன், லால்குடி

? சமீப கால அரசியல் விநோதமென்று எதைக் கருதுகிறீர்கள்?

! பெட்ரோல் விலை எக்கச் சக்கமாக ஏறிய பிறகு, கார், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் ஆகியவற்றை விட மொபெட்களுக்குத் தான் ஏக கிராக்கி. தனியார் துறையில் பல நிறுவனங்கள் (ஹீரோ, டி.வி.எஸ்-50, கைனெடிக்) சக்கைப் போடு போடுகின்றன. ஆனால் நமது தமிழக அரசின் டான்ஸி மொபெட் நிறுவனமோ ரூ.127.86 லட்சம் நஷ்டம் அடைந்துள்ளது — இது வரை. இது முதலீட்டில் 257 சதவீதமாகும்! 50,000 சதுர அடி தொழிலகக் கட்டிடம் அம்போ என்று கிடக்கிறது.

○ சந்தீப் பாட்டீல்





○ ஜெமினி

○ அ. ராஜா ரஹ்மான், சித்தமபாளையம்

? நடிகைகள்தான் தற்கொலை செய்துகொள்ள முயல்கிறார்கள் என்றால் நடிகருமா (ஜெமினி)?

! அவர் வாக்குமூலம் யதேச்சையாக நடந்த விபத்து என்று தெளிவாகக் கூறினாலும், பல உண்மைகள்வெளிப்படப் போவதே இல்லை. அது பற்றிய வாதங்களும் வதந்திகளும் மக்களிடம்நிறையவே அடிபடுவது இயல்பு. (1) விபத்தினால் ஒரு குண்டு பாயலாம், மூன்று? (2) முதல் நாள் இரவு குடித்திருந்ததால் மறுநாள் காலை துப்பாக்கி வெடித்தபோது போதையிலிருந்ததாகக் கூறுகிறார். அந்த அளவுக்குக் குடிக்க வைத்தது எது? எப்படியோ அவர் உயிர் தப்பி உடல் தேறி வருவதால் மகிழ்ச்சியே. கட்டுப்பாடற்ற காதல் மன்னன் வாழ்க்கை யினாலும் குடிப் பழக்கத்தாலும் ஏற்படும் துன்பங்களை நாம் உணர்ந்தால் சரி.

○ ஆர். டி. பாரத்மணி, இராசிபுரம்

? பழி பாவம் என்று எதை எண்ணுகிறீர்கள்?

! நான் ஒரு எம். பி.யாக இருந்து, எனக்கு புதுதில்லியில் அரசாங்க வீடு ஒதுக்கப்பட்டால் அதன் ஒரு பகுதியை வாடகைக்கு விடுவது பழி பாவம் என்று கருதுவேன். அப்படி வாடகைக்கு எடுத்துக் கொண்டவர் அங்கு வீணு என்ற இளம் பெண்ணை ஏமாற்றி அழைத்து வந்து கற்பழித்தால் அதுவும் எனக்கே பழி பாவம் என்று அஞ்சித் துடிப்பேன், தூக்கு மாட்டிக் கொண்டு சாவேன், அவமானம் தாங்காமல். ஆனால் இ. காங்கிரஸ். எம். பி. உயர்திருவாளர் கோஜுவில் பழி, பாவம், அவமானம் போன்ற எதற்கும் அஞ்சுவதாகத் தெரியவில்லையே!

○ ஏ. சிவமுருகேசன், சின்னமனூர்

? முகம்மது கோயா திடீரென்று மரணமடைந்து விட்டாரே!

! ஹைதராபாத்துக்கு வந்த இடத்தில் கடமை வீரராக மடிந்தார். இரவு படுக்கப் போனவர் பிறகு கண் விழிக்கவே இல்லை! அதிசயிக்கத் தக்க தலைவராகவே வாழ்ந்தவர். மரணத்தின்போதும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டார். நல்ல நகைச்சுவையாளர். கடைசியாக வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒரு 'டைம் பாம்' என்று வர்ணித்து மத்தியக் கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குப் போயிருப்போரெல்லாம் திரும்பி வந்தால் என்ன நடக்கும் என்று கேட்டு அவையோரைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார். கேரளாவில் எந்த அமைச்சரவையானாலும் அவரில்லாமல் ஆகாது என்ற அளவுக்கு முஸ்லிம் லீகைப் பலப்படுத்தியவர். அவர் கல்வி அமைச்சராயிருந்தபோது ஸ்தாபிதமான கோழிக்கோடு பல்கலைக் கழகம் என்றும் அவரை நினைவுறுத்திக் கொண்டிருக்கும்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

டி.வி. பாலகிருஷ்ணன்,
மே/பா., பி. சோமசுந்தரம்,
மாவட்ட முன்சீப்,
தக்கலை, கன்னியாகுமரி மா.வ.



ஒரு இந்தியக் கனவு

எங்கோ ஒரு மூலையில் இருக்கும் ஜவந்தி மலை. அங்கேயுள்ள ஆதிவாசிகள். சென்னையிலிருந்து அவர்களின் 'நாகரிகம்' பற்றி அறியப் புறப்பட்டு வந்து, மற்ற சமூக வாசிகள் ஆதிவாசிகளை அடிமையாக்கி, அவர்களின் இனப்பெண்களைத் தங்களின் ஆசை இரவுகளுக்குக் கட்டாய நாயகிகளாக்கிக் கொள்கிற 'அநாகரிகம்' பற்றி அறிய வந்தவுடன், விம்மிக் குமுறித் துடிக்கிற 'படித்த' நாயகி. அந்த ஜவந்தி மலையின் கங்கம்மாவுக்கும் நாயகிக்கும் அழகான சிநேகிதம் பூத்துப் போகிறது. அதையும் சாக்கிட்டு அவர்களின் மொத்த முன்னேற்றத்திற்காகப் படிப்பு முடிந்த கையோடு மிச்ச வாழ்க்கையைச் செலவிட மேற்படி ஊருக்கு நாயகி வந்தால் கங்கம்மா செத்துப் போயிருக்கிறாள்! குடைந்து பார்க்கும் போது மந்திரி மகனால் கங்கம்மா மானபங்கப்பட்டதும், அதனால் தற்கொலை செய்து கொண்டதும் தெரிய வருகிறது. அந்த ஆதிவாசிப் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்கப் போராடத் துவங்குகிறாள் நாயகி. அதிகார வர்க்கம் இருக்கிற அத்தனை கோணங்களிலிருந்தும் பிரச்சினையையும், அவளையும் அழுத்தப் பார்க்கிறது. இருப்பினும் தண்ணீரில் அமிழ்த்திய பந்து மாதிரி பிரச்சினை குபுக் குபுக் என மேலெழுந்து; கடைசியில் நீதி நிமிர்கிறது. இது கதை.

சுஹாசினிதான் நாயகி. அத்தனை பற்களும் பிரதானமாய்த் தெரிகிற மாதிரி கண்ணோரங்களில் சுருக்கம் விழ அடிக்கடி சிரிப்பது மட்டும் கொஞ்சம் உறுத்துகிறது. மற்றபடி பூர்ணம் விசுவநாதன், ராமன், ராஜீவ், லலிதா என்று எல்லோருடனும் 'இயல்பாய் நடிப்பது எப்படி?' என்று கட்டுரை எழுத சுஹாசினிக்கும் தகுதி உண்டு.

கேள்வி கேட்கும் முதல் மந்திரியை, மந்திரி மலையப்பர் ஏற்ற இறக்க வசனங்களுடன் சந்தித்து மடக்கிப் போடும் காட்சி; எதிர்க்கட்சித் தலைவர் இடையில் மூக்கை நுழைத்து கண்டன ஊர்வலம்; போராட்டம் என்று எகிறிக் குதிக்கிற காட்சி; மலையப்பர் 'அக்னி'யைத் தம்வசப்படுத்த வெளிநாட்டு டூருக்கு ஏற்பாடு செய்வதாக உபசரிக்கும் காட்சி; 'மாற்றல்'களுக்குப் பயந்து நியாயங்களை மாற்றிக் கொள்கிற இன்ஸ்பெக்டரின் பல்டிக் காட்சி — ஏகப்பட்ட 'கோமல்' ஊசிகள். குத்த வேண்டியவர்களைக் குத்தினால் சரி.

வேறு யாராவது டைரக்டராய் இருந்திருந்தால் மலைஜாதியினரின் பழக்க வழக்கங்களில் சிலுக்கு டான்ஸ் ஒன்றையும் இடைச்செருகலாய்ச் செருகியிருப்பார்கள். கோமலுக்கு அந்த அளவு போதவில்லை.

எம். எஸ். விஸ்வநாதன் இந்த இன்னிங்ஸில் வெளுத்து வாங்குவார் போலிருக்கிறதே. 'ஓடக்கரையில் ஒரு புளிய மரம்' பாடல் அவ்வளவு இனிமை. பாட்டு எழுதிய 'நடிகர்' வாலிக்கும் பாராட்டில் பாதிப் பங்கு நியாயமாய்ப் போய்ச் சேர்ந்தாக வேண்டும்.

ஒரு பிரச்சினைக் கதையைத் தெளிவாய், அழகாய்க் கொடுத்திருக்கிற கோமல்கள் தமிழுக்கு நிறையத் தேவை.

''டீயர் பிராசிக்யூட்டர்! டைரக்டர் திரு. பாஸ்கர் அவர்களை இனி நீங்கள் குறுக்கு விசாரணை செய்யலாம்.''

''பாஸ்கர் அவர்களே, மூளை அறுவைச் சிகிச்சையில் நிபுணரான ஓர் இளம் டாக்டர் தன் மனைவி தவறு செய்து விட்டாள் என்று அறிய வந்தவுடன், அத்தனையையும் உதறிவிட்டுக் காடுமேடு சுற்றி ஒரு சாமியாரிடம் சிஷ்யனாகிப் போகிறார். பிரபல டாக்டர் ஒருவர் காணாமல் போனால் அவரை உடனே தேடிக் கண்டுபிடிக்க முயலாமல் எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று எல்லோரும் விட்டுவிடுவார்கள் என்பதுபோல் சொல்லியிருப்பது போலீஸையும் அரசையும் கேவலப்படுத்துவது போல் அமைந்திருக்கிறது. இது முதல் குற்றச்சாட்டு!''

''டாக்டர் தொழில் வேறு, தனி மனித உணர்வுகள் வேறு. அதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். ... இதில் அரசையும், போலீசையும் சம்பந்தப்படுத்துவது நியாயமல்ல...''

''சரி... ஒப்புக் கொள்கிறேன்.... ஆனால் என்னவோ தன் நண்பனுடன் மனைவி படுத்துத்தான் ஆக வேண்டுமென்று கட்டாயப்படுத்திய மாதிரி பின்னால் அந்த டாக்டர் வருத்தப்படுவது, சொந்த மகளை ரவுடிகள் சூழ்ந்து கலாட்டா செய்கிறபோது மௌன சாமியாராய் நிற்பது - இதையெல்லாம் பார்க்கிறபோது அவர் மூளைக்கே ஒரு ஆபரேஷன் தேவைப்படுகிற மாதிரி தோன்றுகிறதே! அதுதான் போகட்டும்; வேறு ஆடவன் தன்னைத் தொடுவதையே விரும்பாத அந்த மனைவி கற்பிழக்கிற காட்சி சற்றும் பொருத்தமில்லாத கற்பனையாயிருக்கிறதே!''

''அதையெல்லாம் விரிவாகக் காட்டினால் சென்ஸாரில் அனுமதிக்க மாட்டார்கள்!''

''ஹூம்! ஒய். ஜி. மகேந்திரன், ரஜனி சம்பந்தப்பட்ட காமெடி அருவருப்புகளை அனுமதித்த சென்ஸாருக்கு இதைக் கேட்டால் சந்தோஷமாயிருக்கும்!... கோர்ட் ஸீன் என்று அமெச்சூர்த்தனமாய் வாதங்களை அமைத்திருப்பது எங்களையெல்லாம் அவமானப் படுத்துகிற மாதிரி இருக்கிறது. ஒரு ப்ளேடு, ஒரு ஆணி, ஒரு ஸ்க்ரூ டிரைவர் இதையெல்லாம் வைத்துக் கொண்டே மூளை ஆபரேஷனைச் செய்து விடலாமென்கிற மாதிரி ஒரு காட்சி அமைத்து டாக்டர்களை வேறு கிண்டல் செய்திருக்கிறீர்கள்....''

''அப்ஜெக்ஷன் யுவர் ஆனர். பிராஸிக்யூட்டர் என் கட்சிக்காரரைக் குழப்ப முயல்கிறார்.''

''மன்னிக்க வேண்டும் யுவர் ஆனர். இடைவேளைக்கப்புறம் என்ன செய்வது என்று புரியாமல் தானும் குழம்பி நம்மையும் குழப்புகிற பாஸ்கர் அவர்களை மேலும் குழப்புவது என் நோக்கமல்ல!''

''மிஸ்டர் பாஸ்கர், நீங்கள் வேறு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?''

''ஒரு சினிமாவை சினிமாவாகப் பார்க்க வேண்டும் என்பதுதான் என் கோரிக்கை!''

''சிவகுமாரின் அபார ஆற்றல், 'தற்கொலைத் திலகம்' லக்ஷ்மியின் திறமை ஆகிய இரும்புத் தூண்களை நம்பி, சரியாகத் திட்டமிடாமல் மண்மாளிகை கட்ட முயன்றது டைரக்டரின் தவறு என்று தீர்ப்பளிக்கப்படுகிறது!''

- ஜெயமன்மதன்



இதோ! நானும் வந்துவிட்டேன்!

● அ. இ. மு. க.வைச் சேர்ந்த எல்லா அமைச்சர்களும் கறுப்புச் சட்டை அணிந்து கொள்வதாகத்தான் நாமெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். தவறு. சமீபத்தில் வாணி மகாலில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு டீப் ப்ரௌன் நிறச் சட்டை அணிந்து வந்திருந்தார் அமைச்சர் பொன்னையன்!


○ சுரதா

○ பொன்னையன்


● கல்கத்தா தமிழ்ச் சங்கத்தின் ப. ந. தியாகராஜனுக்குப் பாரதி இளைஞர் சங்கத்தின் பாராட்டு விழா. விழாவில் ''கல்கத்தா பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை உருவாக்கத் தியாகராஜன் முயற்சி செய்ய வேண்டும்'' என்று மாநிலக் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் கேட்டுக் கொண்டார். இதில் வேடிக்கை என்னவெனில், கல்கத்தா பல்கலைக் கழகத்தில் ஏற்கெனவே தமிழ்த் துறை இருக்கிறது! அதன் தற்போதைய தலைவர் திருமதி ரங்கநாயகி மஹோபத்ரா.

● 'ரத்தம் சரணம் கச்சாமி' கவிதை நூல் வெளியீட்டு விழா. பேசிக் கொண்டிருந்த கவிஞர் சுரதா, திடீரென, ''இதோ! நானும் வந்து விட்டேன்!'' என்றதும் கூடியிருந்தவர்களுக்கு ஒரே வியப்பு. பிறகுதான் புரிந்தது—அவர் இப்படிக் கூறியது, விடை பெற்றுச் சென்று கொண்டிருந்த வலம்புரி ஜான், ஔவை நடராஜன் இருவரிடமும்தான் என்பது!

● சீனிவாச சாஸ்திரி ஹாலில் இலங்கை சம்பவங்கள் தொடர்பாக நடந்த கூட்டத்தில் தமிழ்க் குடி மக்களுக்கு ஒரு புதுப் பட்டம் கிடைத்தது. பட்டம்: ''சோமாரித் தமிழர்கள்''. கொடுத்தவர்: ஜெயகாந்தன்.

○ ஜெயகாந்தன்


● 'மணிக்கொடி பொன்விழா'வுக்கு ஏற்பாடு செய்யப் பூர்வாங்கக் கூட்டம். விழாவில் கேட்ட உரையாடல் ஒன்று:

''மணிக்கொடியை உங்களுக்குத் தெரியுமா?''

''ஏன் தெரியாது? தாயின் மணிக்கொடி தானே!''


○ தியாகராஜன்

''ஆமாம், அது பாரதி பாட்டுத்தானே!''

''சந்தேகமென்ன? அதுக்குத்தான் பொன் விழா!''

''அதெப்படி? பாடினவருக்கே நூற்றாண்டு கொண்டாடியாச்சு! அவர் பாட்டுக்குப் பொன் விழாவா? ஒண்ணும் புரியலையே!''

-சின்னக் கொலம்புஸ்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran

கேட்பரிஸ்
சாக்லேட்டுகள்



5 ஸ்டார் கையில் இருக்கையிலே...
உங்கள் காரியம் கைகூடிடுமே

நடக்கையிலே, பேசிச் சிரிக்கையிலே, மகிழ்ச்சியிலே திளைக்கையிலே, சிறிது பசிக்கையிலே சாப்பிடுங்கள் 5 ஸ்டார், வழங்கிடுங்கள் 5 ஸ்டார்.,

சுவைமிக்க சாக்கலேட் பார்— வாயிலே நீரூறும்.

சுவை நலம் தரும் 5 ஸ்டார்.

வார்த்தைகளால் சொல்ல முடியாததை
நேர்த்தியாகச் சொல்வது.

OBM/1841/TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

பார்லே

கரை கடந்தது அம்மா உங்கள் கவனிப்பு.

மழலையாய் அன்றுநீ பாப்பாவாய் ஆகின்றீர்...





நாடித் தேர்ந்-தெடுத்தீர் பாப்பாவுக்கு நலமான பிஸ்கட்.

சுவைமிக்கது பார்லே க்ளுகோ, கரகரப்-பானது. உங்கள் பாப்பாவின் ஊட்டத் தேவைகளுக்கு உரித்தான பிஸ்கட். சுகாதாரமிக்கதாய் இதனைப் படைப்போர்: இந்தியாவிலேயே அதிநவீன பிஸ்கட் தயாரிப்பாளர்கள்; தரத்திற்கு உலக விருதுகளை வென்றவர்கள். பாப்பாவுக்கு உங்கள் பாசத்தை உணர்த்த இதனிலும் மிஞ்சியது ஏதுமில்லை பார்லே... பார்லே க்ளுகோ.

உலகத் தேர்வில் விருது வென்றது

பார்லே
க்ளுகோ

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தைப் பராமரிப்பு பிஸ்கட்.

everest/82/PP/417-tm